Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET, COLOMBO—12.




மெய்யென்பேர்க் ஆட்டுப்பால் மா

இருமல், காசம் தொய்வு நோய் மூல வியாதி மற்றும் பலவீனம் முதலானவற்றிற்கு மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு:
த. கணேசன்,
53, மெயின் வீதி.
கொழும்பு

புத்தகம் 11 ஏவிளம்பி ஹு ஐப்பசி மாதம் 18 திகதி 3-11-57 ஞாயிற்றுக்கிழமை ரபி,ஆகிர் பிறை 10 இதழ் 23

# உடன்படிக்கை அமுலாகும் வரை எதிர்ப்பைத் தளர்த்தக் கூடாது

## மணியோடருக்கு பணம் கொடுக்க முடியாமல் திண்டாட்டம்

## திகதி முத்திரை சிங்களத்தில் இருப்பதன் விளைவு இது

### தமிழ்ப் பகுதி தபால் நிலைய அதிபர் கருத்து

(சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணம்—

சிங்கள மொழியைப் புகுத்துவதில் தபால் இலாகா கையாண்டு வரும் தீவிரமான செயலொன்று தமிழ்ப் பகுதிகளில் உள்ள தபாற் கந்தோர் அதிபர்களைத் திக்கு முக்காடச் செய்துள்ளது. சிங்கள மொழியில் மட்டும் அச்சிட்ட பத்திரங்களை முன்னர் யாழ்ப்பாணம் முதலான பகுதிகளிலுள்ள தபால், தந்தி நிலையங்களுக்கு வலுக்கட்டாயமாகப் புகுத்தி பின்னர் எதிர்ப்புக் காரணமாக அவற்றைத் திருப்பிப் பெற்றுக் கொண்ட மேற்படி இலாகா இப்போது திகதி முத்திரைகளையெல்லாம் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மாற்றி வருவதாகத் தெரிகிறது.

தென்னிலங்கையில் உள்ள சில தபாற் கந்தோர்கள் சிங்களத் திகதி முத்திரையை மட்டுமே பாவிக்க முற்பட்டுள்ளனவென்பது சமீபநாட்களாக அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் கடிதங்கள் மூலமாக வெளியாகியுள்ளது. தபால் உறைகளில் சிங்களத் திகதி முத்திரைகள் குத்தப்படுவது ஒருபுறமிருக்க மணியோடர், போஸ்டல் ஓடர் முதலானவற்றிலும் அந்த முத்திரை பொறிக்கப்படுவதுதான் தபால் நிலைய அதிபர்களைச் சிரமத்துக் குள்ளாக்கி விட்டது. அவற்றுக்குப் பணம் மாற்றிக் கொடுக்கும்போது எந்தத் தபால் நிலையத்திலிருந்து அவை வந்தவையென்பதைச் சிங்கள மொழி தெரியாத தபால் நிலைய அதிகாரிகள் அறிய மாட்டாதவர்களாகத் திகைக்கின்றனர்.

#### தபால் நிலைய அதிபர் சிரமம்

சில தினங்களுக்கு முன்

(9-ம் பக்கம் பார்க்க)



குடைகளில் சிறந்தது

## மான் மார்க் குடைகளே

இப்போது பெய்யும் பெருமழைக்கு உத்தரவாதத்துடன் பாதுகாப்பளித்து நீடித்த உழைப்பையும் நிகரற்ற சேவையையும் தருபவை மான் மார்க் குடைகளே!

எல்லோரும் மான் மார்க் குடைகளையே விரும்பி வாங்குகிறார்கள்.

மெக்கி ஸ்டோர்ஸ்,
265, மெயின் வீதி, கொழும்பு.

டெலிபோன்: 41737

## 'இனியேனும் சிங்களம் படிக்கலாமா?' என்றுகேட்டவர்களுக்குஎஸ்.ஜே.வி. பதில்

### அவசரப்படுவதனால் கிடைக்கும் ஆதாயத்தைவிட பொறுத்திருப்பதனால் அதிகம் பலன் உண்டு

(சுதந்திரன் நிருபர்)

"சமரஸ உடன்படிக்கையொன்று ஏற்பட்டுவிட்டதால், இனியேனும் தமிழ் பேசும் பிள்ளைகள் பாடசாலைகளில் சிங்களத்தை ஒரு பாடமாகப் படிக்கலாமா என்று சில பெற்றோர்கள் கேட்கிறார்கள். தமிழ்-ஆங்கிலப் பாடசாலைகளில் சிங்கள வகுப்புகள் நடத்தலாமா என்று பாடசாலை அதிபர்களில் சிலர் அறிய விரும்புகிறார்கள். சிங்களப் பரீட்சை எழுதலாமா என்று அரசாங்க ஊழியர்களும் விசாரிக்கிறார்கள். எனவே இந்தக் காத்திரமான சந்தேகத்திற்குத் தமிழரசுக் கட்சியின் விடையென்ன? தற்சமயம் கட்சியின் கொள்கையென்ன? என்பனவற்றை விளக்க வேண்டியது என் கடமையாகும்" என்று தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் சுதந்திரன் நிருபருக்களித்த ஒரு பேட்டியின்போது கூறினார்.

திரு செல்வநாயகம் தொடர்ந்து கூறியதாவது:- "சிங்களம் மட்டும் கொள்கைக்கு நாடு முழுவதிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் மனப்பூர்வமாகக் காட்டிய ஏகோபித்த எதிர்ப்புத்தான் சிங்கள அரசாங்கத்தை ஓரளவு பணிய வைத்து மொழிப் பிரச்னையில் ஒரு உடன்படிக்கைக்கு வரும்படியாகச் செய்தது. ஆயினும் உடன்படிக்கை இன்னும் பரிபூரணத்துவம் அடைந்துவிடவில்லை. உடன்படிக்கையின் சரத்துக்கள் சட்டமாக்கப்பட்டு அமுல் நடத்தப்பட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. இந்தத் திசையில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வண்ணம் தமிழரசுக் கட்சி தூண்டிக்கொண்டிருக்கிறது.

"உடன்படிக்கை தமிழ் பேசும் மக்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் அமுல் செய்யப்படும்வரை அவர்கள் தங்கள் எதிர்ப்பைத் தளர்த்தக்கூடாது. உடன்படிக்கை கைச்சாத்தாகு முன் நாட்டில் எந்த நிலைமை நிலவி வந்ததோ அந்த நிலைமைதான் மொழிச் சட்டம், பிரதேச சபைச் சட்டம் ஆகியவை ஆக்கப்பட்டு அமுல் செய்யப்படும்வரை தொடர்ந்து நிலவி வர வேண்டும்.

"ஆகையால் சமரஸ உடன்படிக்கை தமிழ் பேசும் மக்களுக்குத் திருப்தியளிக்கும்படி அமுல் செய்யப்படும்வரை அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் கொள்கைக்கு தமிழ் பேசும் மக்கள் காட்டி வரும் எதிர்ப்பையும் ஆட்சேபத்தையும் இம்மியளவும் குறைத்துவிடக் கூடாதென்று தமிழரசுக் கட்சியின் சார்பில் மிகவும் வாஞ்சையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்."



திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

மேற்கண்டவாறு கூறிய திரு. செல்வநாயகம்,

"தமிழ் பேசும் மக்கள் அவசரப்பட்டுத் தங்கள் பிள்ளைகளுக்குச் சிங்களம் படிப்பிப்பதனாலும், தமிழ் ஆங்கிலப் பாடசாலைகள் சிங்கள வகுப்புகள் நடத்துவதனாலும், அரசாங்க ஊழியர்கள் சிங்களப் பரீட்சைகள் எழுதுவதனாலும் தமக்கு ஏற்படக்கூடிய சிறிய ஆதாயத்தையும் நன்மையையும்விட உரிய சட்டங்கள் அமுலாகும்வரை எதிர்ப்பைத் தொடர்ந்து நடத்துவதால் நாட்டிற்கும், இனத்திற்கும், மொழிக்கும் ஏற்படக்கூடிய பலாபலன்கள் அதிகமாகவே இருக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்"

என்றும் தெரிவித்தார்.

திரு செல்வநாயகம் பேட்டியின் முடிவில் மேற்கண்டவாறு ஆசங்கைகளைக் கிளப்பி கட்சியின் கொள்கைகளை அறிய விரும்பிய பெற்றோர்களையும், பாடசாலை அதிபர்களையும், அரசாங்க ஊழியர்களையும் பாராட்டினார்.

"தமிழ் இன, மொழி, பிரதேச உரிமைகளுக்காக அரசியல் துறையில் போராடும் கட்சி தமிழரசுக் கட்சி என்பதை உணர்ந்து, தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கட்சியின் போராட்டத்தைப் பாதித்துவிடாத வண்ணம் கட்சியோடு ஒத்துழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால்தான் இப்படி அவர்கள் எங்களிடம் கேள்விகள் கேட்கிறார்கள் என்பதை நான் அறிவேன். நிலைமையை விளங்கிக்கொள்வதில் அவர்கள் காட்டும் விருப்பத்தையும் நல்லெண்ணத்தையும் நான் பாராட்டுகிறேன்" என்று திரு செல்வநாயகம் கூறினார்.

## ஹைபோனெக்ஸ்
தாவர உணவு




ஹைபோனெக்ஸ் தாவர உணவை உபயோகித்தால் நேர்த்தியாகவும் செழிப்பாகவும், உங்கள் தாவரங்களையும், காய்கறி கனி வகைகளையும் பெறுவீர்கள்.

ஒரு தேக்கரண்டி "ஹைபோனெக்ஸ்" தூளை ஒரு கலன் தண்ணீரில் கரைத்து உங்கள் தாவரங்களுக்கு ஊற்றுங்கள்.

1 அவுன்ஸ் பாக்கட் -/50 சதம்
தபால், பாக்கிங் பிரத்தியேகம்

3 அவுன்ஸ் டின் ரூ. 1/50
தபால், பாக்கிங் பிரத்தியேகம்

லூயிஸ் பிரவுண் & கோ. லிமிட்டெட்,
த. பெ. இல: 85, கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வீட்டுப் பெண்ணும் விரும்பும்
தையல் மெஷின்

"கெயிட் & நியூ"

பக்கங்களுக்கு இயங்கி, அளவற்ற விதமான சித்திரத் தையல், பொத்தான் தையல், வளைவுத் தையல் பூவேலைகள் செய்யும் அதிசய மெஷின்.




இது ஒரு ஜெர்மன் தயாரிப்பு

| | |
|---|---|
| கை மொடல் | ரூபா 375-00. |
| கால் மொடல் | ரூபா 450-00. |
| டெயிலர் மொடல் | ரூபா 475-00. |

சோல் ஏஜண்டுகள்:
டொலர் கார்ப்பரேஷன்,
71, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு.
போன்: 6910.



ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர்:174, செட்டியார் தெரு, கொழும்பு-11



போன்:- 281. தந்தி:- "ஜுவல்லர்ஸ்"

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

உத்தரவாதம் பெற்ற வைரங்கள்!
அழகு மிக்க தங்க ஆபரணங்கள் !!
யாவற்றிற்கும் சிறந்த இடம்
யாழ்ப்பாணம்

தங்கமாளிகை

★ தோற்றத்திலே கவர்ச்சி!
★ உழைப்பிலே புகழ்ச்சி!!
★ தரத்திலே உயர்ச்சி!!!

பெற்று விளங்குபவை

எல். கே. எஸ். நகைகளே.

நிகரற்ற அழகுற்ற எல். கே. எஸ். நகைகளையே என்றென்றும் வாங்குங்கள்.


இலக்கியம்:

# வரைவு கடாவி தலைவனை வழிக்குக் கொணரும் வேலை

## பணிப் பெண்கள் செய்து பெரும்பாலும் வெற்றியீட்டியதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன

## இது அவர்கள் வரம்பு மீறிய செய்கையாகாதா? தொல்காப்பியனார் இதற்கு அளித்த பதில்!

தலைமைப் பண்பு முற்றும் நிரம்பிய நம்பியும், நங்கையும் எதிர்பட்டுக் காதல் கொள்கின்றார்கள். இவர்கள் ஒருவரை ஒருவர் காணும் ஒரே நிகழ்ச்சியினால் உள்ளத்திலுண்டான அன்பு முடிவின்றி வளர்கின்றது. இந்த அன்பின் அணைப்பிலே ஆனந்தம் கண்ட தலைவன் அனுதினமும் அவளைக்கண்டு அளவளாவி, அன்பு மொழி கூறி இன்புற்றுச் செல்ல நினைக்கின்றான். இரவிலும், பகலிலும் இடர்ப்பாடின்றி நடைபெறுகின்றது இவர்கள் சந்திப்பு. ஆனால் இது தோழியின் உள்ளத்தில் அச்சத்தை உண்டாக்குகிறது. 'இவர்களின் களவொழுக்கம்' பிறருக்குப் புலனாகில் யாவருக்கும் இகழ்ச்சியுண்டாகும். உயிரினும் உயர்ந்த நாணமுடையவள் தலைவி. இதனால் தலைவியும் எண்ணிலா இன்னலுக்கு இலக்காக நேரிடும் அல்லவா? எனவேதான் அஞ்சுகிறாள் தோழி. தலைவியின் பெருவாழ்வில் அளவிலா அக்கறை கொண்டவள் அல்லவா அவள். அஞ்சுவதிலும் அச்சம் நீங்க அதற்கொரு வழி வகுப்பதிலும் ஈடுபடல் தோழியின் நற்பண்புக்கு இலக்கணம் அன்றோ! மதிநுட்பமும், மனத்திட்பமும் கொண்ட அம்மங்கை நல்லாள் தலைமகனுக்குத் தகுந்த புத்திமதி கூறுகின்றாள். இவ்வாறு ஒரு பணிப் பெண் ஆடவனை நெருங்கிக் கூறல் தகுமோ என்றால்

"உறுகண் ஓம்பல்
தன்னியல்பாகலின்
உரியதாகும் தோழி கண்
உரனே"

என ஆசிரியர் தொல்காப்பியனார் வழுவமைத்திருக்கின்றார். தலைமகன் தடை பல தடுப்பினும் தயங்காது தன் காதலியை வரைந்து கொள்ள உறுதி கொள்கின்றான். தோழியின் நோக்கம் பயன்தர நாமும் கண்டு களிப்போம்.

### சந்திப்பும் சங்கடமும்

ஒரு நாள் மாலை நேரம் வளர்பிறைச் சந்திரன் வானத்திலே விளையாடிக் கொண்டிருக்கின்றான். கரிய முகிலினிடையே கண்சிமிட்டும் விண்மீன்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடக்கின்றன. அசைந்தாடும் தென்றல் சுகத்தைக் கொடுக்கும் சூழ் நிலையை வரவழைத்துக் கொண்டிருந்தது. தலைவியின் வீட்டுக் கொல்லைப்புறம், வெண்

### மலர்ச்சி மகன்

மணற் பரப்பு. அதில் தலைவியும் தோழியும் விளையாட்டயர்ந்து கொண்டிருக்கிறார்கள்! காதலன் வருவானே கண்குளிரக் காணலாம், இன்னும் காணவில்லையே! காலம் தாழ்த்தக் காரணம் என்னவோ! என்ற ஏக்கம் கன்னிக்கு. கணமும் யுகமாகக் கழியும் போழ்தில் நம்பி வருவான் என்ற நினைவில் நம்பிக்கை யிழந்தவளாய் நாற்புறமும் கண்களைச்சுழல விட்டாள். அங்கோர்புறத்தில் 'காலைஅரும்பிப்பகலெல்லாம் போதாகி மாலை மலரும் காதல் நோய், மனதை வாட்ட சங்கடப்பட்டுக் கொண்டு வருகின்றான் காணலாம் கன்னியை என்ற ஆவலில். கண்டான், காதல் மொழி பேசினான், களிப்புற்றான். திரும்பிச் செல்ல எத்தனித்த போது தோழி எதிர்ப்படுகிறாள். வெட்கத்தால் வேதனையுற்ற அவன் சங்கடப்பட்டுத் தடுமாறுகின்றான். அப்போது தோழியின் கூற்று சந்திப்பிலும் சற்றுச் சங்கடத்தைக் கொடுக்கத்தான் செய்தது. எம் தலைவிக்கும் உனக்கும் உள்ளதாகிய காதல் அலராகி விட்டது. அதனால் அவள் படும் துன்பமோ அளவிடற்கெளிது. எனவே அதினின்றும் அவளை மீட்டுக் காப்பாற்றவேண்டியது உனது கடன்; பலமுறை கூறியும் பராமுகமாயிருக்கின்றாய் என்னும் பொருள் பட:

"கானலம் சிறுகுடிப்
பெருநீர் சேர்ப்ப
மலரேர் உண் கண்
எம் தோழி எவ்வம்
அலர்வாய் நீங்க அருள்வாய்"

என்று கூறுகிறாள். இது கேட்ட தலைமகன் "அதன் பொருட்டுத்தானே இவ்வாறு ஒழுகுகின்றேன்" என உரைக்கின்றான். தோழி வருத்தமுற்று இல்லை, இல்லை உண்மை அன்புடன் எம் தலைவியை நேசிப்பாயாயின் இவ்வாறு காலம் தாழ்த்தக் காரணமேயில்லை. அன்புள்ளவன்போல நடித்து அன்பில்லா அருளாமையே செய்கின்றாய். இவ்வொழுக்கத்தை அயலார் அறிந்திடினும் அப்போதும் இவ்வாறே பொய்ப்பாய் போலும்? அன்றொரு நாள் கடற்கரையிலே, வெண் மணற் பரப்பிலே யாம் விளையாட்டயரும் நேரம் அவ்வண்டல் மண் சிதைய வந்தாய். தலைவியின் புதுநலம் பெற்றுப் பூரிப்படைந்து சென்ற போது செய்த "சூளும்" பொய்யாகுமா? அவ்வாறு பொய்யாயின் ஆராது அலறிக்கொண்டிருக்கும், அலை எறி கடலே சாட்சி பகருவதாக என்று கூறுகின்றாள்;

"தடவு நிலைப்புன்னைத்
தாதணி பெருந்துறை
நடுங்கயிர் போழ்ந்த
கொடுஞ்சி நெடுந்தேர்
வண்டற் பாவை சிதைய
வந்து நீ
தோள் புதிது உண்ட
ஞான்றைத்
சூளும் பொய்யோ!
கடல் அறி கரியே!"
(அகம் 320)

கடல் ஒலி, வீசு தென்றல், குளிர் நிலா, பூஞ்சோலை போன்ற இயற்கை ஏதுக்கள் காதலர் அன்பைப் பெருக்கிக் கடுந் துன்பம் செய்வன என்று நல்லறிஞர் கருதுவர். எனவேதான் புலவர் சாத்தனாரும் அதிலொன்றாகிய அலை எறி கடலை அவன் (தலைவன்) சூள் பொய்ப்பின் அதற்குச் சாட்சியாக அமைக்கின்றார். என்னே! அவர் உள்ளம் இயற்கையின் ஈடுபாட்டில் திளைத்தின்புறுகின்றது.

நேருக்கு நேராகக் கூறினாள் தோழி. நெஞ்சம் இளகியது தலைவனுக்கு. உண்மையை உணர்ந்தான்! உணர்ந்தாலும், ஊரவர் சொல்லும் உதவாப் பழிச் சொல்லுக்குஇலக்காகிவிடாமலும் சிக்கிரமே செயலில் இறங்கவும், தலை மகளைக் காத்தற்குரிய கடமையைப் பூண்டவன் தலைமகன்தான் என்பதையும் உள்ளுறை நயத்தால் உணர்த்தக்கருதுகின்றாள் தோழி.

அலைகடலின் ஆபத்தைப் பொருட்படுத்தாது கடலில் அதிக தூரம் சென்று வய மீன் பிடித்து வருகிறார்கள் பரதர்கள். அவைகளை விற்க வேண்டி வெளியில் கொண்டு போய் அவற்றிற்கு விலைகூறுகின்றார்கள் அவர்களின் செல்வத் தங்கையர்கள். என்று வெளிப்படைப் பொருள்.

காதலனிடத்திலே கொண்ட ஆராத அன்பினால் அல்லலுறும் காதலி துன்பப்படுகின்றாள். பசலை படர்ந்து சோகத்தின் பிரதிபிம்பமாகவே காட்சி தருகின்றாள். இதன் பொருட்டு ஏற்பட்ட மேனி நிற வேறுபாட்டினை குற்றமற்ற மகளிர் எடுத்து ஊரிடத்தே அலர் கூறுகின்றனர் என்பது இதன் உள்ளுறைப்பொருள். உணர்ந்து பார்க்கும் ஆற்றல் அற்றவர்கட்கு இது எளிதில் புலனாகாது. இவ்விரு பொருளும் தொனிக்கவேதான்,

"ஓங்கு திரைப் பரப்பின்
வாங்கு விசைக் கொளிஇத்
திமிலோன் தந்த கடுங்கண்
வயமீன்
தழையணி அல்குல்
செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின்
விலையெனப் பகரும்
கானலம் சிறுகுடிப்
பெருநீர் சேர்ப்ப"

இதைக் கேட்ட தலைவன் ஊரவர் எடுக்கும் அலரையும் அகம் கொண்டாளின் அன்பையும் எண்ணினான். வரைந்துகொள்ளப் பூண்ட உறுதியில் இன்னுமொரு படி முன்னேறுகிறது அவன் உள்ளம்; வரைவு கடாவி வழிக்குக் கொண்டு வந்துவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப. ஜெயம், பருத்தித்துறை

கே: பெண்கள் காதல் வாழ்வில் காயாகப்போவது எப்போது?

ப: குழந்தைப் பேறென்ற கனியில்லாதபோது.

ஃ

செ. காந்திமதி, வத்தளை

கே: குழந்தைகள் இல்லாத குடும்பம் எதை ஒத்தது?

ப: மூலவிக்கிரகம் இல்லாத கோயிலை ஒத்தது.

ஃ

ப. பாஸ்கரன், மட்டக்களப்பு

கே: திருமணம் என்றால் என்ன?

ப: திருமணம் என்பது ஒரு சோகம் நிறைந்த நாவல். அதன் முதல் அத்தியாயத்திலேயே கதாநாயகன் இறந்துவிடுகிறான்.

ஃ

கே. விமலநாதன், கல்முனை

கே: ஒருவன் எத்தனை தடவை கல்யாணம் செய்யலாம்?

ப: ஒரு முறை செய்வது கடமை. இருமுறைசெய்வது மடமை. மும்முறை செய்வது மன்னிக்க முடியாத கிரிமினல் குற்றமாகும்.

ஃ

மு. கணபதி, கொட்டகலை

கே: வாழ்க்கையின் சிறப்பு எதில் தங்கியுள்ளது?

ப: எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதைவிட எப்படி வாழ்ந்தோம் என்பதில்தான் சிறப்புத் தங்கியுள்ளது.

ஃ

க. ஞானேஸ்வரி, அளவெட்டி

கே: குழந்தையின் புன்னகைக்கும் மனைவியின் புன்னகைக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: குழந்தையின் புன்னகை வயிறு நிரம்பியிருக்கிறது என்பதற்கு அறிகுறி. மனைவியின் புன்னகை அவளுக்கு நகைப் பசியோ, ஜவுளிப் பசியோ ஏற்படப் போகிறது என்பதற்கு அபாய அறிவிப்பு.

கே: சீதன வழக்கத்தால் சீரழியும் சமுதாயம், மானமுடன் வாழ வழி கூறுவீரா?

ப: கலைகளுடன் பெண்ணுக்கு உயர் கல்வி அளித்திட்டால் தொலையாதோ சீதனமாம் சீர்கேடு?

கே: பண்டைய பழந்தமிழர் பண்பாடு இன்று எங்கே?

ப: இன்று அது பத்துப்பாட்டு, எட்டுத் தொகை யென்ற இன்னோரன்ன புத்தகங்களுக்குள் அடைக்கப்பட்டு 'பவித்திரமாக இறுகப் பூட்டி வைத்திருங்கள்' என்று பண்டிதர்கள் என்ற காரியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஃ

அ. புத்திசிகாமணி, ஏழாலூர்

கே: சில சைவக் கோயில்களில் இன்னும் உயிர்ப் பலி இடுகின்றார்களே, இதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: உயிர்களைக் கொன்று குவிக்கும் இடம் ஒருபோதும் சைவக் கோயிலாக இருக்க முடியாது. ஒருவேளை சவச்சாலையாக விருக்கலாம்!

கே: கடவுளைப் படைத்தவன் மனிதனா? அல்லது மனிதனைப் படைத்தது கடவுளா?

ப: மனிதனைப் படைத்தவர் கடவுள். ஆனால் கடவுள் என்ற பெயரில் மனிதன் எதையெதையோவெல்லாம் படைத்து முடித்திருக்கிறான்.

ஃ

செல்வி எஸ். பொன்னம்பலம், கொழும்பு.

கே: குயுக்தியாரே, நீங்கள் பெண்கள் பிரேஸியர் அணிவதுபற்றியெல்லாம் எழுதுகிறீர்களே, அது ஆபாஸம் அல்லவா?

ப: இல்லைச் சகோதரி: அப்படியானால், 'கடா அக் களிற்றின் மேற் கட்படா மாதர் படா அ முலைமேற் றுகில்' என்ற குறளை எழுதிய திருவள்ளுவர் என்னை விடப் பெரிய ஆபாஸக்காரராய் இருக்கவேண்டும்.

ஃ

சா. ஏரம்பு, மட்டக்களப்பு

கே: இக்கால போர் வீரர்களுக்கும் அக்காலப் போர் வீரர்களுக்கும் பேதம் என்ன?

ப: இக்காலத்தில் நடப்பது சொற்போர்; அக்காலத்தில் நடைபெற்றது மற்போர். எனவே இக்காலத்து வீரர்களுக்கு வாய் பெரிதாகவும் புஜம் சிறிதாகவும் இருக்கிறது. அக்காலத்தில் புஜம் பெரிதாகவும் வாய் சிறிதாகவும் இருந்தது.

ஃ

என். திருச்செல்வம், வண்ணார்பண்ணை

கே: உலகில் கண்டவர் மயங்கும் பொருள் எது?

ப: புதையல்!

ஃ

க. சுப்பிரமணியம், களபூமி

கே: திரு ஜீ. ஜீ.யின் சிருஷ்டிகளில் மிகக் கொடியது எது? மிகப் பெரியது எது?

ப: மிகக் கொடியது சிங்கக் கொடி. மிகப் பெரியது ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை!

கே: குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் உங்களால் எங்களை அழவைக்கவும் முடியுமா? அப்படியானால் எப்போது அழவைப்பீர்கள்?

ப: நிச்சயமாக முடியும்; குயுக்தியார் காலமானார் என்ற செய்தி வெளியாகும் போது.

ஃ

அ. சிவபாதம், இருபாலை

கே: பெண்கள் முழங்காலுக்கு மேல் சட்டை போடுவது எதற்காக?

ப: சில துஷ்டத்தனம் வாய்ந்த பாடசாலை மாணவர்கள் தங்கள் முகத்தையும் கண்களையும் ஏற இறங்கப் பார்த்து உபத்திரவம் செய்யாமல் காலைப் பார்த்துவிட்டுப் போகட்டும் என்பதற்காக!

ஃ

செல்வி எஸ். சரோஜா, ஆரயம்பதி

கே: பெண்களைப்பற்றிய குயுக்தியாரின் பதில்களைப் படித்துவிட்டுச் சில ஆண்கள் பொறுமைப்படுவதன் காரணம் என்ன?

ப: தங்களால் அப்படிப் பட்ட பதில்களைச் சொல்லித் தங்கள் மனைவியிடமோ காதலியிடமோ சபாஷ் பெற முடியாமல் இருக்கிறதே என்ற கவலைதான் காரணம்.

ஃ

கே. சதாசிவம், கரணவாய் தெற்கு

கே: தேனினும் இனியது எது?

ப: இயேசுவின் நாமம் என்பார் கிறிஸ்தவ பக்தர். காதலியின் அதரபானம் என்பான் கவிஉமர் கயாம். தமிழ் என்பேன் நான்.

ஃ

வெற்றிவேந்தன், நரஹன்பிட்டி

கே: காதல் எங்கே பிறக்கிறது? எங்கே இருக்கிறது? எதனால் இறக்கிறது?

ப: காதல் கண்களிலே பிறக்கிறது. காதலன்னின் பணப் பலத்திலே இருக்கிறது. சந்தேகத்தினால் இறக்கிறது.

# கேட்டுப் பாருங்கள்

## குயுக்தி



ஃ

செல்வி சிவா, ஆரயம்பதி

கே: குயுக்தியாரே, தங்கள் பெண் "நான் காதல் கல்யாணம்தான் செய்துகொள்வேன்" என்று அடம்பிடித்தால் என்ன செய்வீர்கள்?

ப: என்ன செய்வதா, கவலைவிட்டது என்றுமகிழ்ச்சியால் பூரித்துப்போவேன். ஆனால் அவள் காதலன் மட்டும் கண்ணுக்கு அழகாய் இருந்தால் போதாது; பிழைக்கத் தெரிந்தவனாகவும் இருக்க வேண்டும்.

மிஸ்டர் குயுக்தியார்
C/O சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு—12.

ஃ

ஓ. கனகரத்தினம், நற்பிட்டிமுனை

கே: ஒருகாலத்தில் கிருஷ்ணன் ஊதிய புல்லாங்குழலின் இசையில் பட்டமரங்கள் துளிர்த்தனவாமே. இது உண்மையா?

ப: உண்மையாயிருந்தால் அவனுடைய குழலும் துளிர்த்து மூங்கில் மரமாக முளைத்திருக்க வேண்டுமே? அப்படி ஒரு புளுகையும்புராணத்தில் காணவில்லையே.

ஃ

கே. சோமசுந்தரம், பசறை குரூப்

கே: நண்பரே, "நண்பர்" என்ற போர்வையில் எத்தனையோ கள்ளர்களும் உலவுகிறார்கள் என்கிறேன். நீர் என்ன சொல்கிறீர்?

ப: எனக்கு நீர் ஒருவர் இருப்பதே அதை நிரூபிக்கிறதே.

ஃ

ஏ. எஸ். எம். அப்துல் றசாக், காத்தான்குடி

கே: குயுக்தியாரே, உங்களை நான் ஒரு கோழை என்கிறேன். என்ன சொல்கிறீர்?

ப: நான் ஒரு கோழை தான்: சண்டைக்கு அல்ல; தீமை என்று கண்டதைத் துணிந்து செய்வதில் நான் ஒரு கோழைதான்.

ஃ

'ரௌடி', பேலியகொடை

கே: கொதித்துக் குமுறும் எரிமலை, சீறிவரும் சூறுவளி, பாயவரும் வேங்கை, படமெடுத்துத் தீண்டவரும் நாகம், தவழ்ந்துவரும் பெண்ணின் புன்னகை, இவற்றில் எது கெடுதலானது?

ப: ஒன்றுமேயல்ல. ஏனென்றால் இவ்வளவும் அடுக்காக ஒரு தமிழ் சினிமாப் படத்தில்தான் வர முடியும்: எனவே எல்லாம் கமரா ட்ரிக்ஸாகவே இருக்கும்!

ஃ

எம். மகேந்திரராசா, தம்பலகாமம்

கே: குயுக்தி ஐயா, நான் வேலை செய்யும்போதும், படிக்கும்போதும் என்னை ஒருத்தி தொந்தரவு செய்து மயக்குகிறாள். அவள்யாராக இருக்க முடியும்?

ப: நித்திராதேவியாக இருக்கலாம்!

ஃ

வத்சலா, வைரவநாதன், கொழும்பு

கே: பெண்ணால் முடியாதது எது?

ப: தனக்குத் தெரிந்த இரகசியத்தை இன்னொருவருடன் பரிமாறாமல் இருக்க பெண்ணால் ஒருபோதும் முடியாது.

கே: பெண்கள் வெறுப்பது எதை?

ப: தங்கள் வயது வருடத்துக்கொரு முறை ஏறுவதையும், தலை நரைப்பதையும் அவர்கள் அடியோடு வெறுக்கிறார்கள்.


## ஆங்கிலம்
## ENGLISH

தொழில்களில் உயர்வு பெற ஆங்கிலம் என்றும் உதவும். ஆறு மாதங்களில் எழுத - வாசிக்க - பேச விரும்பினால் A. B C. தொடங்கி B. A. வரை கற்பிக்கும் அற்லஸ் ஹோலில் சேருங்கள்.

இலவச விபரங்களுக்கு:

**அற்லஸ்ஹோல்,**
கொழும்பு.
த.பெ. 649 போன்: 9759.



வியாபாரிகளுக்கோர்

# அறிவித்தல்

**கீழ்க்கண்ட சாமான்கள் உங்களுக்குத் தேவையா?**

தேவையெனில் நேரில் பார்த்து வாங்குங்கள்.

- 'ஜுபிலி' கேபிள் & கம்பிகள்
- 'ரெஸ்லா' & 'மெற்றம்' எலக்ட்ரிக் பல்புகள்
- 'சானியோ' றேடியோ பெட்டிகள்
- 'முதலை' மார்க் நோற் பேப்பர்
- 'சக்குரு' ருேள் பிலிம்ஸ்
- 'றைக்கோ fபிளாக்ஸ்' கெமரு
- 'காஸில்' பூட்டுகள்
- 'எனி' (Eni) கத்திச் சாமான்கள்
- 'கே. டி. கே.' விசிறிகள்

# துரை அருள் & கோ.,
லிமிட்டெட்,
93, கெய்ஸர் வீதி, கொழும்பு - 11.
போன்: [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குக்கு முதல் முறையாக தலைமைப் பதவி

## ஆசிரியர் சங்கத்தின் தீர்க்கமான நடவடிக்கை

### முன்பு இருந்த குழப்ப நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்த கண்டிக் கூட்டம்

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் தலைமைப் பதவி முதன் முறையாக வடக்கை விட்டுக் கிழக்கைச் சென்றடைந்திருக்கிறது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திரு. ஏ. மு. கனகசபை பிரஸ்தாப சங்கத்தின் நடப்பு வருடத் தலைவராக சமீபத்தில் கண்டியில் நடந்த 12 வது மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காலங்கடந்து கண்டியில் கூடிய ஆசிரியர் சங்கக் கூட்டத்தைப் பற்றிச் சென்ற வாரச் சுதந்திரனில் வெளியிட்டிருந்த கட்டுரையில், "இம் முறையேனும் தலைமைப் பதவி வடக்கிலிருந்து கிழக்கு நாடுமா?" என்ற ஆசங்கையைக் கிளப்பி அப்படி நடவாவிட்டால் பல விபரீதங்கள் ஏற்படலாம் என்றும், உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டு சங்கமே சீர்குலைந்து சின்னபின்னப்படுவது திண்ணம் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

சுதந்திரன் விடுத்த எச்சரிக்கை சங்க நலனில் கருத்துள்ள ஆசிரியர் குழாத்தால் செவி மடுக்கப்பட்டு செவ்வனே உத்தியோகத்தர் தேர்வுகள் நடத்தப்பட்டிருப்பது சங்கத்துக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதை எடுத்துக்காட்டுகிறது என்பதே பலரின் கருத்துமாகும்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் 12வது மாநாடு கண்டியில் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. நா. தம்பிரத்தினம் தலைமையில் 26-10-57 சனிக்கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாணத்துக்கு வெளியே நடைபெற்ற இந்த முதல் மகாநாட்டுக்கு எல்லா மாகாணங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து மிக உற்சாகத்தோடு கலந்து கொண்டார்கள். அகில இலங்கை (ஆங்கில) ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு ஆசிர்வாதமும், இங்கள சாதிய குரு சங்கமய பொதுக் காரியதரிசி பிற்றர்டிசில்வாவும் மகாநாட்டில் சமுகமளித்திருந்தனர்.

#### தலைவர் உரை

தலைவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"ஆசிரிய சங்கத் தலைமைப் பதவி கிழக்கு மாகாணத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென சில கோடரிக் காம்புகள் முயற்சிக்கிறார்கள்: இவர்கள் சங்கத்தை அழிப்பதற்கே இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். அரசியல் தலைவர்களிலும் ஆசிரியர்களே ஆற்றல் மிக்கவர்களாக இருக்கிறார்கள். தமிழர்களின் உரிமைக்கு, தமிழ் மொழியின் சமத்துவத்திற்குப் போராடும் பொறுப்பு ஆசிரியர்களுக்கே உரியது என்பதை நாம் அழுத்தம் திருத்தமாக நிரூபிக்க வேண்டும்"

#### உபசபாநாயகர்

கண்டித் தொகுதிபாராளுமன்ற பிரதிநிதியும் உபசபாநாயகருமான திரு தென்னக்கோன் பேசிய பொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்:

"கல்வி மந்திரி ஆசிரியர்களிடத்தில் அனுதாபமுடையவர். அப்படியிருந்தும் உங்களுக்கு பேட்டி தராமல் விட்டார் என்று கேள்விப்பட ஆச்சரியமாயிருக்கிறது. அதற்கு ஏதாவது காரணம் இருக்கத்தான் வேண்டும். முதலாவது வாக்குறுதிப்படி சிங்களத்தை அரசாங்க பாஷையாக்கினோம். இரண்டாவது வாக்குறுதிப்படி தமிழுக்கு நியாயமான அந்தஸ்து அளிக்கத் தவற மாட்டோம். செல்வநாயகம்—பண்டாரநாயகா ஒப்பந்தம் சரித்திரப் பூர்வமானது. இவ்வொப்பந்தத்தை எதிர்த்து பல சக்திகள் வீறு கொண்டெழுந்தன. ஈற்றில் இச் சக்திகள் எல்லாம் தோல்வியையே காணும். அடுத்து நாடற்றவர்கள் பிரச்னை இது கண்டிய விவசாயிகளோடு தொடர்புடையது. வகுப்பு வாதக்கிளர்ச்சி உச்ச நிலையை அடைந்திருக்கும் பொழுது இப்பிரச்னையைத் தீர்க்க முடியாது. நாளடைவில் இப் பிரச்னையைத் தீர்த்து வைப்போம். யாழ்ப்பாணச் சகோதரர்களுக்கு நாம் எத்துரோகத்தையும் செய்ய எண்ணியது கிடையாது. ஆகையால் அவர்கள் இப் பிரச்னையைத் தீர்க்க எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்."

மத்திய மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு வனசிங்கா வரவேற்புரை நிகழ்த்தினர். அவர் தமது உரையில் சொன்னதாவது:

#### ம. மா. த. ஆ. ச. காரியதரிசி

"மலைநாட்டில் பத்து லட்சம் தமிழர்கள் வசிக்கிறார்கள். அவர்களை நாடற்ற பிரசைகளென்று அரசாங்கம் சொல்லுகிறது. அரசாங்கம் எதைச் சொன்னாலும், மலைநாட்டுத் தமிழர் சந்ததி சந்ததியாக இந்த நாட்டிலே தான் வசிக்கப்போகிறார்கள். அவர்களும் இந்த நாட்டுப் பிரசைகளே. அது மாத்திரமின்றி நாட்டிற்கு உழைத்து உழைத்து உருக்குலைந்த தொழிலாளிகள். இத் தொழிலாளிகளுடைய குழந்தைகளை, சோஷலிச அரசாங்கமென்று தங்களை வர்ணிக்கும் எம். ஈ. பி. அரசாங்கம், புறக்கணித்து வருகிறது. இலட்சக்கணக்கான மலைநாட்டுத் தமிழ்ப் பிள்ளைகளுக்குப் பாடசாலைகள் இல்லை. முதலாளிமாரின் தயவிலிருக்கும் தோட்டப் பாடசாலைகள் மிகவும் கீழ் தரமானவை. அங்கே கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் போதிய வேதனமில்லை. தொழிலாளிகளுக்கோ வாழ்க்கைச் செலவுப் பணம் நூறுவீதம் கொடுக்கப்படுகையில் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு முப்பது வீதம் வாழ்க்கைச் செலவுப் பணம் கொடுக்கப்படுகிறது. தோட்டப் பாடசாலைகளையும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களையும், மாணவர்களையும், ஒரு ஒடுக்கப்பட்ட சாதியினராக அரசாங்கம் கணித்து வருகிறது. மற்றப் பாடசாலைகளின் அந்தஸ்துக்கு இப்பாடசாலைகள் உயர்த்தப்பட வேண்டும். தோட்டப் பாடசாலைகளில் அக்கறை செலுத்தும்படி சோஷலிச அரசாங்கத்தை நாம் வேண்டுகிறோம்."

#### பதவிகள்

நடப்பு வருடத் தலைவராகக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திரு ஏ. மு. கனகசபையையும் காரியதரிசியாக மத்திய மாகாணத்தைச் சேர்ந்த த. ச. சண்முகநாதனும், தனாதிகாரியாக வடமாகாணத்தைச்சேர்ந்த வே. சுப்பையாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதர உத்தியோகத்தர்களின் விவரம் வருமாறு:

உபதலைவர்கள்: திருவாளர்கள் கே. எஸ். இராசேந்திரம், வே. கந்தர், யூ. இராசதுரை, உபகாரியதரிசி: திரு இ. க. தியாகராசா.

# தம்மைப் பாடிய புலவர்களுக்கு மன்னர்கள் வழங்கியது புகழில் மயங்கியா?

## தமிழ்ப்பற்றே இருசாராரையும் என்றென்றும் இணைத்து வைத்தது

### புறநானூறு உரையில் திரு லக்ஷ்மணன்

"பழந் தமிழகத்தில் புலவர்கள் இரப்போராகவும் மன்னர்கள் ஈவோராகவும் இருந்தது உண்மை. ஆனால் புலவர்கள் மன்னர்களிடமிருந்து பரிசில்கள் பெற்றுப் பிழைக்கப் பாடினரல்லர். மன்னர்களும் புலவர்கள் தங்களைப் பாடியதில் மயங்கி வாரி வழங்கினர்கள் என்று கொள்வதற்கும் இல்லை.

"புறநானூற்றுச் செய்யுட்களை மேற்போக்காகப் படியாமல் சற்று சாவதானமாகப் படித்துப் பார்த்தால் ஒரு பேருண்மை புலப்படும். புலவர்கள் தமது மட்டற்ற தமிழார்வத்தால் தகுதியுடைய மன்னர்களை நிலைமைக்கு தகுந்தவாறு புகழ்ந்தும் கடிந்தும், இடித்துரைத்தும் பாடியிருக்கிறார்கள். மன்னர்களும் தமிழை வளர்க்கக் கருதி அதற்கு பாமாலை தொடுத்து உழைத்த புலவர்களுக்கு தக்க மதிப்பு கொடுத்ததோடு பொன்னும் பொருளும் இல்லையென்னது ஈயவும் செய்தார்கள். இது தவிர அவர்கள் புகழில் மயங்கி புலவர்களுக்கு வழங்கினர்கள் என்றும் புலவர்களும் பரிசில்கள் பெற்றுய்ய மன்னர்களின் புகழ் பாடினர்கள் என்றும் முடிவு செய்வது தப்பாகும்.

"புறநானூற்றில் அக்கால மன்னர்கள், புலவர் பெருமக்களின் அளவற்ற தமிழ்ப் பற்று அழகாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது"

கொழும்புத் தமிழ்ச் சங்கம் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தி வரும் தமிழ் வகுப்பில், கொழும்பு ரோயல் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு கி. லக்ஷ்மணன் கடந்த ஞாயிற்றுக்கிழமை புறநானூறுபற்றிய தமது மூன்றாவது தொடர் உரையை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு லக்ஷ்மணன் தமது உரையில் மேலும் சொன்னதாவது:-

#### தவறான கருத்து

"'நுனிப்புல் மேய்ந்தாற் போன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக புறநானூற்றிலுள்ள செய்யுட்களைப் படிப்பவர்கள் அல்லது அப்படிப் படித்தவர்கள் சொல்லக் கேட்டவர்கள் பண்டைத் தமிழகத்தின் நிலைபற்றி உண்மைக்குப் புறம்பான முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். 'பஞ்சம், பசி, பட்டினி தமிழ்நாட்டில் மலிந்து இருந்தன. புலவர்கள் வறுமையில் உழன்று [illegible] மன்னர்களின் புகழ் பாடினுல் தங்களுக்குப் பரிசில் கிடைக்கும்—தமது வறுமை வாழ்வு நீங்கும் என்ற நம்பிக்கையில், உள்ளவர்களையெல்லாம் பாடித் தள்ளினர்கள். மன்னர்களும் புகழில் மயங்கி அள்ளி அள்ளிக் கொடுத்துப் புலவர்களை ஆதரித்தார்கள். இரத்தல் இழிவு என்று கருதப்பட்ட தமிழ்நாட்டில் புலவர்கள் இரப்போராகவும் மன்னர்கள் ஈவோராகவும் இருந்திருக்கிறார்கள்.' இதுதான் புறநானூற்றை மேற்போக்காகப் படிப்பவர்கள் கொள்ளும் கருத்து."

#### பாடியது ஏன்? எப்படி? யாரை?

இந்த கருத்து தவறானது என்பதை, திரு லக்ஷ்மணன் பல மேற்கோள்கள் காட்டி விளக்கினர். புலவர்கள் இரப்போராகவல்லாமல் மன்னர்களுக்கு அறிவுரை நிகழ்த்தும் ஆசான்களாகவும் அவர்களின் அருமருந்தன்ன நண்பர்களாகவும் கூட இருந்திருக்கிறார்கள் என்றும் பல உதாரணங்கள் காட்டி விளக்கினர்.

புலவர்கள் ஏன்? எப்படி? என்ன? யாரை? எப்போது பாடினர்கள்? என்ற கேள்விகளையெல்லாம் எழுப்பி தமது உரையில் அவற்றிற்குப் பதிலளித்தார் அவர்.

"புலவர்கள் முதற்கண் தமது நீங்காத் தமிழ்ப் பற்றுக் காரணமாக பாக்கள் புனைந்தார்கள்—பாடினர்கள். மன்னர்களோடு தாம் கொண்ட நட்பு காரணமாகவும் அன்பின் தூண்டுதலினுலும் அவர்களைப் பாடினர்கள். பாடினர்கள் என்று சொன்னால் புகழுக்கு உரியவர்களையே அவர்கள் பாடினர்கள். தங்களை மதித்து தக்கபடி கௌரவித்தவர்களையே பாடினர்கள். தன் மானத்தை எதுகாரணம் கொண்டும் இழக்காது பாடினர்கள். எப்பொழுதும் மன்னர்களின் புகழையே அவர்கள் பாடி நிற்கவில்லை. மன்னர்கள் நெறிதவறலாம் என்ற குறிப்புத் தோன்றிய போதெல்லாம் அவர்களை எச்சரித்துப் பாடினர்கள். தட்டித் தவறி மன்னர்கள் தவறிழைக்க நேர்ந்துவிட்டால் அவர்களைக் கடிந்துரைக்கவும் புலவர்கள் பின்வாங்கவில்லை."

#### வறுமை நிலை

திரு லக்ஷ்மணன் மேலும் பேசுகையில், பழந்தமிழகம் சிலர் நினைக்கும் அளவுக்கு வறுமை நிலையில் இருந்ததில்லையென்றும், ஓரளவு வாழ்க்கையை நடாத்தத் திண்டாடியவர்களுக்குக் கூட (புலவர்கள் உட்பட) மனப்பக்குவம் உடையவர்களாய், கிடைத்ததைப் பகிர்ந்துண்ணும் பண்பு நிறைந்தவர்களாய் இருந்தார்கள் என்றும் பல ஆதாரங்கள் காட்டி விளக்கினர்.

#### தலைவர் உரை

வகுப்பைத் தலைமை தாங்கி நடத்தி வைத்த கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது முடிவுரையில், திரு கி. லக்ஷ்மணன் தமது உரையில் வெளியிட்ட கருத்தை வலியுறுத்திப் பேசினர், அறிவையும் ஆற்றலையும் அக்

(13-ம் பக்கம் பார்க்க)


786

பீடி அன்பர்களுக்கோர்

நல் அறிவிப்பு

"S. R. பீடி"

தேசப் பிரசித்திபெற்ற செய்யது பீடி கம்பெனியாரால் தயார் செய்யப்படுகிறது.

பாவிப்பாளர் போற்றத்தக்க சிறந்த உயர்தர அக்கூளி புகையிலையால் உருவாக்கப்பெற்று அன்பர்களின் நல் ஆசி பெற வந்திருக்கிறது.

கால தேச வர்த்தமானத்தை முன்னிட்டு குறைந்த விலையில் சிறந்த முறையில் உதயமாகி இருக்கிறது.

உண்மை விளங்க ஒருமுறை உபயோகித்துப் பார்க்க கேட்டுக்கொள்கிறோம்.

STOCKIST

S. Abdul Cader

254, Messenger Street, COLOMBO.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் வரும் யாழ்-முனிசிப்பல்சபைத் தேர்தல்

## வாக்காளர்கள் நகரின் சீர்கேட்டை நினைவுகூர வேண்டும்

## பஸ் நிலையத்தில் பிணவாடை மணிக்கடை வாய்க்காலில் சிறுநீர் நாற்றம் சர்பத்கடை பக்கம் அருவருப்பின் பிறப்பிடம்!

### சந்தை வெள்ளக்காடாய், சினிமாத் தியேட்டர்கள் மூட்டைப் பட்டிகளாய் புகைக் கொட்டில்களாய் விளங்குகின்றன

யாழ்ப்பாண முனிசிபல் சபை பதினைன்கு வட்டாரங்களுக்கும் அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்குரிய அபேட்சகர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் அக்டோபர் 26ந் திகதி பதிவாகிவிட்டன. இதற்கான தேர்தல் நவம்பர் 23ந் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை கட்சி முத்திரையுடனும்—கட்சிகளின் அனுசரணையிலும்—சுயேச்சையாகவும் அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். போட்டியிடும் அபேட்சகர்கள் தொகை 43 ஆகும்.

இவர்களுள் இப்பொழுது முனிசிபல் சபை அங்கத்தவர்களாக இருப்பவர்களில் அதிகமானோர் போட்டியிட முன்வந்திருக்கிறார்கள். ஒரு வட்டாரத்தைத் தவிர மற்றெல்லா வட்டாரங்களிலும் பலத்த போட்டி நடைபெற இருக்கிறது. ஒவ்வொரு அபேட்சகரும் நகரத்தின் அபிவிருத்திக்கும் வரியிறுப்போரின் நலனுக்கும் இன்ன இன்ன வகையில் பாடுபட்டுழைப்பேனென ஒப்பனைக்குத் துண்டுப்பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள். நேரிலும் ஆதரவாளர்களிடம் அநேக வாக்குறுதிகளை அளித்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் யாழ்—முனிசிபல் சபையின் முன்னாள் அங்கத்தவர்கள்—இப்போ அங்கம் வகிப்போர்—நகரத்தின் முன்னேற்றத்தை எவ்வாறு கண்காணித்தார்கள் என்பதையும்—நகரத்திற்கு வேண்டிய உடனடிச் சீர்திருத்தம் யாது என்பதையும் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

### சபை செய்யாதது

புதிதாகத் தேர்தல் நடக்க இருப்பதால் இப்பொழுது முனிசிபல் சபையிலுள்ள பல பிரதிநிதிகள் திரும்பவும் முனிசிபல் சபையில் நாற்காலிகளை நிரப்பும் 'நல்ல' பிரதிநிதிகளாக இருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தில் இன்று அங்கத்தவர்களாக இருப்போரின் குணாதிசயங்களையும் செயற்திறன்களையும் அவர்களிற் சிலர்பற்றிப் பொதுமக்கள் கொண்டிருக்கும் "நல்ல" அபிப்பிராயம்பற்றியும் நாம் எழுத வேண்டியதில்லை. உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூட முடியாது என்று சொல்வதில் உண்மை இருக்கின்றதென்பதை யாழ்—முனிசிபல் சபை சான்றாக எடுத்துக் காட்டுகிறது.

"தூங்குக தூங்கிச் செயற்பால
தூங்கற்க
தூங்காது செய்யும் வினை"

என்பதாகத் திருக்குறள் நமக்குப் புகட்டும் நற்கருத்தை யாழ்—முனிசிபல் சபை நிர்வாகம் இதுவரை அனுசரித்து நடக்கவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறலாம்.

### சுகாதாரக் குறைவு

கிராமங்கள் சுகாதாரக் குறைவுள்ளதாக இருப்பது நூதனமானதல்ல. நகரங்கள் நரகங்களாக மாறி வருவதுதான் விசனிக்கத்தக்கது. நகரங்கள் சுகாதாரத்தின் நிலைக்களனாக விளங்க வேண்டும். கிராமங்களிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் நகரத்திற்கு விஜயம் செய்கிறார்கள். அப்படி விஜயம் செய்யும் மக்கள் தம்முடன் தொற்று நோய்க் கிருமிகளை ஏற்றுச் சென்றால் கிராமமே நோயால் வருந்த வேண்டியதுதான்.

யாழ்—முனிசிபல் சபையின் மேற்பார்வையிலுள்ள பல இடங்கள் மிகவும் பிற்போக்கானவையாக இருக்கின்றன. குக்கிராமங்களிற் கூட சுகாதாரம் இந்த இடங்களைப்போல் சீர்கெட்டு இருக்கமாட்டாது. சின்னக்கடை—குருநகர்—பாலையூர் முதலிய இடங்கள் சுகாதாரக் குறைவால் ஆண்டாண்டு காலமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய இடங்களை சுகாதார வசதிகளுள்ள இடங்களாக ஆக்குவதற்கு ஒரு நீண்டகாலத் திட்டம் வேண்டுமென்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால் இத்தகைய இடங்களின் சுகாதாரக் குறைவை முனிசிபல் சபை கூடியளவு விரைவில் போக்க முன்வரவேண்டும்.

### பஸ் நிலையத்தில் பிணவாடை

யாழ்நகரின் மதியமாக மிளிரும் பஸ் நிலையத்தைச் சுற்றியிருக்கும் இடங்கள் சுகாதாரமின்றி சாக்கடையாக விளங்குவதை இதுவரை காலமும் அங்கத்தவர்கள் காணாது வாழ்ந்திருக்கிறார்களே யென்று எண்ணும்போது விசனமேற்படுகின்றது. யாழ் — பஸ் நிலையத்திற்குக் கிழக்கில் இருக்கும் சாக்கடையும் மேற்கில் சர்பத் கடைகளுக்கு முன் செல்லும் சாக்கடையும் பிண நாற்ற மடிக்கிறது. பஸ் வண்டிகளுக்காகக் காத்திருக்கும் மக்கள் மூக்கை இறுகப் பிடித்துக்கொண்டு தான் நிற்க வேண்டியிருக்கிறது. இந்தச் சாக்கடையை மழைநீர் சுத்தப்படுத்தி விடுவதல்லாது நகர சுத்தியாளர் சுத்தப்படுத்துவதென்பது தெரிந்தோ தெரியாமலோ நடைபெறாத காரியமாகும்.

### சர்பத் கடைப் பக்கம்-அருவருப்பின் பிறப்பிடம்

சர்பத் கடைகளுக்கு முன்பாக இருக்கும் சாக்கடையைபாயினும் சுத்தப்படுத்த அழுக்குகள் தங்கித் தேங்கி நிற்காது போக்க இதுவரை நடவடிக்கை எடுக்காதது வருந்தத்தக்கது. கடமையைத் தட்டிக் கழிப்பது நகர பிதாக்களுக்கு விளையாட்டல்ல வென்பதை அவர்கள் உணரத் தலைப்படாததேனோ? சர்பத் கடைகளுக்குப் பின்பக்கத்தில் துர்நாற்றமடிக்கிறது. மாட்டுச் சாணமும் சிறுநீர்ப் பெருக்கும் பார்க்கும்போது வாந்திதான் வருகிறது. இந்த இடம் அசுத்தத்தின் இருப்பிடமாக — அருவருப்பின் பிறப்பிடமாக இருப்பதை புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர்கள் அறியவேண்டுகிறேன்.

### மணிக்கடை வாய்க்காலில் சிறுநீர் நாற்றம்

மணிக் கடைகளுக்குப் பக்கத்தில் அழுக்கு நீர் பாயும் வாய்க்கால் சிறுநீர் தங்கியிருக்கும் வாய்க்காலாகக் காட்சி தருகிறது. இத்தகைய பகிரங்க இடங்களிற் பதுங்கிப் பதுங்கிச் சிறுநீர் கழித்து அசுத்தப்படுத்துபவர்களைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பொலீஸார் இவற்றைக் கண்காணித்துப் பகிரங்க மலசல கூடத்திற்கு விரட்டினால் மக்கள் அப்படிச் செய்ய முன்வரமாட்டார்கள். இதுபற்றி இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

### எங்கும் வெற்றிலைத் துப்பல்

நகரத்தில் கண்ட கண்ட இடங்களில் — கடைகளுக்கு முன்னும் — தேனீர் கடைகளுக்கு முன்புமாக துப்புகிறார்கள். இவர்கள் குறிக்கப்பட்ட இடங்களில் துப்புவதற்கு முனிசிபல் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும். யாழ்ப்பாண மக்கள் வெற்றிலை பாக்குப் போடும்

### புத்தொளி

பழக்கமுள்ளவர்கள். அவர்கள் கண்ட கண்ட இடங்களில் துப்புவதால் சிவப்பாகவும் சுகாதாரத்தைப் பாதிக்கும் கிருமிகள் இருக்குமிடமாகவும் இருப்பதை அங்கத்தவர்கள் நகர சுகாதாரத்தை முன்வைத்துக் கண்காணிக்கவேண்டும்.

### கஸ்தூரியார் றோட்டில் குப்பை கூளங்கள்

யாழ் பஸ் நிலையத்திலிருந்து நூறு யார் தூரமுள்ள கஸ்தூரியார் றோட்டைச் சென்று பார்த்தால் அங்கு குப்பை கூளங்கள் குறைவின்றி படை படையாக இருப்பதைக் காணலாம். அந்த றோட்டால் மக்கள் போக்குவரத்துச் செய்கிறார்கள். ஆனால் அந்த றோட்டைப் பார்க்கும் போதெல்லாம் சுகாதாரத்திற்கு முற்றிலும் முரணானதாக இருப்பதை எவரும் காணலாம். அந்த குப்பைகூளங்களை அகற்ற நடவடிக்கை எடுத்தல் அவசியம். பஸ் நிலையத்திலுள்ள பிரயாணிகள் தங்குமிடம் எப்பொழுது பார்த்தாலும் கஞ்சலும் குப்பையுமாகக் காட்சி தருகிறது. இதற்கு மத்தியில்தான் பிரயாணிகள் தங்கிச் செல்லுகின்றார்கள்.

### மலசல கூடத்தை நெருங்க முடியாது

இங்குள்ள பகிரங்க மலசலகூடம் நாளொன்றுக்கு மூன்று தடவைகளாயினும் சுத்தம் செய்யப்படவேண்டும். மலசலகூடம் முழுதும் மல சலம் கழிக்குமிடமாக இருக்கிறதே இதனை முனிசிபல் சபையினர் திரும்பிப் பாராததேன். மலசல கூடத்திற்கு அண்மையாகவே போக முடியாமல் இருக்கும் போது பொதுமக்களை அங்கு சென்று சிறுநீர் கழியுங்கள் என்று கேட்பதெப்படி? மலசல கூடம் சுத்தமாகவும் துர்நாற்றமின்றியுமிருந்தால் கண்ட கண்ட இடங்களில் மலசலம் கழிக்க முன்வரமாட்டார்கள் பொது மக்கள் என்ற உண்மையை நிர்வாகத்தினர் மனதிற் கொள்க.

### வெள்ளம்

பஸ் நிலையத்தின் கிழக்குப் பக்கம் வாடகைக் கார்கள்-[illegible] நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடம் பள்ளமும் திட்டியுமாக இருப்பதையும் மழை காலத்தில் வெள்ளம் நின்று கார் சாரதிகளுக்கு வசதிக்குறைவைக் கொடுப்பதையும் முனிசிப்பல் சபை இன்னும் காணவில்லையோ?

### காய்கறிச் சந்தை வெள்ளக் காடு

காய்கறிச் சந்தைக்கு ஆண்கள் பெண்கள் தினமும் நூற்றுக்கணக்கானோர் வருகிறார்கள். மழைக் காலத்தில் காய்கறிச் சந்தை வெள்ளக் காடாக விளங்குகின்றது. சேறும் சுரியும் உடுப்புக்களை அசுத்தமாக்குகின்றது. குளிக்கப் போய் சேறு பூசிக்கொள்ள வேண்டிய கதையாக இருக்கிறது இங்கு வந்து போவோருக்கு. இச் சந்தையைத் திருத்தி மழை நீர் தங்கி நிற்காது பாதுகாப்பதற்கு முன்வரவில்லை முனிசிபல் சபை. மீன் சந்தையில் இடநெருக்கம் இம்மட்டு அம்மட்டல்ல. மீன் சந்தை பொது சனங்களின் வசதியை முன்னிட்டு விஸ்தரிக்கப்பட வேண்டும்.


### றோட்டுகளின் சீர்கேடு

பகிரங்க றோட்டுக்கள் பள்ளமுந் திட்டியுமாக இருக்கின்றன. இதனை முனிசிபல் சபை நிர்வாகம் பகிரங்க சேவைப் பகுதிக்கு அறிவித்து ஆவன செய்ய முன்வர வேண்டும். வெளியிடங்களிலிருந்து யாழ்நக

(6-ம் பக்கம் பார்க்க)


"அறஸ்கோ"

தையல் மெஷின்களையே நீங்கள் தெரிவு செய்யுங்கள்




தோற்றம் — தயாரிப்பு — வேலைத் திறன் — உழைப்பு — பாவிப்பு எதிலும் வேறு எந்தத் தையல் மெஷினும் இதற்கு இணையாகாது.

★ அறஸ்கோ தையல் மெஷின்கள் தரத்தில் உயர்ந்தவை. வேறு எந்த மெஷினுக்கும் குறைந்தவையல்ல என்பதற்கு உத்தரவாதமுண்டு.

★ அறஸ்கோ தையல் மெஷின் உப உறுப்புகள் எங்களிடம் ஸ்டாக்கில் உண்டு. வேறு மார்க்கட்டிலுள்ள தரமான தையல் மெஷின் உப உறுப்புக்களும் அறஸ்கோவுக்குப் பாவிக்கலாம்.

★ அறஸ்கோ தையல் மெஷின்கள் பத்துக்கு அதிகமான அழகிய மாடல்களில் எங்களிடம் கைவசம் உண்டு.

ஒரு முறை விஜயம் செய்து நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

சப் ஏஜண்டுகள்:

ஹொரணை: அமரதாஸ அன் பிரதர்ஸ், 41, மெயின் வீதி.
அவிசாவளை: சென்ட்ரல் பார்மஸி.
எட்டியாந்தோட்டை: தவமணி டெக்ஸ்டைல்ஸ், 192, மெயின் வீதி;
கல்முனை: ஸிலிலியா புக் டிபோ & ஸ்டோர்ஸ், 7, மெயின் வீதி;
மாவனெல்லை: S. A. தாஸீம் உடயார், 10, அல்பிட்டிய றோட்;
இரத்னபுரி: சி.கே.கே. அஹமது, 167, மெயின் வீதி
எல்பிட்டியா: திரு. டி. எச். செனிவிரத்ன, ஹன்ஸகிரி பில்டிங், மெயின் வீதி;
கோனபொலை: ஜெயக்கொடி ஸ்டோர்ஸ்.

சுலபமான தவணைகளில் பணம் செலுத்திப் பெற வசதியுண்டு.

சப் ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு சப் ஏஜண்டாக விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

மற்றும் இதர விபரங்களுக்கும், விலைப் பட்டியலுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ஏக விநியோகஸ்தர்கள்:
ஆர். அரசரத்தினம் & கோ.,
106, ரெக்ளமேஷன் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வானொலிக் கலைவிழா அளித்த தீபாவளிப் பரிசு!

## மூன்று நாட்களாக வாரி இறைக்கப்பட்ட முத்தமிழ் இன்பம்

## 'கொட்டகைக் கூத்து' பழந்தமிழ்க் கலையின் அற்புதத் தன்மையை எடுத்துக் காட்டியது

யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் நடந்தேறிய வானொலிக் கலை விழா நிகழ்ச்சிகளில் குறிப்பாகக் கொட்டகைக் கூத்தைப் பற்றி அநேகமாக எல்லோருக்கும் ஒரே அபிப்பிராயம். நகர மண்டபத்தில் கூடியிருந்து நேரில் பார்த்தவர்களும் சரி, வானொலியில் கேட்டவர்களும் சரி வெகுவாக ரஸித்தார்கள்; அந் நிகழ்ச்சியைத் தயாரித்தவர்கள், பங்கு பற்றி நடித்தவர்கள் எல்லோரையும் மனதாரப் பாராட்டினார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பில் நடந்த வானொலிக் கலை விழாவில் இடம்பெற்ற கொட்டகைக் கூத்து சம்பந்தப்பட்டவரை பலரின் கண்டனத்துக்கும் ஆளான நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த விழாவில் தங்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து, சிறந்த முறையில், குறை சொல்ல முடியாத வகையில் "மயான காண்டம்" கொட்டகைக் கூத்து நிகழ்ச்சியைத் தந்தது பெருமைக்கும் பாராட்டுக்கும் உரிய விஷயம்.

மூன்று நாட்களாக நடைபெற்ற யாழ்ப்பாணம் வானொலிக் கலை விழாவில் கொட்டகைக் கூத்துக்கு மட்டுமல்லாமல் முத்தமிழுக்கும் இடமளித்திருந்தார்கள். தீபாவளி நாளான கடைசி நாளன்று இயலும் இசையும் முதல் நாளன்று (20-10-57) நாடகமும் முக்கியமாக இடம் பெற்றன.

இந்நிகழ்ச்சிகளையெல்லாம் ஸ்தலத்திலேயே இருந்து கண்டும் கேட்டும் அனுபவித்தவர்களுள் ஒருவரான யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீ காந்தா விழாவில் பேசுகையில் விருப்பு வெறுப்பற்ற முறையில் விமர்சனம் செய்தார். அவர் பேசும்போது சொன்னதாவது:-

### பாராட்டு

"நவரசங்களும் ததும்பிய இந்தக் கலைவிழாவிலே நாங்கள் கடந்த மூன்று தினங்களாக முத்தமிழையும் கேட்டு இன்புற்றோம். அதனை ஒழுங்கு செய்து நடத்திய வானொலித் தமிழ்ப் பகுதி அதிகாரிகளுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறோம். இதுவரை காலமும் கொழும்பில் நடந்து வந்த கலைவிழாவை இத்தடவை யாழ்ப்பாணத்திற் காணச் சந்தர்ப்பமளித்தமைக்காக நாம் அதிகாரிகளை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

"நம் கலைகளிற் சில பகுதிகள் மறைந்து வருகின்றன. இந்த வகையில் கொட்டகைக் கூத்து நாட்டுக் கூத்து என்பவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய விழாக்களை நடத்தி அக் கலைகளுக்கு முக்கியத்துவமளித்தால் அவை நிச்சயம் வளரும்.

### கலைகளுக்கு நல்ல எதிர்காலம்

"இங்கு நடந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் உயர்ந்த தரத்தில் இருந்தன. நடன நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்தில் நடனக் கலை வளர்ந்து வருகிறது என்பதை நினைவூட்டின. இன்று இசைமாரி பொழிந்த இசைமணி சண்முகரத்தினத்தை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். அவரது கச்சேரி இக் கலைவிழாவுக்கே முடி சூட்டி விட்டது. நாடக நிகழ்ச்சிகளில் நேற்று நடைபெற்ற கொட்டகைக் கூத்தை இலகுவில் மறக்க முடியாது. அதனைப் பார்த்தபோது மனதில் ஒரு எண்ணம் பதிந்தது. சிறந்த சங்கீதமும், நடிப்புத்திறனும், முகபாவமும் ஒருங்கே பொருந்தியிருந்த கூத்தைப் போன்ற நாடகங்களை நடத்தினால் நமது கலைகளின் வருங்காலம் சிறப்படையும் என்பதில் சந்தேகமில்லை".

தீபாவளியன்று விழாவுக்கு ஏகப்பட்ட கூட்டம். நிகழ்ச்சிகளும் அன்றைக்கு ஏற்றவாறு சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

### நடனம்

முதல் நாள் நாடகத்துக்கும் இரண்டாம் நாள் கொட்டகைக் கூத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்ததைப் போன்று மூன்றும் நாளாகிய அன்று இசைக்குத் தனியிடம் தரப்பட்டிருந்தது. நெல்லியடி அரசினர் மத்தியக் கல்லூரி மாணவிகளின் பூஜா நடனத்துடன் மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. அதனை ஆசிரியர் திரு. வி. கே. நல்லையா தயாரித்திருந்தார். சரஸ்வதி தோத்திரம் ஒன்றுக்கு அமைவாக அவர்கள் ஆடி அதை யடுத்து செல்வி பூமணி வேலுப்பிள்ளையின் இன்னிசைக் கச்சேரி நிகழ்ந்தது.

### நாதஸ்வரம்

மங்கள வாத்தியமான நாதஸ்வர இசையுடன் காலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. திரு எஸ். பி. எம். திருநாவுக்கரசு, திரு என். பத்மநாதன் ஆகியோர் நாதஸ்வரம் வாசித்தனர். திரு. என். குமரகுருவும், திரு. எஸ். பழனிவேலுவும் தவில் வாசித்தார்கள்.

### கவியரங்கம்

அடுத்து நடைபெற்ற கவிதை அரங்கில் சிவதொண்டன் ஆசிரியர் திரு. க. கி. நடராசன், வித்துவான் க. வேந்தனார், பண்டிதர் க. சச்சிதானந்தம், பண்டிதர் இ. திருநாவுக்கரசு, பண்டிதர் கே. நமசிவாயம் ஆகியோர் கலந்து கொண்டனர். கவிஞர்கள் ஐவரையும் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு கே. என். நடராசன் ரசிகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். "யாழ்ப்பாணத்தின் சிறப்பு" என்ற பொதுவான தலைப்பில் அவர்கள் தத்தம் கவிதைகளைப் பாடினர். தனித்தனி உபதலைப்புக்கள் தரப்படாத காரணத்தால் யாழ்ப்பாணத்தின் பல்வேறு வளங்களையும் சிறப்புகளையும் திரும்பத்திரும்பக் கேட்கக்கூடியதாயிருந்தது.

### லண்டன் கந்தையா

பின்னர் லண்டன் கந்தையா நகைச்சுவை நாடகம் நடத்திக் காண்பிக்கப்பட்டது. இந்த நகைச்சுவை நாடகத்தில் லண்டன் கந்தையாவாக திரு. எஸ். சண்முகநாதனும், தடியன் தம்பிராசாவாக திரு. சிவத்தம்பியும், மயிலுவாக திரு. வ. கனகலிங்கமும், அன்னமுத்துவாக செல்வி திரா ஆறுமுகமும் நடித்தார்கள். லண்டன் கந்தையாவின் கேலியும் கிண்டலும் கலந்த பேச்சும் அன்னமுத்துப்பாட்டியின் ஒப்பாரியும் சபையிற் பெரும் கலகலப்பை உண்டாக்கி விட்டன.

### தாளவாத்திய கச்சேரி

நான்காவதாக நடைபெற்ற தாளவாத்தியக் கச்சேரியில் மிருதங்கம், கஞ்சிரா, கடம், தவில் முதலான வாத்தியங்கள் இடம்பெற்று நிகழ்ச்சியைச் சிறப்புடன் அமையச் செய்தன. அடுத்து விவசாயியின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் கிராமிய நடனம் நடைபெற்றது. இதனையும் நெல்லியடி அரசினர் மத்திய கல்லூரிமாணவிகளே நடத்தினர்.

### இசை

கடைசியாக நடைபெற்ற இசைப் புலவர் திரு. என். சண்முகரத்தினத்தின் சங்கீத விருந்து இந்த வானொலிக் கலை விழாவுக்கே முடிசூட்டியதுபோல் அமைந்திருந்தது.

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அமைப்பாளர் திரு கே. எஸ். நடராசா மற்றும் நிலைய உதவியாளருடன் யாழ்ப்பாணம் வானொலிக் கலை விழாவைச் சிறப்பாக நடத்தி முடிக்க எடுத்த முயற்சிகள் வீண்போகவில்லை. யாழ்ப்பாண மக்களுக்கும் மற்றும் எங்குமுள்ள தமிழன்பர்களுக்கும் தீபாவளிக்கு நல்ல கலைப் பரிசும் முத்தமிழ் இன்பமும் வானொலிக் கலை விழா வழங்கியது.




ஷெல் மார்க் அலுமினியப் பாத்திரங்கள் சுத்தமான இங்கிலிஷ் அலுமினியத்தால் செய்யப்பட்டவை என்பதை மறக்கவேண்டாம்.

ஷெல் மார்க் அலுமினியப் பாத்திரங்கள் எல்லா நகரங்களிலும் கிடைக்கும்.

உங்கள் தேவையை அறிவித்தால் அனுப்ப முடியும்.

சி. வி. பாட்,

218 - 220, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:

டாம் வீதி, கொழும்பு.


# எதிர்வரும் யாழ்-முனிசிப்பல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரைப் பார்க்க வருபவர்கள் யாழ்—பஸ் நிலையத்தையும் காய்கறிச் சந்தையையும் ரோட்டுக்களையும் பார்த்தால் தவறான அபிப்பிராயத்தைக் கொள்வார்களென்பதை முனிசிபல் சபையினர் இதுவரை உணரவில்லை.

### மின்சாரத் தடை

இங்கு மின்சாரம் அடிக்கடி இயங்காது இடையில் தடைப்படுவதால் பொது மக்கள் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். கடன் வாங்கியும் பட்டினி—கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரியின் கதையாக வரியிறுப்போர் இருக்கிறார்கள். இடையில் மின்சாரம் தடைப்படாது முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டியது முனிசிபல் சபையினரின் கடமையல்லவா? மின்சாரம் வேண்டுமென விண்ணப்பப் போர் உரிய காலத்திற் மின்சாரம் பெறுவதில்லை. மின்சாரம் கொடுப்பதில் கால தாமதம் காணப்படுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டியது.

### வரி வசூல்

முனிசிபல் சபை பொது மக்களிடமிருந்து அதிக வரியை அறவிட முன்வரக் கூடாது. பட்டினத்தில் பணக்காரர்களாக பெயரளவில்தான் பலர் இருக்கிறார்கள். எனவே வரியை கூட்டும் போது பொது மக்களின் கருத்துக்களை முதல் அறிய முன்வர வேண்டும்.

### சினிமாத் தியேட்டர்களில்-பட்டியும் புகையும்

முனிசிபல் சபையின் எல்லைக்குள் ஐந்து தியேட்டர்கள் இருக்கின்றன. புதுப் படங்கள் காட்டப்படும் போது எல்லா வகுப்புகளிலும் அளவுக்கு மீறிப் பொது மக்களை அடைத்து வைக்கிறார்கள் மழைக் காலத்தில் [illegible] அடைத்து வைத்திருப்பது போல. கலரி வகுப்பின் கதி அதோ கதிதான். மூச்சு விடவும் முடியாது: சுவாசிக்கவும் இயலாது; வியர்வை மணம் ஒருபுறம்; புகைப் படலமும் நெருக்கமும் மறுபுறம். ரஸிகர்கள் கெட்ட காற்றைச் சுவாசிக்கிறார்கள். உடைகளும் அசுத்தமடைகின்றன. நானூறு பேர் இருக்க வேண்டிய கலரியில் எண்ணூறு பேர்களை அடக்கி உயிரை வாங்குகிறார்கள்.

### மூட்டைப் பூச்சியின் துரைத்தனம்

இந்த நிலை மாற வேண்டும். சுகாதாரத்தையும் ரஸிகர்களின் சௌகரியத்தையும் கருத்தில் கொண்டு ஒவ்வொரு தியேட்டரிலும் குறிப்பிட்ட தொகையான டிக்கட்டுகளுக்குக் கூட விற்பதை முனிசிபல் சபையினர் தடுக்க வேண்டும். கலரியிலிருந்து முதல் வகுப்புவரை மூட்டைப் பூச்சி மனிதனை ருசி பார்க்கிறது. மூட்டைப் பூச்சியின் ஆட்சி எல்லாத் தியேட்டர்களிலும் அதிகமாகக் காணப்படுகிறது. கடதாசி போட்டிருந்தாலும் மூட்டைப் பூச்சி அதனைத் துச்சமாக மதித்துத் தனது துரைத்தனத்தைக் காட்டுகிறது. உதிரத்தை உறிஞ்சுவது போதாதென்று சட்டை வேட்டிகளிற் தொற்றிக் கொண்டு வீடுகளுக்கும் வந்து விடுகின்றன. மூட்டைப் பூச்சி ஒழிப்பு விவகாரம் யாழ்—முனிசிபல் சபையில் ஒரு முற்போக்கு அங்கத்தவரால் ஒரு முறை பிரஸ்தாபிக்கப்பட்டது. வெறும் பிரேரணையுடன் ஒழிப்புப் பேச்சு ஓய்ந்து விட்டது. இதனை முனிசிபல் சபை அங்கத்தவர்கள் உடனடியாகக் கவனிக்க முன் வர வேண்டும்.

### தேனீர்க் கடைகளில் சுத்தம்?

தேனீர், சாப்பாட்டுக் கடைகளின் சுத்தம் பற்றி சுகாதாரப் பகுதியார் நற்சாட்சிப் பத்திரம் கொடுத்து வருகிறார்கள். முன்னதாக அறிவித்து விட்டுச் சென்று பார்த்த பின்தான் நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப் படுகின்றன. இத்தகைய பரிசோதனையில் அர்த்தமில்லை. திடீர் விஜயங்களினால்தான் சுகாதாரம் பாதுகாக்கப்படும்.

### வாடகைக் கார்கள் பஸ்கள்

வாடகைக் கார்கள்-றிக்சோக்கள்-வண்டிகள்-நிறுத்திவைப்பதற்குக் குறிப்பிட்ட இடங்கள் இருக்க வேண்டும்.

பஸ்களிற் பிரயாணஞ்செய்வோருக்குக் கியூவரிசை அவசியம். ஆண்களும் பெண்களும் முட்டிமோதிக்கொண்டு இடம் பிடிக்க முந்தி ஓடும் அவல நிலை, அநாகரிக முறை கியூ வரிசையால் தவிர்க்கப்பட்டு விடும்.

### நூல் நிலையம்

நகரிலுள்ள மத்திய நூல் நிலையம், அரசாங்க விடுமுறை காலங்களிலும், சனிக்கிழமையில் ஒரு மணிக்குப் பின்பும் ஞாயிற்றுக் கிழமையிலும் மூடப்பட்டிருக்கின்றது. நகரத்திலுள்ளோருக்கு மேற் குறிப்பிட்ட தினங்களே ஓய்வுள்ள வசதியுள்ள தினங்களாகும். அத்தினங்களிற்றான் அவர்கள் நூல்களைப் படிக்கவும் பத்திரிகைகள் படிக்கவும் வசதியேற்படுகின்றது. எனவே விடுமுறை நாட்களிலும் சனி-ஞாயிற்றுக் கிழமைகளிலும் நூல் நிலையம் திறக்கப் பட்டிடிப்பது அவசியம்.

யாழ்-முனிசிபல் சபை எல்லைக்குள் இருக்கும் மக்கள் தங்கள் வாக்குரிமையை இம் முறை "தெரிதலும் தேர்ந்து செயலும்" என்ற வள்ளுவன் வாக்கைச் செயல்படுத்த விழைவோருக்கே கொடுப்பார்களென எதிர்பார்ப்போமாக. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் முனிசிபல் சபை அங்கத்தவர்கள் நகரத்தின் சிறப்பைக் கட்டிக் காத்து வளர்த்து வரியிறுப்போருக்கு வசதியாக ஆட்சி நடத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை கலையா? கடனா?

## சரியான கண்ணோட்டம் இல்லாதோருக்கு பயங்கரமானதாகவும் தோன்றலாம்

## முற்றும் இன்பமுள்ள வாழ்க்கையும் இனிதல்ல; ஆயின் நல்லது எது? அதைப் பெறுவது எப்படி?

"வாழ்க்கை என்பது ஒரு அந்நிய மொழி, அதனை எல்லா மனிதர்களுமே தவறான முறையில்தான் உச்சரிக்கிறார்கள்" என்று மனம் வெதும்பிக் கூறுகிறான் கிறிஸ்டோபர் மார்லி என்ற மேதை. வாழ்க்கை ஓர் அரியகலை. அதனைச் சரிவரப் பயின்றவர் மிக மிகச் சொற்பம். அது ஒரு புதிர்; அதனை அறிந்துகொள்ள முடியாதவர்களுக்கு அது அச்சந்தருகிறது. புரிந்து கொண்டவர்கட்கு அதுவே இன்பத்தையும் தருகிறது.

### வாழ்க்கை பற்றி பெர்னட்ஷா

வாழ்க்கையைப் பலர் கலையாக அல்ல; கடனாகக் கருதுகின்றனர். 'இன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருப்பது இனிப்பையே உண்டு கொண்டிருப்பதைப் போல; இடையிடையே காரத்தையும் உண்ண வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டவர்கள் மட்டுமே வாழ்க்கையைக் கலையாகக் கருத முடியும். "வாழ்நாள் முழுவதும் இன்பத்தை தவிர வேறு ஏதும் இல்லை என்றால் அதுபோன்ற வாழ்வை எந்த மனிதனாலும் சகித்துக்கொண்டிருக்க இயலாது; பூலோக நரகம் என்பது அதுதான்" என்று அறிஞர் பெர்னட்ஷா கூறக் காரணம், வாழ்க்கையைக் கலையாக அவர் கருதியதுதான்.

### புதுமைக் கவி ஷெல்லி கருத்து

வாழ்நாளில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். துன்பம் வந்த காலத்தில் மன முடைந்து நிலை குலைந்து போய் விடல் அறிவீனம். "மழைக்காலம் வந்துவிட்டதா? அப்புறம் என்ன கவலை? வசந்தம் வருவதற்கு இனி அதிக நாள் இல்லை. துன்பம் வந்துவிட்டதா? மிகவும் நல்லது; இன்பம் பிறக்க இனி அதிக நாள் இல்லை" என்று கிஞ்சித்தும் கவலையின்றி புதுமைக் கவிஞன் ஷெல்லி பாடித்திரிந்ததை வாழ விரும்புவோர் ஒவ்வொருவரும் நினைவில் வைக்க வேண்டும்.

### வாழ்வு செழிக்க அறிவு வேண்டும்

வாழ்க்கை என்ற வானில் ஒளியைப் பரப்புவது அறிவு என்ற கதிரவனே. அந்தக் கதிரவன் இல்லையேல், வாழ்வு வரண்ட பாலையாய், இருண்ட வெட்ட வெளியாய்க் காட்சியளிக்கும். எனவே வாழ்க்கையை நன்முறையில் நடத்திச் செல்ல விரும்புபவன் தன் அறிவை வளர்த்துக் கொண்டாக வேண்டும். மற்ற எல்லாவற்றையும் உருவாக்கி ஒழுங்குபடுத்துவது அறிவே. ஆகவே அறிவை நல்ல முறையில் உருவாக்கி ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்வது நமது முதற்கடமை. மாந்தர் தம் அறிவினை வளர்க்க அறிஞர் பெருமக்கள் எத்தனையோ நூல்களை எழுதி வைத்துப் போயிருக்கின்றனர். மேதைகள் எழுதிவைத்த நூல்களின் வாயிலாக, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்ப்பட்ட சிக்கல்களை எவ்வாறு தீர்த்தார்கள் என்பதைத்தான் அறிந்து கொண்டதாகக் கூறுகிறான், ராபர்ட் லுத்தே என்ற கவிஞன்?

எள்ளளவு தவறும் செய்யாமல் வாழ்க்கை நடாத்தியோர் எவருமில்லை. தவறு செய்யாது நடாத்திய வாழ்க்கையும் இயந்திர வாழ்க்கையாக அமையுமேயன்றி, உண்மையானதோர் வாழ்க்கையாகாது. நல்லவர்கள், தாம் செய்த தவறைத் தலைசிறந்ததென கருதுகிறார்கள். 'இத் தவறைச் செய்ததால் இந்த இன்னலையடைந்தேன்' என்று அவர்கள் கூறி' 'மறுமுறையும், இந்தத் தவறைச் செய்யேன். எனவே இந்த இன்னலையும் அடையேன். என்று பெருமைப்பட்டுக்

**மலர் மன்னன்**

கொள்கிறார்கள். காந்தியடிகள் தாம் செய்த தவறுகளைத் தம் நூலில் தெள்ளத் தெளிய எடுத்துரைத்து அந்நூலுக்கு 'சத்திய சோதனை' என்றும் பெயரிட்டனர் அன்றோ?

### அடிக்கடி உருமாறும்

"வாழ்க்கை என்பது ஓர் அலை. அதன் உருவும், வண்ணமும், மாறிக் கொண்டேயிருக்கின்றன. எந்தக் கணத்திலும் அது ஒரே வகையான நிலையைப் பெற்றிருப்பதில்லை" என்கிறான், டிண்டால் என்ற அறிஞன். கணத்துக்குக் கணம் மாறும் வாழ்க்கையைப் புரிந்து கொள்வதே சிரமம்; அப்படியாயின் அதனை நடத்திச் செல்வது எவ்வளவு சிரமமானதாக இருக்கவேண்டும்.

### வாழ்க்கையைக் கலையாகக் கருதாதோர் நிலை

எல்லாரும் வாழத்தான் வாழ்கின்றார்கள். ஆனால் அவர்களில் எத்தனை பேர் தங்கள் வாழ்க்கையை தொடர்ந்தாற்போல் அமைதியாக நடத்தியிருக்கிறார்கள்? எத்தனை பேர் தங்கள் வாழ்க்கையை எல்லோருக்கும் பயன்படும்படி நடத்தியிருக்கிறார்கள்? வாழ்க்கையின் பொருளை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. எனவே அவர்கள் வாழ்க்கையினைக் கலையாகக் கருதாமல் கடனாகக் கொள்கிறார்கள். சிலரோ வாழ்க்கையைக் கடனாகக் கூடக் கருதாமல் பயங்கரமானதாக முடிவுகட்டி தம் வாழ்க்கைக்கு வலுக்கட்டாயமாக முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார்கள்.

### தோல்விகள்

வாழ்க்கையில் எத்தனையோ தோல்விகளைக் காண நேரிடும். வாழ்க்கையைக் கடனாகக் கருதுவோர், தோல்விகள் ஒன்றன்பின் ஒன்றாக எதிர்ப்படவும், மனமுடைந்து போய், 'வாழ்நாளை வேண்டா வெறுப்பாக 'கடத்தியாக வேண்டுமே' என்ற கசப்பான எண்ணத்துடன் நடத்துவர். மாண்டேய்ன் வாழ்க்கையைக் கலையாகக் கருதியவன். இன்பத்தை எவ்வாறு சுவைத்தானோ அதேபோல் துன்பத்தையும் சுவைத்தான். வெற்றிகளை எப்படி போற்றினானோ அதே போன்று தோல்விகளையும் போற்றினான்.

வெற்றிகளைவிட வெற்றி மிகுந்த தோல்விகளும் உள்ளன. சில சமயங்களில் வெற்றிகளைப் பெறுவதை விட அத்தகைய தோல்விகளைப் பெறுவதே சாலச் சிறந்தது, என்கிறான் அனுபவம் மிகுந்த அந்த சிந்தனையாளன்.

### செருக்கும் சினமும்

செருக்கு முன்னால் சென்றால் அவமானம் பின் தொடர்ந்து செல்லும் என்பதையும் சினம் என்பது சேர்ந்தாரைக் கொல்லி என்பதையும் வாழ விரும்புவோன் தெரிந்து கொள்ள வேண்டும். கோபம் என்பது ஒரு தற்காலிகப் பைத்தியக்காரத்தனம். ஆகவே கோபத்தை அடக்கு; இல்லையேல் உன்னை அது அடக்கிவிடும் என்றான் ஹொரேஸ் என்ற மேதை.

### முன்னேற்றத்துக்கு சுயமுயற்சி

'வாழ்வதற்காகட்டும் சாவதற்காகட்டும் அஞ்சுவதற்கே நேரமில்லாதபடி பணிபுரிந்த வண்ணம் இருப்பதே சிறந்தபடி வாழ்வதாகும்' என்ற அமெரிக்க ஞானி எமர்சனின் பொன்மொழியை நினைவில் கொள்ள வேண்டும். வாழ்வில் முன்னேற வேண்டுமாயின் தன்காலால் நடந்து செல்ல வேண்டுமேயன்றி, பின்னொருவன் முதுகில் ஏறிச் செல்லலாகாது என்பதையும் அவன் மறத்தல் கூடாது.

### எதற்கு எது?

"உண்பதற்காக வாழாதே; வாழ்வதற்கே உண்" என்று கூறிப்போனான், ஒரு அறிஞன். ஆனால் மனித சமுதாயத்தில் எத்தனை பேர் இந்த மனப்பான்மையுடன் வாழ்கின்றனர்?

### சிக்கனம்

'சிறிய செலவுகளைத் தடுப்பதில்தான் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் மிகப் பெரிய கப்பல்களையும், மிகச் சிறிய ஓட்டைகள் கவிழ்த்துவிடும்' என்னும் பிராங்கலினின் பொன்மொழி, வாழ்க்கையை நன்முறையில் நடத்த விரும்புவோன் உள்ளத்தில் என்றென்றும் அழுத்தமாகப் பதிந்திருத்தல் வேண்டும். அத்துடன், 'வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்' என்ற நமது சிந்தனையாளன் சிந்திய சீரிய மொழியினையும் நினைவில் கொள்ளல் வேண்டும்.

நாம் வாழ்வதற்காக வந்தவர்கள். அத்துடன், வாழ்க்கையைக் கலையாகக் கருத வேண்டியவர்கள். இதனை மறப்பவர் கண்களுக்கு வாழ்க்கைப் பாதை பயங்கரப் பாதையாகத்தான் தென்படும்.

## திரு நபி விழா

சென்ஸபஸ்த்தியான் இளைஞர் முன்னேற்ற கழகத்தின் ஆதரவில்சென்ற 7-10-57-ல் தோழர் மு. சம்சுதீன் தலைமையில் திரு நபி விழாநடைபெற்றது. கீழ்க் காணும் தோழர்கள் நபியின் நற்போதனைகளைப்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள்—சலைதாசன், எஸ். சிவராமன், எஸ். எம். எம். இப்ராஹிம், எல். எம். எஸ். செய்யத் முஹம்மத் ஜனாப் பி. எம். அன்வரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.


உயர்ந்தது இமய மலை!
சிறந்தது தாஜ்மஹால்!
ஆனால் புகழ்பெற்றது
"எலைட் பினிஷ் ஜார்ஜட்"

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சிவகசிந்தாமணி ஆகியவை தமிழன்னையின் அழகின் அணிகலன்கள்

இன்றைய நவநாகரீக நங்கையர்களின் அழகின் அணிகலன் "எலைட்"

★ சிங்காரமான தோற்றத்தைத் தருவது......
★ பூவைப்போல்,பெண்களின்மென்மையான மேனியை மலரச் செய்வது......
★ தளிர் மேனி நங்கையர்களின் மேனியை மென்மையடையச் செய்தது......

"எலைட் பினிஷ் ஜார்ஜட்"

கன்னியர் விரும்பும் கண்கவர் வர்ணங்களிலும் எழிலான எடுப்பான டிசைன்களிலும், "எலைட்" பெற்றுக்கொள்ளலாம்.

சுருங்காது, நிறம் மங்காது, மடிப்புக் குலையாது என்பதற்கு 'எலைட்' உத்திரவாதம்பெற்றுள்ளது.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

| | |
|---|---|
| சில்லறை விற்பனை | மொத்த விற்பனை |
| இலாகா, | இலாகா, |
| மெயின் வீதி, | 26, கெய்ஸர் வீதி, |
| கொழும்பு. | கொழும்பு. |






இரத்தக் கோளாறுகளா?
தயங்காதீர்கள்!



மேற்படி இரத்தக் கோளாறுகள் யாவற்றையும், கிளார்க்ஸ் பிளட் மிக்ஸரை உட்கொள்வதன்மூலம் ஆரம்ப காலத்திலேயே சொஸ்தப்படுத்திவிடலாம். இரத்தச் சுத்திகரிப்புக்கு இன்றியமையாததொன்றென உலகப் பிரசித்திபெற்ற இந்த பழமையான நிவாரணி தனது இரத்தக் குழாயில் தங்கி நிற்கும் அசுத்தங்களால் ஏற்படக்கூடிய சகல தொந்தரவுகளையும் மிக லாவகமாக குணப்படுத்துகின்றது.

இந்த நிவாரணியை அருந்துவதன் மூலம் சாதாரண கீல்வாதம், கொப்புளம், வலியெடுக்கும் மூட்டுகள் மற்றும் இது போன்ற இரத்த சரும உபாதைகள் சொஸ்தமடையும்.

கிளார்க்ஸ்

CLARKE'S
BLOOD PURIFYING MEDICINE
BLOOD MIXTURE
REGD TRADE MARK

இரத்தச் சுத்திகரிப்பு நிவாரணி
பிளட் மிக்ஸர்

எல்லா வியாபாரிகளிடத்திலும் வில்லைகளாகவும் அல்லது திரவ பதார்த்தமாகவும் உண்டு.
எல்லா பெரிய மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள்:-
கொழும்பு ஏஜென்சீஸ் லிமிட்டெட்
355, டீன்ஸ் ரோட், கொழும்பு.
டெலிபோன்: 94211. தபால் பெட்டி: 913


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1957 நவம்பர் மாதம் 3-ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# மாபெரும் தவறு?

பாராளுமன்றத்திலிருக்கும் நமது தமிழ் பேசும் பிரதிநிதிகள் ஒரு மாபெரும் தவறு இழைத்து வருகிறார்கள் என்பதை நாம் மிகுந்த வருத்தத்துடன் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாக விருக்கிறோம். சுட்டிக்காட்டுவது மட்டுமல்ல அவர்களுடைய அலட்சியமான மனோபாவத்தையும் போக்கையும் பலமாகக் கண்டிக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

நமது தமிழ்த் தலைவர்கள் தமிழ் மொழியின் உரிமைக்காகவும், பெருமைக்காகவும் பொதுமேடைகளில் எழுந்து நின்று தொண்டை கிழியப் போராடுகிறார்கள். தமிழுக்கு சமஅந்தஸ்து வேண்டும் என்று கரடியாகக் கத்தி, காரசாரமாக வாதிடுகிறார்கள். ஆனால் நடைமுறையில், செயல்முறையில் அவர்கள் இன்னும் ஆங்கிலத்தின் பிடியிலிருந்து விடுபட்டவர்களாகக் காணப்படவில்லை.

வெறுமனே உரிமை கோருவதில் என்ன பிரயோசனம்? உரிமைகளும், சலுகைகளும், சமஅந்தஸ்தும் சட்டப்புத்தகத்தில் எழுதப்பட்டுவிட்டால் மட்டும் போதுமா? நாம் அவற்றை நாளிலும் பொழுதிலும் உபயோகித்து, பிரயோகித்து நிலைநாட்ட வேண்டாமா?

பாராளுமன்றத்தில் தமிழில் பேசலாம் என்ற உரிமை—சிங்களத்துடன் தமிழுக்கும் சமஅந்தஸ்து—வழங்கப்பட்டுத்தான் இருக்கின்றது. ஆயினும் நமது தமிழ் பேசும் பிரதிநிதிகளில் எத்தனை பேர் தமிழில் பேசுகின்றார்கள்? உள்ள உரிமையைக்கூட நடைமுறையில் நிலைநாட்டுகின்றார்கள்? உரிமை ஏட்டில் இருந்தால் போதும் என்று திருப்தியடைந்தவர்களாக ஆங்கிலத்தைத்தானே எப்போதும் கட்டியழுகிறார்கள். இப்படிச் செய்தால் தமிழ் மொழி வளர்ச்சியடையுமா? தமிழ் உரிமை பாதுகாக்கப்படுமா?

சிங்களப் பிரதிநிதிகள், அமைச்சர்கள் உட்பட, சிங்கள மொழியில் பாராளுமன்றத்தில் பேசுவதைப் பெருமையாகவும் கடமையாகவும்கொள்ளுகிறார்கள். ஆனால் தமிழ் பிரதிநிதிகள் "நாம் தமிழில் பேசினால் சிங்கள மந்திரிகளுக்குப் புரியாதே" என்று நொண்டிச் சாட்டுச் சொல்லுகிறார்கள். பெரிய தமிழ்த் தலைவர்கள் விடாப்பிடியாகத் தொடர்ந்து தமிழில் பேசி வந்தால் நிச்சயமாக மந்திரிகள் நீண்டகாலம் அப்பேச்சுக்களை அலட்சியம் செய்ய முடியாது. எப்படியும் கவனித்துப் பதிலிறுத்துத்தானாக வேண்டும். அப்படியில்லையென்றாலும், கொள்கையளவிலாவது எப்போதும் தமிழில் பேசுவதென்று முடிவு செய்துவிட்டு அப்படிப் பேசப்படுவதன் சாரத்தை ஆங்கிலத்தில் எடுத்துரைக்கலாம். கூடுமானவரை பிரதினமும் தமிழ் மொழி பாராளுமன்றத்தில் முழங்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் மொழியின் உரிமையைப் பாதுகாப்பது என்று பேசுவதெல்லாம் வெறும் வெட்டிப் பேச்சாகவே முடியும்.

தமிழ்ப் பிரதிநிதிகள் அதிகம் தமிழில் பேசுவார்களேயானால் ஜனப்பிரதிநிதிகள் சபையிலும் செனட் சபையிலும் அதிகப்படியான தமிழ் மொழிபெயர்ப்பாளர்களுக்கும், தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களுக்கும் வேலை கிடைக்க இடமுண்டு. இப்போது ஜனப்பிரதிநிதிகள் சபையில் இரண்டு தமிழ் மொழிப்பெயர்ப்பாளர்களும், ஒரேயொரு தமிழ்ச் சுருக்கெழுத்தாளரும்தான் வேலை பார்க்கின்றனர். இவர்களுக்கும் போதிய வேலை இல்லாமையால் இவர்களையே செனட் சபையிலும் கடமையாற்ற அனுப்புவது என்று ஜனப்பிரதிநிதிகள் சபைக் காரியாலய அதிபர் தீர்மானித்துள்ளார் என்று தெரிகிறது. சிங்களத்துக்கு ஒன்பது சுருக்கெழுத்தாளர்கள் கடமை பார்க்கின்றார்கள். தமிழுக்கு ஒரேயொருவர். அவரும் இனி ஜனப்பிரதிநிதிகள் சபையையும் செனட் சபையையும் கவனிக்கப்போகிறாராம். இது எப்படி முடியும்?

ஒரு சுருக்கெழுத்தாளர் எப்படியும் தொடர்ந்து பத்து நிமிடங்களுக்குமேல் சுருக்கெழுத்தில் குறிப்பெடுக்க முடியாது. எனவே பலர் மாறி மாறிக் குறிப்பெடுப்பதுதான் அனுஷ்டானத்தில் உள்ள வழக்கம். ஆங்கில சிங்களச் சுருக்கெழுத்தாளர்கள் மொத்தம் இருபது பேர்கள் இருந்து ஜனப்பிரதிநிதிகள் சபையில் இப்படித்தான் மாறி மாறி வேலை செய்கிறார்கள். ஆனால் இவ்வளவு வேலையையும் தமிழ் சுருக்கெழுத்தாளர் ஒருவர் மட்டும் எப்படிச் செய்ய முடியும் என்று நாம் கேட்கலாம்; மொழிபெயர்ப்பாளர் சுருக்கெழுத்தாளர் தொகையைக் கூட்டுங்கள், என்று நாம் அரசாங்கத்தை வற்புறுத்தலாம். அதன்மூலம் அதிகப்படியான தமிழ் பேசும் வாலிபர்களுக்கு வேலை கிடைக்கும்படி செய்யலாம். ஆனால் உள்ளவருக்கே போதிய வேலை இல்லாமல் இருக்கும்போது எப்படிக் கேட்பது? எப்படி வற்புறுத்துவது? எப்படி வேலை கிடைக்கும்படி செய்வது?

எல்லாவற்றிற்கும், நமது தமிழ் பேசும் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் அதிகம் அதிகம் தமிழ் மொழியில் பேசினால் அல்லவோ இது சாத்தியப்பட முடியும்!

அரசகரும மொழி இலாகாவில் தட்டெழுத்துச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள் சுயபாஷைகளில் நடைபெறுகின்றன. சிங்கள வகுப்புகளில் முப்பது நாற்பது மாணவர்கள் தவணைக்குத் தவணை பயிற்சி பெற்று வெளியேறுகிறார்கள். ஆனால் இம்முறை தமிழ் வகுப்பில் ஒரேயொரு மாணவர்தான் பயிற்சி பெறுகிறார் என்று தெரிகிறது. ஏன் இந்த இழிநிலை? இதுபற்றிப் பாராளுமன்றத்திலுள்ள ஒரு தமிழ்ப் பிரதிநிதியாவது ஆராய்ந்தறிய, அரசாங்கத்தை விசாரிக்க முற்பட்டாரா? இந்த நிலையில்தான் இந்த நாட்டில் தமிழ் மொழி தமிழ் பேசும் மக்களாலேயே வளர்க்கப்படுகிறது! தமிழ் மொழியின் உரிமை பாதுகாக்கப்படுகிறது!

இன்று பாராளுமன்றத்தில் தமிழ்ப் பெரும் கட்சியாக விளங்குவது தமிழரசுக் கட்சி. இதன் சிரேஷ்ட தலைவர்களான திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம், வி. ஏ. கந்தையா, என். ஆர். இராஜவரோதயம்போன்றவர்கள் முன்மாதிரியாக எப்போதும் தமிழில் பேசி வழிகாட்டக் கடமைப்பட்டவர்களாவார்கள். செனட் சபையிலும் செனட்டர் எஸ். நடேசன் போன்ற தமிழ் அபிமானிகள் தமிழில் பேசத் தயங்கக் கூடாது.

பாராளுமன்றத்தில் இவர்கள் தமிழில் பேசினால் மட்டும் போதாது. தங்களுடைய சகல காரியங்களையும்—அதாவது தமிழில் பேசுவது, தமிழில் எழுதுவது என்று—தமிழில் நடத்தி, தமிழ் இயக்கம் ஒன்றிற்கு ஆதரவு கொடுத்தால் ஒழிய தமிழ் உரிமைக்காக இவர்கள் பேசுவதும், வாதாடுவதும், போராடுவதும் எல்லாம் அரசியல் நோக்கோடு [illegible] என்று தமிழ்ப் பொதுமக்கள் சந்தேகிக்கும் காலம் வெகுவிரைவில் வந்து சேரக்கூடும் என்று [illegible]ரும்.

# விடுதலை பெற்று வீட்டில் நிற்பதற்குப் பெயர் பகிஷ்காரமா?

## திரு. ஜீ. ஜீ. யின் ஏமாற்றுப் பிரசாரம்

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள அராலி என்னுமிடத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தி பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்தார் என்றசெய்தியை நேயர்கள் தினப் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள். இந்தக் கூட்டம் எப்படி ஏற்பாடு செய்யப் பட்டது; எப்படி நடந்து முடிந்தது என்பதைப் பற்றியெல்லாம் நாம் இங்கு எடுத்துரைக்காமலே அது எப்படி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும்; எப்படி நடந்து முடிந்திருக்கும் என்பதை நேயர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். திரு. பொன்னம்பலத்தின் கடந்தகாலக் கூட்டங்களைப் பற்றி நாம் தொடர்பாகச் சுதந்திரனில் வெளியிட்டு வந்த செய்திகளின் மூலம், அராலிக் கூட்டமும், அதைத் தொடர்ந்து வரப் போகிற கூட்டங்களும் எப்படியானவை என்பதை யூகித்து அறிய மாட்டாதவர்கள் அல்லர் நமது நேயர்கள். வழக்கம் போல் அராலிக் கூட்டத்திற்கும் ஆனைப்பந்தியிலிருந்து காடையர்கள் கூட்டம் ஸி. வி-6616 இலக்க என். ஓ. பி. பஸ் வண்டியில் ஏற்றி வரப்பட்டது என்பதையும், கூட்டத்தின் போது கொடுக்கப்பட்ட கேள்வித் தாள் எதற்குமே திரு. பொன்னம்பலம் பதிலிறுக்க மறுத்துப் பின்வாங்கி விட்டார் என்பதையும் மட்டும் சொல்லி விட்டு மேலே செல்வோம்.

பிரஸ்தாப கூட்டத்தில் பேசிய ஒரு பேச்சாளர் இரண்டு பிரச்னைகளைக் கிளப்பினார் என்று தெரிகிறது. ஒன்று பாராளுமன்றப் பகிஷ்காரம்; மற்றது செனட்டர் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த யு. என். பி. ஆதரவு.

அவர் பின்வருமாறு கூறினாராம்: 'எங்கள் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருகிறார். அவர் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் பாராளுமன்றத்தின் படியில் கூட ஏறவில்லை. இதுவன்றோ எதிர்ப்பு! இதுவன்றோ நிலையான, நெறியான ஆட்சேபம்! திரு பொன்னம்பலம் அவர்களைப்போல இதர தமிழ்ப் பிரதிநிதிகளும், தமிழரசுப் பிரதிநிதிகளும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்திருந்தால் உலகம் அசந்து போயிருக்கும். கிழக்கே காலிக்கும் சூரியன் மேற்கே காலித்திருக்கும்! அப்போது தெரிந்திருக்கும் ஆட்சியாளர்களுக்கு தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பு எப்படிப்பட்டது என்பது. ஆனால் இந்தத் தமிழரசுத் துரோகிகளுக்குப் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கும் துணிவு ஏது?'' இப்படிப் பேசினாராம் அந்தப் பிரமுகர்! என்னே இவர் ஆராய்ச்சியின் திறமை!

திரு பொன்னம்பலம் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கிறார் என்று சொல்வது வெறும் வேடிக்கையான கூற்று மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்களை ஏமாந்த சோணகிரிகள் என்று எண்ணிக்கொண்டு செய்யப்படும் ஏமாற்றுப் பிரசாரமுமாகும்.

உண்மையில் திரு பொன்னம்பலம் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதானால் அவர் பேச்சுமூச்சின்றிப் பாராளுமன்றத்துக்குப் போகாமல் நின்றுவிட வேண்டும். இதனால் அவர் பதவி பறிபோனாலும் அதற்கு அவர் தயாராய் இருந்திருக்க வேண்டும். பின்னர் உபதேர்தலில் போட்டியிட்டுத் தமது செல்வாக்கை நிலைநாட்டித் திரும்பவும் பகிஷ்காரத்தை மேற்கொண்டிருக்க வேண்டும். இதை விடுத்து மூன்று மாதத்துக்கு ஒருதடவை அவருக்கு வேண்டிய ஒரு அங்கத்தவரைப் பிடித்து பாராளுமன்றத்தில் 'லீவு' கோரி விடுதலைப் பிச்சை வாங்கிக்கொண்டு வீட்டில் நிற்பதற்கும், கிரிமினல் வழக்குகளில் தெரிபடுவதற்கும், ஓய்வு நேரங்களில் பொதுக்கூட்டம் போடுவதற்கும் பெயர் ஒருபோதும் "பகிஷ்காரம்" என்று இருக்க முடியாது.

இப்படியான வெட்கங்கெட்ட பகிஷ்காரத்தை நடத்துவதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு தற்கொலை செய்துகொள்வது மேலானது. என்று சொன்னால் அது தப்பாகாது.

இந்தமாதிரியான காரியத்தோடு கூடிய பகிஷ்காரத்தைச் செய்ய தமிழரசுக் கட்சி எப்படி ஒருப்பட முடியும்? திருவாளர் பொன்னம்பலத்தின் இந்த நவீன பகிஷ்காரத்தை ஜயசூரியா-ராஜரத்ன கோஷ்டியாரின் குளுக்கோஸ் உண்ணா விரதத்திற்குத்தான் ஒப்பிடலாம்.

பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதாகச் சொல்லும் இந்த வீரர்தான் பாராளுமன்றத்தில் லீவு பெற்றுக்கொண்டு, அரசாங்கப் பாராளுமன்றத்து கோஷ்டியுடன் ஒன்று சேர்ந்து, அரசாங்கத்தின் உப செவில் ருஷியா சென்றுவந்தார் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டால் அவருடைய பகிஷ்காரம் செல்லாக் காசுக்கும் பெறுமதியற்றது என்ற உண்மை அம்பலமாகும்.

நடந்தேறிய செனட் சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி யு. என். பி. யிடம் ஆதரவு பெற்றது உண்மையா? அப்படியானால் எவ்விதம்? அப்படிப் பெற்றது சரியா? கொம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கக் கட்சியிடம் உதவி பெற்றதற்கும் இதற்கும் ஒற்றுமையுண்டா என்ற விவரங்களை அடுத்த வாரம் இப்பத்திகளில் ஆராய்வாம்.

# ஏழு லட்சம் குழந்தைகளுக்காக கவலைப்படும் கல்வி அமைச்சர்

# வனத்தமுல்லைப் பாடசாலைத் தமிழ்ப் பிரிவை மூடுவதேன்?

## தமிழரசுத் தலைவர்களிடம் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் புகார்

(சுதந்திரன் நிருபர்)

"ஏழு லட்சம் குழந்தைகள் கல்வி பயிலாதிருப்பதன் காரணத்தை ஆராயக் கமிஷன் நியமிக்கும் கல்வி மந்திரி தமிழ்ப் பாடசாலைகளை மூடிப் பாடசாலைக்கு செல்லாத மாணவர் தொகையை மேலும் அதிகரிப்பதேன்? அப்படியானால் திரு. தஹநாயகா கவலைப் படுவது பாடசாலை செல்லாதிருக்கும் சிங்கள மாணவர்களைப் பற்றி மட்டும் தானா?" என்ற கேள்வி கொழும்பிலுள்ள வனத்தமுல்லைத் தமிழ்ப் பாடசாலை சம்பந்தமாகக் கிளப்பப் பட்டிருக்கிறது.

அகில இலங்கையிலும் கல்வி பயிலக் கூடிய வயதுடைய ஏழு லட்சம் குழந்தைகள் கல்வி கற்கப் பாடசாலைகளின்றிக் கஷ்ட முறும் இத்தருணத்தில்—முக்கியமாகக் கொழும்பில் வருடா வருடம் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் பாடசாலைகளில் இடமின்றித் தவிக்கும் இந்த நேரத்தில்—கொழும்பில் உள்ள வனத்தமுல்லை அரசினர் பாடசாலையின் தமிழ்ப் பகுதியை மூடிவிடும்படி கல்வி மந்திரியார் ஆக்ஞை பிறப்பித்துள்ளது ஆச்சரியமும் அநீதியும் நிறைந்த செயலாகும் என்று அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கருதுகிறது.

கொழும்பில் வனதமுல்லை என்னுமிடத்திலுள்ள அரசினர் சிங்களப் பாடசாலையோடிணைந்திருக்கும் தமிழ்ப் பிரிவை 1-1-1958 முதல் மூடி விடக் கல்வி மந்திரி உத்தரவிட்டுள்ளதையறிந்த அப்பாடசாலைத் தமிழ்ப் பெற்றோர்கள் தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# “தமது கட்சியின் தற்கொலைக்கு ஆதரவு திரட்ட திரு. பொன்னம்பலத்துக்கு அவகாசம் கொடுத்திருக்கிறோம்

## நம்பிக்கையை இழந்த அவரால் இனி மக்களைத் தம்பாலிழுக்க முடியாது

### ஒப்பந்தம் சரிவர அமுல் நடத்தப்படாவிட்டால் காந்தியைப் பின் பற்றி போராட்டம் தொடங்குவோம்”

### கந்தரோடையில் கு. வ., அ. அ. முழக்கம்

“திரு ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு கொள்கையொன்றுண்டாயின் அது தமிழரசுக் கட்சியை அதன் ஒவ்வொரு அம்சத்திலும் கண்டிப்பதுதான்.

திரு பொன்னம்பலம் எவ்வகையிலும் கண்டித்துப் பிரசாரஞ் செய்து தமது கட்சியின் தற்கொலைக்கு ஆதரவு திரட்டப் போதிய அவகாசம் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு நீண்ட காலம் நாம் அவருடைய பிரசாரத்திற்கு இடங்கொடுத்தும் மக்களின் நம்பிக்கை இழந்த அவர், மக்களைத் தம்வசம் திரட்டுவது இயலாதது”

வட்டுககோட்டைப் பிரதிநிதி திரு அ அமிர்தலிங்கம் சமீபத்தில் சர்வதேச பார்லிமென்டரி மாநாட்டுக்குச் சென்று தமிழ் முழக்கம் செய்து இலங்கையில் சிங்களவர்கள் மட்டுமல்லாது தமிழர்களும் வாழ்கிறார்கள் என்பதை உலகறியச் செய்ததற்காக அன்னாரைப் பாராட்டுமுகமாக கந்தரோடையில் நடந்த கூட்டமொன்றில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு கு. வன்னியசிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதே கூட்டத்தில் தமக்கு பாராட்டு வழங்கியதற்கு பதிலளித்து திரு அமிர்தலிங்கம் பேசுகையில், “திரு பொன்னம்பலம் சுவிட்ஸர்லாந்துதேசத்திற்குப்போய் சமஷ்டி ஆட்சி நடைபெறும் விதத்தைப் படித்திருப்பாரேயாயின் இலங்கையின் ஐந்தின் மூன்று பாகவிஸ்திரணத்தைக்கொண்ட அந்நாட்டில் எவ்விதம் மூன்று வெவ்வேறு மொழிகளைப் பேசும மக்கள் சமஉரிமையுடன் சமாதானமாக வாழ்கின்றனரென்பதையும் எவ்விதம் இலங்கையிலும் சமஷ்டி ஆட்சியின்கீழ் சிங்களவரும் தமிழரும் சமத்துவமாக வாழலாம் என்பதையும் நன்கு படி து ஓர் சமஷ்டிவாதியாகவே மாறியிருப்பார்” என்று கூறினார்.

திரு. வன்னியசிங்கம் தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:-

#### ஒப்பந்தம்—முதற்படி

“தமிழர்கள் பாரம்பரியமாக இருந்து வந்த தமது பகுதியை என்றும் பெருமையுடன் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய முறையிலும், அதனால் தமிழர் தமது மொழி, பண்பாடு ஆதியனவற்றில் திளைத்துத் தனிப் பெருமையுடன் என்றென்றும் வாழக் கூடிய வசதியையுண்டு பண்ணிய ஒப்பந்தமே தமிழரசுக் கட்சி பிரதமர் பண்டாரநாயகாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம்.

#### சுமை, சுமைதாங்கியில்

“ஒப்பந்தம் சட்டமாக்கப்பட்டு நடை முறைக்குக் கொண்டு வரும் வரை எமது போராட்டச் சுமையைச் சுமை தாங்கியில் வைத்து விட்டுக் களைப்பாறுகிறோம். பின்பு திட்ட மிடப் பட்ட போராட்டச் சுமையை நாமே சுமக்கப் போகிறோம். சுமையுடன் பின் ஒரு தடங்கலுமில்லாமற் சேர வேண்டிய இடம் போயே சேருவோம்.”

இவ்வாறு திரு. வன்னியசிங்கம் பேசி முடித்தார்.

#### செய்த தவறு

திரு. அமிர்தலிங்கம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கைத் தமிழர் இதுவரை செய்த தவறு முக்கியமாகத்தாமும் இலங்கைப் பிரஜைகளுள் முக்கிய அங்கம் வகிப்பவரென்பதை உலகறிய எடுத்துக் காட்டாததே. ருஷ்சியாவிற்கு சென்று திரும்பிய திரு ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழரைப் பற்றி ருஷ்யருக்குத் தெரிய வைத்தாரா?

#### அழிவைக் குறிக்கும் பசப்பு வார்த்தை

“திரு பொன்னம்பலம் ஒப்பந்தத்தைக் கண்டிக்கிறார் அவரின் கண்டனங்கள் அர்த்தமற்றவை. நாம் அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தீமையை அளிக்கும் வழியானல் இதுவரை அவர் ஏன் ஒரு மாற்றுவழியைக் காட்டவில்லை? அவ் வழியைக் காட்டினல் அது சிறந்த வழியானல் நாமும் அவரை பின்தொடருவோம். ஒப்பந்தத்தைக் கிழித்துவிட்டு வந்தால் மாற்றுத் திட்டம் கொடுப்பேனென்பது அழிவைக் குறிக்கும் பசப்பு வார்த்தை! 1947-ம் ஆண்டில் அவரைப் பின்தொடர்ந்த தமிழ் மக்களை நட்டாட்டில் விட்டுத் தாம் சேனநாயகாவின் மந்திரி சபையில் தமது சுய தேவையை மட்டும் பூர்த்தி செய்ததை இன்னும் அவர்கள் மறக்கவில்லை.

#### காந்தி செய்ததை நாமும் செய்வோம்

“காந்தி மகான் லின்லித்கோ பிரபுவுடன் ஓர் இடைக்கால ஒப்பந்தஞ் செய்ததை மக்கள் கண்டித்தனர். வெள்ளையர்கள் அவ்வொப்பந்தத்தை மீறியபடியால் அவர் அதை முறித்துவிட்டுத் தொடர்ந்து தமது திட்டப்படி போராட்டத்தை நடத்தினர். அதேபோல் நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் முறையாக அரசாங்கம் நடை முறையிற் கொண்டு வராவிடில் அதை உடனே முறித்தெறிந்துவிட்டு தமிழரசுக் கட்சியின் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை யெடுப்போம்.”

இவ்வாறு திரு அமிர்தலிங்கம் பேசி முடித்தார்.

# சிங்கள ‘சீல்’கள் வாபஸ் பெறப்பட்டன

## மன்னார் பிரதிநிதியின் ஆட்சேபனை அளித்த வெற்றி

மன்னார் கச்சேரிக்கு சிங்கள சில்கள் அனுப்பப் பட்டதாகவும், இதை ஆட்சேபித்து மன்னார் பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோன் உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கையினல் இந்த சிங்கள சில்களை வாபஸ் பெற்று விட்டு தமிழ் சில்களை அனுப்புமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

மன்னார் கச்சேரியின் மாகாண அதிபரின் பெயரையும் பதவியையும் குறிக்கும் ரப்பர் முத்திரைகள் சிங்கள மொழியில் செய்யப்பட்டு கடந்த வாரம் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன. இந்த சீல்கள் மன்னார் கச்சேரியை அடைந்ததும் அங்கு பரபரப்பு ஏற்பட்டதாகவும் விஷயம் மன்னார் பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோனின் கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டதாகவும் அறியப் படுகிறது. உடனே திரு. அழகக்கோன் இது சம்பந்தமாகத் தமது ஆட்சேபனையைத் தமிழரசுக் கட்சியின் மேலிடத்துக்குத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை சமரஸ உடன்படிக்கைக்கு முரணனது என்ற உண்மையைத் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமர் காரியாலயத்துக்குச் சுட்டிக் காட்டினர். உடனடியாக அ[illegible] மேற்படி சிங்கள [illegible] முத்திரைகளை மன்னா[illegible]ருந்து வாபஸ் செய்து விட்டு [illegible] முத்திரைகள் அனுப்புமாறு கட்டளை பிறப்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

## ஏழு லட்சம்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரில் சென்று முறையிட்டுள்ளார்கள். இந்தத் தமிழ்ப் பிரிவில் சுமார் 150 மாணவர்கள் படித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவாளர்கள் செல்வநாயகம், வி. ஏ. கந்தையா, ஆகிய இருவரும் சமீபத்தில் கல்வி அமைச்சரைக் கண்டு பிரஸ்தாப பாடசாலையை மூட வேண்டாமென்றும், தனிக் கட்டடத்தில் தனிப் பாடசாலையாக நடத்தும்படியும் கேட்டனர் என்று தெரிய வருகிறது. தொகுதி அங்கத்தவரான திரு பெர்னாட் சொய்ஸாவும் இவ்விஷயத்தில் ஒத்துழைப்பதாகத் தமிழ்ப் பெற்றோருக்கு வாக்களித்துள்ளார் என்றும் அறியப் படுகிறது.

# மணியோடருக்கு பணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் காலியைச் சேர்ந்த வந்துறம்பே என்ற தபால் நிலையத்திலிருந்து வந்த மணியோடரில் சிங்கள முத்திரை பொறிக்கப் பட்டிருந்தது காரணமாக “அட்வைஸ்” பத்திரத்துடன் அதை ஒத்துப் பார்த்து எங்கிருந்து அனுப்பப் பட்டது என்பதை அறிய முடியாமல் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தபால் நிலைய அதிபர் சிரமப் பட்டாரெனத் தெரிகிறது.

### இலாகாவுக்கி திருப்பி அனுப்ப நேரிடலாம்

இந்தமாதிரிச்சிரமம்தரும் மணியோடர், போஸ்டல் ஓடர் என்பன இப்போது தினமும் யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. சிங்கள முத்திரையுடன் வரும் அவற்றைச் சரியான விளக்க மின்றி மாற்றிப் பணம் கொடுப்பது முடியாத காரியமாயிருப்பதால் தபால் இலாகாவுக்கு அட்வைஸ் முதலானவற்றைத் திருப்பி யனுப்பி அவை எந்தத் தபால் நிலையத்திலிருந்து வந்தவையென விபர மறிய வேண்டிய நிர்ப்பந்தம் தங்களுக்கு எதிர் காலத்தில் ஏற்படலாமெனச் சம்பந்தப் பட்ட ஊழியர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

### சுகாதார இலாகா

தமிழ் மொழியைப் புறக்கணித்துச் சிங்களத்துக்கு முதலிடம் கொடுப்பதில் சுகாதார இலாகாவையும் முந்திக் கொண்டு வருகிறது தபால் இலாகா. இப்போது க்ஷயரோக நிவாரண உதவி கோரி விண்ணப்பிப்பவர்களுக் கெல்லாம் வரும் கடிதங்கள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதப் பட்டனவாகவே யிருக்கின்றன. அவற்றில் மருந்துக்குக் கூடத் தமிழ் இடம் பெறவில்லை. இதனல் விண்ணப்பதாரர்கள் கடிதத்தைப் படித்தறிவதற்கு சிங்களம் அல்லது ஆங்கிலம் தெரிந்தவர்களின் உதவியை நாட வேண்டியிருக்கிறது.


மன்றல் அழைப்பு

நிகழும் 5-11-57 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணி முதல் இரவு 12 மணிக்குள்ளாக கொழும்பு கொள்ளுப்பிட்டி கிறீன் பாத்திலுள்ள பெண்கள் தோழமைக் கழக (G. F S. Hall) மண்டபத்தில் எமது புதல்வன்

திருநிறைச் செல்வன் புரட்சியாளனுக்கும்

திரு. வி. சுப்பையா அவர்களின் புதல்வி

திருநிறைச் செல்வி அன்னபூரணத்திற்கும்

நடைபெறும் மன்றல் விழாவிற்கு நண்பர்களும், உறவினர்களும் சமுகந்தந்து மணமக்களை வாழ்த்திடுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவ்வண்ணமே விரும்பும்: வி. அ. முனியாண்டியும் பாரியாரும்.

மு. அ. சிதம்பரம் அ மூ வெள்ளைக்கண்ணு,
ச. அழகன் (உணவு உற்பத்தி இலாகா)
அ. மு. துரைசாமி (சுதந்திரன் அலுவலகம்)

ஆசிரிய கலாசாலை

பிரவேசப் பரீட்சை 1958

அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் பயில்வதன்மூலம் மேற்படி பரீட்சையில் சுலபமாகத் தேறி நீங்களும்

ஒரு ஆசிரியராகலாம்!

எனவே காலந் தாழ்த்தாது உடனே சேருங்கள்

★ பரீட்சை விவரம்
★ பரீட்சைப் பெறுபேறு
★ புதிய பாடத் திட்டம்

வேண்டுவோர் விண்ணப்பித்தால் இலவசமாக அனுப்பப்படும்.

அற்லஸ்ஹோல், தபால் பெட்டி: 649.
போன்: 9759. கொழும்பு.

நவீன முறையான

சரித்திர பாடப் புத்தகம்

தற்கால படிப்பித்தல் விதி முறைகளுக்கு ஏற்க, அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, சமயம், போக்குவரவு என்னும் புதிய முறைவைப்பில் சரித்திரத்தை விளக்கும் மாணவருக்கேற்ற நூல்.

இதோ வெளிவந்து விட்டது!

“இலங்கையும், உலகமும்”

ஆக்கியோன்:
வித்துவான் அ. சந்தியாபிள்ளை

மாணவர் சரித்திரக் காட்சி 6ம் வகுப்பு ரூ. 2-00
மாணவர் சரித்திரக் காட்சி 7ம் வகுப்பு ரூ. 2-00

கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
சஞ் ஜோசையப்பர் அச்சகம், பெரிய தெரு, யாழ்ப்பாணம்.

குறிப்பு: தொகையாக வாங்குவோர்க்குக் கழிவுண்டு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# ஐந்து ரூபாய் நோட்டு

— மு. தளையசிங்கம்

அந்த ஊர் அம்மன் கோவிலில் அன்று எட்டாந் திருவிழா. இரவு நேரம். கொட்டுமேளம் ஒலிக்க மின்சார தீபங்கள் எங்கும் ஒளி பரப்பிக்கொண்டிருக்க கோயில் வீதியெல்லாம் பட்டப் பகல்போலக் காட்சி கொடுத்தது.

மக்கள் கூட்டம் அங்கு கடல்போலத் திரண்டிருந்தது. அம்மனின் அருளைப் பெற்றுச் செல்வதற்காக மட்டும் அவ்வளவு கூட்டம் கூடினதாகச் சொல்ல முடியாது. என்றுமில்லாதது போல் அன்று ஐந்து கூட்டம் மேளமும் அத்துடன்யாரோ பெரியவர் ஒருவரின் கதாப் பிரசங்கமும் இருப்பதாக எட்டாந் திருவிழா அறிக்கை அறிவித்தது. இதனுற்ருன் போலும் அங்கே அவ்வளவு கூட்டம்!

கோயிலின் உள்முற்றம் அகண்டு பரந்து காணப்பட்டது. நாலுபக்கமும் கயிறு கட்டி நடுவே ஒரு சதுர அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கேதான் ஐந்து கூட்ட மேளக்காரர்களும் அமர்ந்து அழகாய் ஜமாய்த்துக் கொட்டிக்கொண்டிருந்தனர். அந்தத் தாளத்தில் தங்களை மறந்து இலயித்திருந்தது அடியார்களின் கூட்டம்.

கூட்டத்திலே ஒருவனுய் நானும் என் நண்பர்களுடன் அமர்ந்திருந்தேன். பெரிய தூணென்றின் அடித்தளத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அக்கூட்டத்தினிடையே ஒரு சிறு கூட்டத்தை அமைத்துக்கொண்டிருந்தோம். "சத்தம் போட வேண்டாம்," "சும்மா இருந்து பார்க்க முடியாதா?" என்று அடிக்கடி நம் பின்னுலிருந்து வெளிக்கிளம்பும் சொல்லம்புகளையும் பொருட்படுத்தாது நம்மிடையே அடிக்கடி ஒரு சிறு கதாப்பிரசங்கத்தையும் நடத்திக்கொண்டிருந்தோம்.

எதிர்த்திசையில் சிறு குழந்தை ஒன்று கோரமாய்க் கத்தி பின்னணி இசைத்தது. எட்டிப் பார்த்தேன்.

அங்கே ஒரே பெண்கள் கூட்டம். பட்டுப் பாவாடை தொடக்கம் பொட்டுஜோர் ஜட் சேலைவரை, இரட்டைப் பின்னல் தொடக்கம் மொட்டு முல்லைக் கொண்டைவரை உள்ள எத்தனையோ ரகங்கள் கண்ணுக்குத் தெரிந்தன. எல்லோரும் மேளத்தின் தாளத்தில் மெய்மறந்திருந்தனர். நுனிப்புல் மேய்வதுபோல் அவர்களைப் பார்த்துக் கொண்டு சென்ற என் கண்கள் ஓரிடத்திற்கு வந்தவுடன் குத்தி நின்றுகொண்டன.

அங்கே, எங்களைப்போல் ஒரு தூணின் அடித்தளத்தின் மேல் ஓர் ஆரணங்கு அமர்ந்திருந்தாள். அவள் மட்டும் அந்தத் தாளத்தில் மயங்கி இருப்பதாய்த் தெரியவில்லை. எதிர்ப்புறத்தில் இருக்கும் ஆண்கள் கூட்டத்தில் அங்குமிங்குமாய் எதையோ தேடுவதைப் போல் தன் கண்களைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

காணுத பொருளொன்றைத் தேடிய அவளது நயனங்கள் என் கண்களைச் சந்தித்துக்கொண்டன. அதன்பின் அவற்றில் அசைவொன்றும் ஏற்படவில்லை. வைத்த கண் வாங்காமல் அவள் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஒன்று இரண்டென நிமிடங்கள் பல கழிந்தன. இன்னும் அக்கண்கள் என்னைவிட்டு அசையவில்லை. எனக்கோ என் கண்கள் கூசுவதுபோலிருந்தன. தலையைத் திருப்பி நிலத்தை நோக்கிக்கொண்டேன். அங்குந்தான் அந்த அழகிய கண்கள் என்னை அவதிக்குள்ளாக்கின. அந்தச் சுந்தரி அங்கும் இருந்து என்னை நோக்கிச் சிரிப்பதுபோலிருந்தது. இதயம் ஏனோ என்றும் இல்லாததுபோல் துடித்துக்கொண்டது.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல" என்று வள்ளுவன் என் காதில் வந்து குசுகுசுப்பது போலிருந்தது.

"அண்ணலும் நோக்கினுன், அவளும் நோக்கினுள்" அதில் காதல் பிறந்துவிட்டதாம் காதல்! என்று நான் பள்ளிக்கூடத்தில் குதர்க்கம் பேசுவேனே அது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை அப்போதுதான் உணர்ந்துகொண்டேன்.

மீண்டும் அவளை நோக்கினேன். அப்போதும் அவள் என்னையே பார்த்தாள். அந்த மதிவதனத்தில்தான் எத்தனை பிரகாசம்! அவளின் கொவ்வை இதழ்கள் ஒருபக்கம் கோணின. அந்தப் புன்முறுவலில்தான் எத்தனை போதை! அது என்னைக் கொல்லாமல் கொன்றது. அவளின் கருவிழிகள் 'வா, வா' என்று என்னை அழைத்துக்கொள்வதுபோல் படபடத்துக்கொண்டன. நான் எங்கு இருக்கிறேன் என்பதையே மறந்து அந்த மோகனப் பார்வையில் மனதைப் பறிகொடுத்து இனந்தெரியாத ஓர் உலகில் மிதந்துகொண்டிருந்தேன்.

நாதஸ்வரம் தனை மறந்து பொழிந்தபோதும். "ஆகா! எப்படி வாசிக்கிறான்!" என்று நண்பனொருவன் தன்னை மறந்து கூறினன்.

நானும் என்னை மறந்து "ஆகா, என்ன அழகு!" என்று சொல்லிக்கொண்டேன், அவளின் மேல் வைத்த பார்வையை எடுத்துக்கொள்ளாமலேயே!

நண்பர்கள் இன்னும் ஏதேதோ சொல்லிக்கொண்டனர். "ஓ", "ஆம்" என்று ஏதோ வாயில் வந்ததை நானும் சொல்லித் தலையசைத்துச் சமாளித்துக் கொண்டேனே தவிர அவர்கள் என்ன சொன்னுர்கள், எதைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள் என்றுதெரியாது. தூணுடன் சாய்ந்துகொண்டு தன் கருவிழியால் மொழிபேசும் அம்மங்கையைப்பற்றிய சிந்தனையில் மனதைப் பறிகொடுத்த எனக்கு எங்கே அவர்கள் பேசுவது புரியப்போகிறது?

மேளக் கச்சேரி முடிவடைந்துவிட்டது. எல்லோரும் அலுப்புத்திர அசைந்துகொண்டனர். அவளும் என்னைப் பார்த்தவண்ணம் தன் கைகளைத் தலைக்குமேல் தூக்கிச் சோம்பல் முறித்துக் கொண்டாள். அப்போது அவளின் ஜக்கட்டையும் சாரியையும் மீறி விம்மி எழுந்த மார்பகங்கள் என்னை என்னவெல்லாமோ செய்தன.

செய்வதென்னவென்று தெரியாது தடுமாறும் போது அவள் மெல்லச் சிரித்தாள். முல்லைத் தோட்டமே அந்த மோகனச் சிரிப்பில் மின்னி மறைந்தது. என்னுலேயே புரிந்துகொள்ள இயலாத மயக்கம் ஒன்று என்னை ஆட்டி அசைத்தது. சொல்லத்தெரியாத வெட்கம் என்னைப் பிய்த்துப் பிழிந்தது.

நண்பர்களின் அரட்டையிலே என்னைப் புகுத்திக் கொள்ளமுயன்றேன். ஆனுல் முடியவில்லை. ஏனே என்னை அறியாமலேயே என் கண்கள் அத்தூணண்டை நாடின.

அவளுக்குந்தான் அதே தவிப்புப் போலும்! அருகிலுள்ள பெண் ஒருத்தியுடன் ஏதோ பேசுவதும் என்னைக் கடைக்கண்ணுல் பார்ப்பதுமாய் இருந்தாள். தூணின் தளத்தைவிட்டு இறங்கி இப்போ நிலத்தில் இருந்துகொண்டாள். தான் என்னைப் பார்ப்பதை மற்றவர்கள் பார்த்துவிடுவார்களோ என்ற பயமாயிருக்கலாம் என்று யூகித்தேன்.

கதாப் பிரசங்கம் தொடங்க இன்னும் சில நிமிடங்களே இருந்தன. ஆனுல் அதை அவள் எதிர்பார்த்திருப்பவள்போல் காணப்படவில்லை. அங்குமிங்கும் அசைந்து அங்கு இருப்பது ஏதோ அசௌகரியமாய் இருப்பதாகக் காட்டிக் கொண்டாள்.

எனக்குந்தான் இருப்புக் கொள்ளவில்லை. அந்தரங்கத்தில் அவளுடன் கொஞ்சு மொழி பேச முடியாதா என்று ஏங்கித் தவித்தேன். அந்தக் கண்ணுடிக் கன்னங்களை தொட்டு மகிழ என் கைவிரல்கள் துடியாய்த் துடித்தன. தேன் சுரக்கும் அக்கொவ்வை இதழ்கள், பிறையை ஒத்த அவளின் நெற்றியிலே தவழும் அந்தக் கேசச் சுருள்கள், வளையல்கள் குலுங்க வளைந்தாடும் அவளின் தளிர்க் கரங்கள், சொல்லப்போனுல் அவளின் மேனியின் ஒவ்வொரு அங்க அசைவும் என்னை அவளின் அடிமையாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன.

என்னை மறந்த நிலையில் நான் இருக்கும்போது, அவள் மெல்ல எழுந்து கூட்டத்தை விட்டு அகன்று சென்ருள். போகும்போது கடைக் கண்ணுல் என்னைப் பார்த்தாளே ஒரு பார்வை! அது என்னைத் தன்னுடன் 'வா' என்றழைப்பதுபோல் இருந்தது. நல்ல காலம் அதை என் நண்பர்கள் பார்க்கவில்லை.

கதாப்பிரசங்கம் எனக்குக் கசந்தது. அவள் சென்ற திசையையே என் கண்கள் நோக்கி நின்றன. அவளுடன் ஏதோ அளவளாவ வேண்டும்போல் என் மனம் துடித்தது. மெல்ல எழுந்தேன். ஐந்து நிமிடங்களுக்குள் திரும்பிவிடுவதாக நண்பர்களிடம் சொல்லி விட்டு அவள் சென்ற திசையில் நானும் சென்றேன்.

அதிக தூரம் சென்றிருக்க மாட்டேன். அவள் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் அந்த மெல்லிய இருட்டில் அசைந்தாடிச் சென்றுகொண்டிருப்பதைக் கண்டேன். நான் அவளைத் தேடிச் செல்வேன் என்று அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். என்னைக் கண்டவுடன் தன் நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டாள். என் உடல் முழுவதும் ஒருவித நடுக்கம் ஏற்பட அவளை நெருங்கினேன். அவள் நாணிக் கோணவில்லை. எனக்கோ பேசுவதென்னவென்று தெரியவில்லை. என் தொண்டைக்குள் ஏதோ புகுந்துகொண்டதுபோல் தவித்தேன். என் தவிப்பை அவள் உணர்ந்தாள் போலும்!

"அதிகமில்லை ஒரு ஐந்து ரூபா நோட்டுத் தானுங்க" என்ருள் சர்வசாதாரணமாக.

என் கண்முன்னே கோயில் தலைகீழாகச் சுற்றியது. மின்சார விளக்குகள் மின்னி மின்னிச் சுழல என்னை ஏதோ அதள பாதாளத்தில் அடித்துத் தூக்கி எறிந்தாற் போலிருந்தது. ஒருவாறு என்னைச் சமாளித்துக் கொண்டு திரும்பி நடக்க முயன்றேன். அப்போது அவள்,


"என்னங்க புதுசுபோலிருக்கே! அதுதானுங்க என் வழமையான சார்ச்" என்ருள். அடுத்து நான் வைத்த அடி என் நண்பர்கள் மத்தியில்தான் வைத்தேன் போலும். அவ்வளவு வேகமாய் அந்த இடத்தைவிட்டு ஓடினேன்.

"என்னடா இப்படி வியர்த்து நடுங்கி ஓடி வருகிருய்?" என்று நண்பர்கள் வினவினுர்கள்.

அவர்களிடம் எதைச் சொல்வது—வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பிய என் பேதமையைச் சொல்வதா அல்லது பெண்களில் இத்தகைய பேய்களும் இருக்கிருர்கள் என்ற வெட்கக்கேட்டைச் சொல்வதா?

"சீ, ஒன்றுமில்லை. சோம்பல் முறிக்க சற்று உடற்பயிற்சி செய்தேன். அவ்வளவுதான்" என்று சொல்லிச் சமாளித்துக்கொண்டு வீட்டிற்கு அழைத்துச் சென்றேன் அவர்களை.

போகும் வழியில் உலகத்தை மறந்து சென்ற இரு உருவங்களைச் சுட்டிக்காட்டி "ஆகா, என்ன அன்னியோன்னியமாகச் செல்கிருர்கள் அந்தத் தம்பதிகள்" என்று நண்பன் ஒருவன் வியந்து கூறினன். கேவலம் ஐந்து ரூபாய்நோட்டு முதல் போட்டு தற்காலிகமாகத் தம்பதிகளானவர்கள் அவர்கள் என்பதை அவன் எப்படி அறிவான்?

எவரி 5 அந்தர் மேசைத் திராசு

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும்.

கே.என். அப்துல்காதர் ராவுத்தர் &கம்பெனி
312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10

பிளாஸ்டிக் மழைக் கோட்டுகளை வாங்கிப் பாவியுங்கள்

விமான அடையாள முள்ள சிறந்த ரகம்

தலை மூடிய பட்டியுடன் சேர்த்து எல்லா நிறங்களிலும் கிடைக்கும்.




| எண் | நீளம் | பருமன் | விலை |
|---|---|---|---|
| 1 | 22" | 34" | ரூ 3-75 |
| 2 | 26" | 36" | ரூ 4-00 |
| 3 | 27" | 38" | ரூ 4-75 |
| 4 | 31" | 47" | ரூ 5-25 |
| 5 | 38" | 52" | ரூ 5-75 |
| 6 | 41" | 58" | ரூ 6-50 |
| 7 | 42" | 58" | ரூ 7-00 |
| 8 | 46" | 60" | ரூ 8-00 |
| 9 | 52" | 64" | ரூ 9-00 |

மெக்கி ஸ்டோர்ஸ்

கொழும்பு—கண்டி—காலி—ரத்னபுரி
பதுளை—குருணுக்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் : 3

சென்ற வாரத் தொடர்ச்சி

# ஆதியிலிருந்த இரண்டே இரண்டு கண்டங்கள் இணைந்ததன் விளைவு என்ன?

## இமாலயம், ஆல்பைன் மலைகள் உண்டாகிய ருசிகரமான விபரம்

## பூமியின் நீர், நிலப் பரப்புகள்

பாறைப் பிரதேசங்கள் எல்லாம் ஒரேமாதிரி இருப்பதில்லை. மிருதுவான பாறைகளும், கடினமான பாறைகளும் மாறி மாறி அமைந்துள்ளன. இவ்விடங்களில் ஆறுகள் தோன்றும்போது, அவற்றின் தோற்றம் பள்ளத்தை நோக்கியே அமைந்துள்ளன. பிறகு கிளைநதிகள் மிருதுவான பாறைகளிலேயே அமைகின்றன. இம்மாதிரித் தோன்றும் வகைக்கு 'டிரெல்லிஸ் பாட்டர்ன்' (Trellis pattern) என்று பெயர். இவ்வாறு கிளைகளும் உபகிளைகளும் தோன்றி, ஆழத்திலும், அகலத்திலும் அதிகரிக்கின்றன; இத்தண்ணீர் ஏரிகளிலோ, கடலிலோ போய்க் கலந்தவுடன் அந்த ஆறு தான் தோன்றிய இடத்திற்கும் மேலே தன் உற்பத்தி ஸ்தானத்தை நீட்டிக்கொண்டே போகிறது. ஆழம் பூமிக்கடியில் ஓடும் தண்ணீர் மட்டம் வரை செல்கிறது. இவ்வாறு நூற்றுக்கணக்கான ஆறுகள், கிளைகளுடனும், உபகிளைகளுடனும் தோன்றிய போதிலும் அவற்றில் ஒரு சிலவே நிலைக்கின்றன. இதற்குக் காரணம் உங்களில் பலருக்கு ஆக்ரமிப்பு ஆசை, அதிகார ஆசை இருக்கிறதே அதேபோல் ஆறுகளின் ஆக்ரமிப்பு வெறிதான்.

ஒரு முக்கிய ஆறு தானே மற்ற நதியின் முக்கிய ஆற்றுடன் உறவுகொள்வதன் மூலமோ அல்லது தன் கிளைகளில் ஒன்றை மற்ற முக்கிய ஆற்றுடன் உறவுகொள்ளச் செய்வதன்மூலமோ ஏற்படுகிறது. எவ்வாறு இருக்கிறது உறவாடிக் கெடுக்கும் தன்மை? ஏன் எங்களில் பலருக்கு இத்தன்மை இல்லையா என்று கேட்கிறீர்களா? நன்று! நன்று!!

### அருவி

இவ்வாறு ஆறுகள் உற்பத்தியாகி முன்கூறியதுபோல் மிருதுவான, கடினமான பாறைகளில் வரும்போது (1) கடினமான பாறை சீக்கிரம் ஆற்றுக்கு அசைந்து கொடுப்பதில்லை — அதாவது மிருதுவான பாறைகளை ஆற்று நீர் தன் வேகத்தால் கரைத்துவிடுகிறது. ஆகையால் கடினமான பாறை நீட்டிக்கொண்டிருக்க மிருதுப் பாறை கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பிக்கிறது. இப்போது 'அருவி' (Waterfalls) உண்டாகிறது. நயாகரா நீர்வீழ்ச்சியெல்லாம் இவ்வாறு உண்டானதுதான்! பலகாலம் கழித்து கடினமான பாறைக்கு அடிப்புறமுள்ள மிருதுப் பாறையும் மறையவே அது ஆதரவற்றதாகி சிலநாளில் அதுவும்மறைந்துவிடுகிறது. அதனால் அருவி மறைந்து பழைய நிலையில் ஆறு மீண்டும் ஓட ஆரம்பிக்கின்றது.

### முதுமைப் பருவம்

இளமைப் பருவம் தாண்டி முதுமைப் பருவத்தை அடையும்போது ஆற்றின் நிலை பரிதாபமாக இருக்கிறது. முதுமைப் பருவத்தில் எப்பொழுதும் அதிகமான தண்ணீர் குறைவதால் ஆற்றின் போக்கும் மாறுகிறது—கிழவயதான மனிதர்கள்போல. நேரடியாகவோ, வளைந்தோ சென்றுகொண்டிருந்த ஆறு நன்கு வளைந்து வளைந்து செல்ல ஆரம்பிக்கிறது. இது சிறிது சிறிதாக அதிகமாகி கரைகள் ஒன்றை ஒன்று தொடுமளவுக்கு அடைகிறது. பிறகு ஒருநாள் அவ்வாற்றில் தண்ணீர் அதிகமாக வரும்போது ஆற்றின் போக்கு மீண்டும் மாறுகிறது—புதுப் பணக்காரனின் செய்கையைப்போல! வளைந்து சென்ற ஆறு, கரைகள் நெருங்கி இருப்பதால் நேரே தன் போக்கை மாற்றிக்கொள்கிறது. இதனால் ஆற்றின் இரு கரையிலும் புதிதாக ஏற்படும் அரை வட்டப் பகுதிகளுக்கு 'ஆக்ஸ் பவ் லேக்' (Ox Bow lake) என்று பெயர்.

### மறைவு

இவ்வாருகப் பல திருவிளையாடல்கள் செய்யும் ஆறு கடைசியில் தன் பக்கத்திலிருந்த மணல், பாறை முதலியவற்றை அரித்துவிட்டு தானும் சமவெளியுடன் கலந்துவிடுகிறது இருந்த இடம் தெரியாமல்! சிறு கால்வாயாக ஆரம்பித்த அது கடைசியில் எப்படி ஆரம்பித்ததோ அதேபோல் மறைந்தும்விடுகிறது!

### மாற்றம் உண்டா?

நான் தோன்றிய நாள் தொட்டு, என்மீது, நிலப் பரப்பும், சமவெளிகளும், நீர்ப்பகுதிகளும் நிரம்பி எப்பொழுதும் மேடு பள்ளமாகவே இருந்து வருகிறேன். ஆனால் இப்போது இருக்கும் மாதிரியே எப்போதும் இருந்திருக்கிறேனா என்று ஒரு கேள்வியை எழுப்பினால் பல ருசிகரமான பதில்கள் கிடைக்கின்றன.

ஒருசாரார், நிலப்பகுதி கடல் பகுதியாகவும், கடல் பகுதி நிலப்பகுதியாகவும் மாற இயலாது; காரணம் கடலின் அடிப்பாகத்தில் காணப்படும் சிறு பிராணிகளின் கசிவு தரையில் எங்கும் காணப்படவில்லை என்று கூறுகிறார்கள்.

### 'கோண்ட்வானு நிலப் பகுதி'

மற்றொருசாரார் அதை மறுக்கிறார்கள்; மறைந்து போன ஆறுகளின் உற்பத்தி ஸ்தானம் இப்பொழுது கடலாக இருக்கும் பிரதேசங்களிலிருந்து உற்பத்தியானதுபோல இருக்கிறது. எனவே முன்பு மேட்டுப் பிரதேசமாக இருந்த இடம் இப்பொழுது கடலால் மறைக்கப்பட்டது. நிலத்தில் வாழ்ந்த பிராணிகளின் எஞ்சிய பகுதிகள் அட்லாண்டிக் கரைப் பிரதேசங்களை ஒட்டி இருக்கின்றன. எனவே முன்பு நிலமாக இருந்தது இப்பொழுது மாறியிருக்கிறது. இப்பொழுது பிரிந்திருக்கும் 'கோண்ட்வானு (Gondwana Continents) நிலப்பகுதி' [ஆஸ்திரேலியா, இந்தியா, தென் அமெரிக்கா முதலியன அடங்கிய பகுதி கோண்ட்வானு பகுதி எனப்படும்] முன்பு ஒரே பரப்பாக இருந்தது என்பதற்குரிய காரணங்களாகிய பழங்காலப் பிராணிகளின் எஞ்சிய பகுதிகள் (Fossils) மேற்கூறிய எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக இருக்கின்றன. இப்பொழுது பூமத்திய ரேகைப் பிரதேசத்திலிருக்கும் உஷ்ணத்தால் பாதிக்கப்படும் பகுதிகள் முன்பு 220,000,000 ஆண்டுகளுக்கு முன் (Permo-Carboniferous times) பனிக்கட்டி உறைந்த பிரதேசமாக இருந்திருக்கிறது. மேலும் இப்பொழுது குளிர்ச்சிப் பிரதேசமாக இருக்கும் வட பிரதேசங்கள் பாலை நிலங்களின் நினைவையூட்டுகின்றன. நீர் நிலப் பிரதேசங்கள் இப்போதுபோலவே எப்பொழுதும் இருந்திருப்பின் மேற்கூறியவை நிகழக் காரணம் என்னவென்று கேட்கிறார்கள் இக்கூட்டத்தார்!

### நிலம் இயற்கையாகப் பிரிதல்

ஆனால் நில நீர்ப் பிரதேசங்கள் நிலையாகவே, அதாவது நிலப்பகுதிகள் நிலப்பகுதிகளாகவும் நீர்ப்பகுதிகள் நீர்ப்பகுதிகளாகவுமே இருந்திருக்கின்றன; ஆனால் வேறு சில காரணங்களால் மேற்கூறியவை நிகழ்ந்திருக்கலாம் என்று கூறுகிறார்கள்.

அட்லாண்டிக்கின் இரு கரைகளிலும் ஒரேமாதிரியான பிராணிகளின் எஞ்சிய பகுதிகள் காணப்படுவதால்

### எஸ்ஸாரம்

இரு கரையும் சேர்ந்த நிலப் பரப்பு ஒன்ருகவே இருந்திருக்கும். அடித்தளத்தில் பலமின்மையால் இப்பொழுது அட்லாண்டிக் சமுத்திரமாக இருக்கும்பரப்பு அமுங்கிப்போயிருக்கும். எனவே அட்லாண்டிக் கடலில் சிறிதளவு நிலப்பரப்பு மட்டும் மேலே தெரிகிறது என்கிறார்கள். ஆனால் ஒரு பெரும் நிலப்பரப்பு அமுங்கிப்போயிருப்பதற்கு வாய்ப்பு இல்லை. பிறகுதான் நிலங்கள் இயற்கையாகப் பிரிந்தன (Continental drift) என்ற கொள்கை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தத் தத்துவம் நிலப் பகுதிகள் ஒரே பரப்பாக இருந்திருக்குமென்றும் அது தனித்தனியாகப் பிரிந்து பல இடங்களுக்கும் நகர்ந்திருக்குமெனவும் கூறுகிறது. இது ஒரு வழியில் ஒப்புக்கொள்ளத்தக்கதாயிருக்கிறது. ஏனெனில் நிலப்பரப்பு தகுந்த அளவு இழுக்கப்படும் சக்தி உபயோகிக்கப்பட்டால் நகரும் என்று நம்பப்படுகிறது.

### இமாலயம் ஆல்பைன் மலைகள் உண்டான விதம்

சினிடர் (Snider), டெய்லர் (Taylor), வேஜினர் (Wag-ener), டூடாய்ட் (Du'Toit) என்பவர்கள் ஏறத்தாழ ஒரேமாதிரியான தத்துவங்களைக் கூறுகிறார்கள்.

டெய்லரின் ஊகம் Taylor's Hypothesis of Drift):— இவர் கொள்கைப்படி 280,000,000 (Carboniferous Times) ஆண்டுகளுக்கு முன்பு நிலப்பகுதிகள் 'லொரேஷியா' (Lorasia) என்று வட துருவத்திலும் 'கோண்ட்வானு' (Gondwana) என்று தென் துருவத்திலும் இரு பகுதிகளாக இருந்தன. அப்பொழுது சந்திரனின் ஆகர்ஷண சக்தியினுல் இவ்விரு பகுதிகளும் பூமத்திய ரேகையை நோக்கி வர ஆரம்பித்தன. நான் எப்போதும் சுற்றிக்கொண்டே இருக்கின்றபடியால் என் சுற்றுதலின் வேகத்தால் அவை நகரும்போது சிதறிவிட்டன. சிதறிய பகுதிகள் இப்பொழுதுபோல அமைந்தன என்று டெய்லர் கூறுகிறார். அப்படி அவை நகர்ந்தபோது அவற்றின் முன் பகுதிகளில் மடிப்புகள் ஏற்பட்டு மலைகள் உண்டாயின. அம்மாதிரி மலைகள் அமெரிக்காவின் மேற்குக் கரை, ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை, ஆபிரிக்கா ஆகிய இடங்களில் இருக்கின்றன. (உங்கள் உள்ளங் கையைத் தரையில் பலமாக அழுத்திக்கொண்டு முன்னேக்கித் தள்ளுங்கள் விரல்களின் முன்பகுதியில் மடிப்புகள் தோன்றும்) இம்மாதிரி லொரேஷியாவும், கோண்ட்வானுவும் ஒன்றையொன்று இணைந்ததினுலேயே ஆல்பைன், இமாலய மலைகள் உண்டாயின.

(தொடரும்)

---

### அறி

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஐயா சோதிடரே! எனது நிகழ் காலத்தைப் பற்றி கூறினீர், அது உண்மைதான். எதிர் காலத்தைப் பற்றிச் சொன்னீர், அதுவும் உண்மைமாக இருக்கலாம். ஆனுல் தற்சமயம் உமக்குக் கொடுக்க வேண்டிய காசு என்னிடம் இல்லை என்பதை மட்டும் ஏன் நீர் அறியவில்லை"

இப்படிக்கு
"சுப்பு"

[illegible]
மானத்துடனும் சோதிடர்
வீடு திரும்பினார்.

'பண்பழகன்'

---


# G. C. E. ஜி. ஸி. ஈ.

- தமிழ் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சித்தியடைவது சுலபமாகிவிட்டது.
- ஜுலை — டிஸம்பர் பரீட்சைகளுக்கு அற்லஸ் ஹோல் அளிக்கும் புதுப் பாடங்கள் தயாராய்விட்டன.
- எல்லாப் பாடங்களுக்கும் கடந்தகால பரீட்சைகளின் வினு விடைகள் உண்டு.
- அத்தோடு மாதிரி வினு விடைகளும்தனியாகஉண்டு
- தனித் தனிப் பாடத்துக்கு விலை ரூ. 3-00. தபால் செலவு சதம் 35.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

அற்லஸ்ஹோல், தபால் பெட்டி: 649.
போன்: 9759. கொழும்பு.



# உஷா

## தையல் மெஷின்கள்

குடும்பஸ்தர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்!

உஷா மெஷின் ஒன்று உங்களிடம் இருந்தால் நீங்கள் தையல் கூலிக்காக செலவிடும் அவ்வளவு பணத்தையும் மிச்சப்படுத்தலாம்.




கவர்ச்சிகரமான புதுவித மெஷின்கள் கையிருப்பில உள்ளன.

ரொக்க விலை:

| | |
|---|---|
| கை மாடல் | ரூ. 195/- |
| டிறெடில் மாடல் | ரூ. 315/- |
| போல்டிங் மாடல் | ரூ: 335/- |

மாதாந்தர தவணையில்:

| | முதலில் முற்பணம் | மாதாந்த தவணை | | |
|---|---|---|---|---|
| கை மாடல் | ரூ. 12/50 | ரூ. 12/50 | விகிதம் 18 | மாதங்கள் |
| டிறெடில் மாடல் | ரூ. 75/- | ரூ. 19/50 | ,, 18 | ,, |
| போல்டிங் மாடல் | ரூ. 75/- | ரூ. 21/50 | ,, 18 | ,, |

சோல் ஏஜண்டுகள்:

ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 6060.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



ஓர் நடனத் தோற்றத்தில் கலாவதி

# 'பெண்களுக்கு ஆடம்பரம் ஆகாது; சமையல் தெரிய வேண்டும்'

## இலங்கை வந்திருக்கும் நடன நங்கை கலாவதி

தென்னிந்திய சினிமாபின்னணி பாடகர் எஸ். ஹுசேன்தீன் குழுவினருடன் நடன நடிகை எஸ். கலாவதி இலங்கைக்கு வந்திருப்பது நேயர்கள் அறிந்ததே.

களங்கமற்ற உள்ளமும், காண்போரை வசீகரிக்கும் பார்வையும் யாரிடத்திலும் அன்போடு பழகும் தன்மையும் உடையவராய் விளங்குகிறார் கலாவதி. பி. எஸ். குஞ்சிதபாதம் பிள்ளையிடம் நடனம் பயின்று பேராசிரியர் சாம்பமூர்த்தியின் முன்னிலையில் 54ம் ஆண்டு அரங்கேற்றம் செய்த இவர் இதுவரை பல படங்களில் நடனம் ஆடியும் நடித்தும் இருக்கிறார்.

நடனமாடிய படங்கள்: குடும்பம், கூண்டுக்கிளி, நாகதேவதை, பிரேம பாசம், (தமிழ்—தெலுங்கு) மாயா பஸார் (தமிழ்—தெலுங்கு) பாய்-பாய் (ஹிந்தி) ஹம்பஞ்ச் ஏக்தார்க்கே (ஹிந்தி) சமய சஞ்சீவி விநாயகர் சதுர்த்தி, பால சஞ்ஞாசம் (மலையாளம் தெலுங்கு) ஆகியனவாகும். நடனமாட ஒழுங்கு செய்யப் பட்டுள்ள படங்கள் அன்னையின் ஆணை, பானை பிடித்தவள் பாக்கியசாலி, தாய் மகளுக்குக் கட்டிய தாலி, மணிமேகலை, வசந்த சேனு, மேரி மகடலா என்ற கிறிஸ்தவ படம் ஆகியனவாகும்.

மணிமேகலையில் நடனத்தோடு, நடிக்கவும் வசதி செய்து கொடுத்த கலைவாணர் என். எஸ். கேயை உளமார வாழ்த்துகிறார் கலாவதி. பதினான்கு வயது நிரம்பிய கலாவதி இன்னும் சிறு குழந்தையைப் போலவே பேசவும் பழகவும் செய்கிறார். இவர் நடனத்தோடு நின்று விடாமல் நடிப்புத் துறையிலும் ஜொலிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், எஸ். எஸ். ராஜேந்திரனுடைய நாடகக் குழுவில் சேர்ந்து நடித்துக் கொண்டிருக்கிறார்.

அன்றைச் சமீபத்தில் ஓர் ஆட்டத்தின் போது சந்தித்து அளவளாவும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது நான் அவரிடம் கேட்ட சில கேள்விகளையும் அவற்றிற்கு அவர் அளித்த பதில்களையும் இங்கே தருகிறேன்:

கேள்வி:

தாங்கள் எந்தப் படத்துக்கு முதலில் நடனமாடினீர்கள்?

பதில்:

குடும்பம் என்ற படத்துக்கு.

கேள்வி:

எந்தப் படத்தில் நீங்கள் நன்முக ஆடியிருக்கிறீர்கள்?

பதில்:

மாயா பஸார், விஞயகர் சதுர்த்தி;

கேள்வி:

ஒரு இசைத் தட்டிற்குரிய நடனத்தைப் படம் பிடிக்க எவ்வளவு நாட்களாகும்?

பதில்:

சுமார் பத்து நாட்களாகும்.

கேள்வி:

தங்களுக்குப் பிடித்த நடிகர், நடிகை, பாடகர், பாடகிகள் யார்?

பதில்:

முறையே சிவாஜி கணேசன், பத்மினி, சவுந்திர ராஜன், ஜிக்கி ஆகியோர்.

கேள்வி:

நீங்கள் விரும்புவது நகைகளையா உடைகளையா?

பதில்:

உடைகளை.

கேள்வி:

தங்கள் திரையுலக தொடர்பு யாரால் ஏற்பட்டது?

பதில்:

ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரால்.

கேள்வி:

வாழ்க்கையில் அதிகம் விரும்புவது எதை? வெறுப்பது எதை?

பதில்:

விரும்புவது அம்மா—அப்பா. வெறுப்பது எதுவுமில்லை.

கேள்வி:

உங்களுக்குப் பாட வருமா?

பதில்:

அது தானே வரமாட்டேனென்கிறது!

கேள்வி:

உங்களுக்கு சகோதரர்கள் உண்டா?

பதில்:

கிடையாது, நான் தனித்தவள்;

கேள்வி:

இலங்கை மக்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:

மிகவும் நல்லவர்கள்; கலைப் பற்றுடையவர்கள், கலைஞர்களின் மீது அலாதியான பிரியமுடையவர்கள்.

கலாவதி கேட்ட கேள்விகளுக் கெல்லாம் 'டக்...டக்' கென்று பதிலளித்தார். அவர் அளித்த பதில்களிலிருந்து அவரது உள்ளத்தின் கள்ள மற்ற தன்மையையும் கலைப் பற்றையும், சுத்தத் தமிழ்ப் பண்பாட்டிலுள்ள விருப்பையும் அறிய முடிந்தது.

பெண்களுக்கு ஆடம்பரம் கூடாது; சமையல் வேலை

(13-ம் பக்கம் பார்க்க)

# "பெற்றவள் கேரளத்தாய்! வளர்த்தவள் தமிழ்த்தாய்!! வாழ வைப்பவள் கலைத்தாய்!!!"

## பொன்னுடை போர்த்திய விழாவில் நாட்டிய நடிகை பத்மினி

ருஷியா சென்று நாட்டியம் ஆடி பலநாட்டினருக்கு மத்தியில் முதல் பரிசு பெற்று, இந்தியாவுக்கும், தமிழ் நாட்டுக்கும் புகழ் தேடித் தந்ததற்காக, சினிமா நாட்டிய நடிகைகளான பத்மினி, ராகினி ஆகியவர்களுக்கு சென்னையில் பொன்னுடைபோர்த்தி கௌரவித்தார்கள். பல பிரமுகர்கள் பாராட்டி வாழ்த்தினார்கள்.

இந்தப் பாராட்டு விழா தீபாவளி தினத்தன்று சென்னை தியாகராய நகர் "வாணி மகா"லில் நடந்தது.

### மந்திரி தலைமையில்

தென்னிந்திய நடிகர் சங்கத்தாரால், இந்தபாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவிற்கு சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம் தலைமைவகித்தார். சென்னை நகர மேயர் சீனுவாசன், பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் அய்யாசாமி செட்டி, பி.ராமமூர்த்தி, பேராசிரியர் மு. வரதராசனார், தியாகராயா கல்லூரி தலைவர் எம். கே. சண்முகம் முதலான பிரமுகர்கள் வந்திருந்தார்கள்.

### நடிகைகள்

சினிமா உலகில், ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன், கொத்தமங்கலம் சுப்பு, டைரக்டர் கே. சுப்பிரமணியம், கெம்பராஜ், டி. கே. சண்முகம், டி. வி. நாராயணசாமி முதலானவர்களும், நடிக, நடிகைகளில், சாவித்திரி, கணேசன், ராஜசுலோசன, எம். என் ராஜம், எஸ். எஸ். ராஜேந்திரன், வீரப்பா மற்றும் பல நடிகர்களும் விழாவில் கலந்துகொண்டார்கள்.

### பத்மினிக்குப் பொன்னுடை

பத்மினிக்கும், ராகினிக்கும் "ஏ. எல். எஸ். ப்ரொடக்ஷன்ஸ் அதிபர் சீனுவாசன் சார்பில் பொன்னுடை போர்த்தப்பட்டது. பளபளக்கும் பொன்னுடையை பத்மினிக்கு எம். என். ராஜமும், ராகினிக்கு ராஜசுலோசனவும் போர்த்தினர்கள்.

### மலை போல் மாலைகள்!

உடனே பத்மினி, ராகினி இருவருக்கும் நகரில் உள்ள பல்வேறு கலைச் சங்கங்களின் சார்பில் ரோஜாப்பூ மாலைகளும், சாமந்திப்பூ மாலைகளும் போடப்பட்டன.

மாலைகள் பத்மினி, ராகினி கழுத்தில் மலைபோல் உயர்ந்துவிடவே பளு தாளாமல் அவர்கள் மாலைகளை கழற்றிக் கழற்றிக் கீழே வைத்த வண்ணம் இருந்தார்கள்!

### என். எஸ். கே. மகள் போட்ட மாலை!

டி. ஏ. மதுரம், சார்பில் பத்மினிக்கும், ராகினிக்கும் கலைவாணர் என். எஸ். கே. யின் 8 வயது மகள் மாலை போட்டார்! அந்தச் சிறுமியை, பத்மினியும், ராகினியும் ஆசையுடன் அழைத்து தங்கள் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார்கள்!

### தொண்டு வளரட்டும்

விழாவிற்கு தலைமை வகித்த மந்திரி சுப்பிரமணியம் பேசுகையில், "நம் நாட்டின் கலைத்துறை நல்ல முறையில் முன்னேறி வருகிறது. பத்மினி, ராகினியின் கலைத் தொண்டு மென்மேலும் வளர்ந்து ஓங்க வேண்டுமென்று அவர்களை வாழ்த்துகிறேன்" என்று வாழ்த்தினார்.

### ஜெமினி வாசன் ஜோசியம்

ஜெமினி ஸ்டுடியோ அதிபர் எஸ். எஸ். வாசன் பேசுகையில் லலிதா-பத்மினி ராகினி சகோதரிகள், முதன் முதலில் ஜெமினியில் உதய சங்கர் எடுத்த படத்தில் நாட்டியம் ஆடியதைப் பார்த்துவிட்டு, இவர்கள் வருங் காலத்தில் தலைசிறந்த நாட்டிய நட்சத்திரங்களாக விளங்கப் போகிறார்கள் என்று அப்போதே ஜோசியம் சொன்னதாகவும், அது இன்று பலித்து விட்டதாகவும் கூறினார்.



### பத்மினி நன்றி

எல்லோரும் பேசியபிறகு பத்மினி தனக்கு அளிக்கப் பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினாள். பேச்சை காகிதத்தில் எழுதி வைத்துக்கொண்டு பத்மினி உணர்ச்சி ததும்ப படித்தார்.

### குரு பக்தி

எங்களுக்குக்கிடைத்தஇத்தனை புகழுக்கும், பெயருக்கும் காரணமாக இருந்த எங்கள் ஆசிரியர் கோபிநாத் அவர்களுக்கும், கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வணக்கத்தை முதலில் செலுத்திக் கொள்கிறோம்.

எங்கள் வாழ்க்கையிலேயே இன்று எங்களுக்குக் கிடைத்த ஆனந்தம் போல் நாங்கள் இதுவரை என்றுமே அடைந்த தில்லை. ருஷியாவில் முதல் பரிசு பெற்ற போதும் இவ்வளவு ஆனந்தம் அடைந்த தில்லை!

### கேரளத்துக்காரி சர்ச்சை!

எங்களுக்குக் கிடைத்த புகழ் கேரளத்துக்குச் சொந்தமா, தமிழ் நாட்டுக்குச் சொந்தமா என்ற சர்ச்சை பற்றி நாங்கள் சொல்ல விரும்புவது என்ன வென்றால், எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் கேரளத் [illegible] பட்டு, தமிழ்த் தாயால் வளர்க்கப் பட்டு, கலைத்தாயிடம் ஒப்படைக்கப் பட்டவர்கள் என்பதே!

இவ்வாறு பத்மினி நன்றி தெரிவித்துப் பேசி முடித்தார்.

விழா முடிவில் நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் நன்றி கூறினார்.

# கத்திச் சண்டைக்கு சென்னை வீரர் தயார்

## 'இரத்தக்கண்ணீர்' ராதாவின் சவாலுக்கு பதில்

சினிமாவில் காட்டப்படும் கத்திச் சண்டைகளைக் கண்டித்து நடிகர் எம். ஆர். ராதா சவால் விட்டார் அல்லவா? இதற்கு சென்னை பெரம்பூர் பாரக்கைச் சேர்ந்த கத்திச் சண்டை வீரர் எம். எஸ். குமார் எதிர் சவால் விட்டிருக்கிறார்.

கத்திச் சண்டை, கம்புச் சண்டை போன்ற "ஸ்ட்டண்டு" வேலைகளில் பயிற்சி கொடுக்கும் நிலையம் ஒன்றை குமார் நடத்துகிறார்.

சினிமா படங்களில் ஒரு வீரர் 50 அல்லது 60 பேருடன் சண்டை செய்து ஜெயிக்கிறார் அல்லவா?

"ஒரு ஆள் 50 அல்லது 60 பேருடன் கத்திச் சண்டை போட்டு எப்படி ஜெயிக்க முடியும்? அப்படி கத்திச் சண்டை போடும் வீரர் ஒருவரை வரச் சொல்லுங்கள்; நான் 2 ஆட்களை விடுகிறேன். அந்த 2 ஆட்களை ஜெயித்து விட்டு போகச் சொல்லுங்களேன் பார்க்கலாம்" என்று ராதா சொல்லி இருந்தது நினைவு இருக்கலாம்.

### 4 பேருடன் சண்டை!

இதைக் குறித்து கத்திச் சண்டை வீரர் குமார் எதிர் சவால் விட்டு கூறுவதாவது:

"நான் ராதா கூறிய படி அவர் விடும் 2 பேருடன்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக விமர்சனம்:

# கருணையின் விளைவு

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களின் தமிழ்ப் பற்று நாட்டுக்கு நல்ல நாடகங்களைத் தர அவர்களைத் தூண்டி வருவது குறித்து யாரும் பெருமையடையாமலிருக்க முடியாது.

'கருணையின் விளைவு' என்ற சமூக நாடகத்தை இவ்வாண்டு அவர்கள் அளிக்கிறார்கள். 2-ம், 3-ம் திகதிகளில் இந் நாடகத்தைப் பல்கலைக் கழகத்திலுள்ள கிங் ஜார்ஜ் மண்டபத்தில் நடத்திக் காண்பிக்க விருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அமைப்பாளர் திரு. கே. எஸ். நடராஜாவின் டைரக்ஷனில் உருவாகியுள்ள இந் நாடகத்தின் பத்திரிகைக் காட்சி கடந்த புதன்கிழமை நடந்தது.

### 'சூடு'

ஐந்து அங்கங்களைக் கொண்ட இந் நாடகத்தில் காதலும், கருணையும், கொடையும் கருவறுத்தலும் கட்டிப் புரண்டு ஈற்றில் நல்ல முடிவுகாண வகை செய்யப்பட்டிருக்கிறது. காப்பிக் கவிஞர்கள், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள், காளான் சங்கங்கள் ஆகியனவற்றிற்கும் சில பொலீஸாரின் முறை கேடான நடத்தைக்கும் நாசூக்காகச் 'சூடு' கொடுக்கப்படுகிறது. எல்லாந் தெரிந்தவர்கள் போல நடந்து, இலக்கிய மேற் கோள்கள் காட்டப் புகுந்து இடறி விழும் நம் நாட்டு இலக்கிய 'மேதை'களுக்கும் டோஸ் கொடுக்கப்படுகிறது.

### உரையாடலில் நகைச் சுவை

நாடகக் கதையைத் திரு எம். சண்முகநாதன் எழுதியிருக்கிறார். கதையிலே உள்ள கருவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மெருகும் அது விரிக்கப்பட்டிருக்கும் விதமும் சற்று மாற்றி அமைக்கப்பட்டிருந்தால் கதையின் விறுவிறுப்பு இப்போதுள்ளதைக் காட்டிலும் அதிகமாக இடம் பெற்றிருக்கும். உரையாடல் பெரும்பாலும் யாழ்ப்பாணத் தமிழில் அமைந்திருக்கிறது. அதில் நகைச் சுவை கலந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### நடிப்பு

உ. தருமபாலன் யோஷுவாம் பாலாம்பிகை வீரவாகுவும் வயது முதிர்ந்த தம்பதிகளாக—அசல் யாழ்ப்பாணப் புருஷன் மனைவியாக நடித்து 'சபாஷ்' வாங்குகிறார்கள். இருவரும் மேடையில் தோன்றிவிட்டால் ஒரே கலகலப்புத்தான்.

ஆ. பி. குகராஜன் 'பெரியவ'ராக வேஷம் தரித்துப் பல திருவிளையாடல்களைச் செய்து ஈற்றில் குட்டு வெளிப்பட்டதும் அசடு வழிய நழுவி விடும் இராசேந்திரனாக அநாயாசமாக நடித்திருக்கிறார். எதுவித சிரமமுமின்றி இயல்பாகவே முகபாவத்தைத் தருணத்துக் கேற்ப மாற்றியும் பேச்சிலே சுருதியைக் கூட்டிக் குறைத்தும் கன கச்சிதமாக நடித்துப் பாராட்டுப் பெறுகிறார் அவர்.

நாடகத்தில் கருணாகரன் பாகம் மிக முக்கியமானது. த. ஜெயானந்தன் இப் பாத்திரத்தை ஏற்று நடிக்கிறார். குணச் சித்திர பாத்திரத்துக் கேற்ற முகபாவத்தை வரவழைக்க அவர் இன்னும் நன்கு முயல வேண்டும்.

செல்லையாவாக நடித்து ரஸிகர்களைச் சிரிக்க வைக்கும் பொறுப்பை திரு ந. ந. நயில்ஸ் ஏற்று நன்கு செய்து முடித்திருக்கிறார்.

அருட் செல்வி சாமுவேல் (ரஞ்சினி) லீலா ஜோசேப் (மனோன்மணி) வே. ஆனந்தராசா (தணிகாசலம்) மற்றும் பலரும் நாடகத்தில் நடிக்கிறார்கள்.

### வேஷம் காட்சி

வேஷப் பொருத்தம் அநேகமாக எல்லோருக்கும் நன்கு அமைந்திருக்கிறது. காட்சி அமைப்பும் பரவாயில்லை.

## அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க பொதுக் குழுக் கூட்டம்

மேற்படிகூட்டம் 3-11-57 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கொழும்பு, கொட்டாஞ்சேனை புளுமண்டால் வீதியிலுள்ள வாலிபர் முன்னேற்றக் கழகப் பணிமனையில் நடைபெற இருப்பதாக, பகுத்தறிவியக்கச் சுற்று நிருபம் மூலம் அறியப்படுகிறது.

அவ்வமயம் திரு. எஸ். இராசதுரை எம். பியும் இன்னும் பலரும் சொற்பெருக் காற்றுவார்கள் என்றும் தலைமை நிலைய நிர்வாகிகளும் மத்திய செயற் குழுவினரும் தெரிவு செய்யப் படுவார்கள் என்றும், அனுதாபிகளும், ஆதரவாளர்களும் சமூகம் கொடுத்தால் நன்றென்றும் மேலும் அந்தச் சுற்று நிருபம் கூறுகிறது.

## பெண்களுக்கு..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்றாகத் தெரிய வேண்டும் என்ற கருத்துக்களை வெளியிட்ட அவர் தனக்கு நளபாகம் தெரியுமென்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டார்.

எவ்வளவு தான் கலைப்பற்றும் செயல் திறமை இருந்தாலும் வயதுக்குத் தக்க குணமும் இருக்கத் தானே செய்யும். நாயும், மீனும் வளர்த்து அவற்றோடு பொழுதைக் கழிப்பதில் கலாவின் குழந்தை யுள்ளத்துக்கு கொள்ளை இன்பமாம். 'கூடி விளையாடு பாப்பா' என்று பாரதி சொன்னதைக் கலா கடைப் பிடித்து ஒழுகுகிறார். இனி தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்றும் பாரதி சொன்னானே, அதையும் சிரமேற் கொண்டு கலா தன் சதங்கை யொலி செந்தமிழ்ப் பாட்டொலியோடு சேர்ந்து எங்கும் ஒலிக்கச் செய்ய முயற்சி எடுப்பார்—அதில் வெற்றி பெறுவார் என்று நம்புகிறோம்.

—என். எம். ஜெமீல்

## தம்மைப்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தே சரிவர மதித்து அவற்றிற்கு உரியவர்களைப் போற்றியும் காப்பாற்றியும் வந்தவன் உலகில் தமிழன் ஒருவனேதான் என்றும் புலவர்கள் மன்னர்களுக்கு வாய்த்த அறிவுரை நிகழ்த்தும் அமைச்சர்கள் ஸ்தானத்தைப் பெற்றிருந்தது தமிழ் நாட்டில் மட்டுமே தான் என்றும் அவர் தமது முடிவுரையில் சொன்னார். பாடல்களைப் பாடிய புலவர்களுக்கும் அவற்றிற்காக அவர்களுக்கு பரிசில்கள் வழங்கிய மன்னர்களுக்குமிடையே இருந்து இருசாராரையும் இணைத்து வைத்தது மொழி—தமிழ் மொழி தானென்றும் அதன் மேல் கொண்ட பற்றுக் காரணமாகப் புலவர்கள் பாடிக் களித்தார்கள் என்றும் அதை வளர்க்க வேண்டி மன்னர்கள் பாடிய புலவர்களுக்கு வாரி வாரி வழங்கினார்கள் என்றும் திரு லக்ஷ்மணன் தமது உரையில் சொன்ன கருத்தைப் பண்டிதர் இரத்தினமும் தமது முடிவுரையில் பல புறநானூற்றுச் செய்யுட் சார்புகளோடு நிலைநாட்டிப் பேசினார்.

குறிப்பு:-

திரு கி. லக்ஷ்மணனின் புறநானூறு பற்றிய கடைசி உரை (நாலாவது) 3-11-57 ஞாயிற்றுக் கிழமை வெள்ளவத்தை 57வது ஒழுங்கையிலுள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் பிற்பகல் 5-30 மணிக்கு வழக்கம்போல் நடைபெறும்.

## கத்திச் சண்டைக்கு.....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்டை செய்ய தயாராக இருக்கிறேன். மற்றும் 2 பேர் வந்தாலும் 4 பேருடனும் சண்டை செய்ய தயாராக இருக்கிறேன். இந்த அரிய சந்தர்ப்பத்தை ராதா ஏற்படுத்தித் தந்தால் மிகவும் நன்றி செலுத்த நான் கடமைப் பட்டவனாக இருப்பேன்'' என்று கூறுகிறார்.

### மற்றொரு வீரர்

சென்னை சூளை எல்லப்ப செட்டியார் பரம்பரையைச் சேர்ந்த கே. வி. பாலகிருஷ்ணனும் எதிர் சாவல் விட்டிருக்கிறார்.

அவர் கூறுவதாவது:

''சினிமா நடிகர்கள், சிலம்பு வித்தையில் கை தேர்ந்தவர்களிடம் பயிற்சி பெற்று இருப்பார்கள். நடிகர் எம். ஆர். ராதா இதை அறியாமல் பேசுகிறார்.''

நானும் சிலம்பு வித்தையில் தேர்ந்தபின், ராதா விடுத்த சவாலுக்கு நானும் என்னைச் சேர்ந்தவர்களும் முன்வந்து இருக்கிறோம்

''ஊமைப் பட காலத்தில் ''டக்லஸ் பேர்பாங்ஸ்'' என்ற ஆங்கில நடிகர், ''கத்திச் சண்டை போட இந்தியாவில் இருந்து யாராவது வருவாரா''? என்று சவால் விட்டிருந்தார். அதைக் கண்டு எங்களில் ஒருவரான, சென்னை கொண்டித் தோப்பைச் சேர்ந்த கன்னியப்பமுதலியார் எதிர் சவால் விட்டார். ''கத்திச் சண்டைக்கு சர்க்கார் அனுமதிக்காது. ஆகவே கொம்பினால் கத்தியைப் போல செய்து சண்டை போடுவோம்'' என்று அவர் எதிர் சவால் விட்டார்.

சாலிவாகனன் ஒருவனே சண்டை செய்து போர்க் களத்தில் விக்கிரமாதித்தனை ஜெயித்தான். இது பொய்யா? அதே சாலிவாகன வம்சம்தான் மைசூர் ராஜபரம்பரை!

இவ்வாறு கே. வி. பாலகிருஷ்ணன் ஒரு அறிக்கையில் கூறுகிறார்

பெருந்திரளான மக்கள் கண்டு களிக்கிறார்கள்

எல்பின்ஸ்டன் றெக்ஸி

ஆகிய திரைகளில்!

ஜெமினி கணேசன், சாவித்திரி

நடித்துள்ள

யார் பையன்

செல்லமகால்

நவம்பர் 8ம் திகதி வெள்ளிக்கிழமை முதல்

சிவாஜி கணேசன், பி. பானுமதி

நடித்த

ராணி லலிதாங்கி

ஏராளமான ரசிகர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க

2 - வது வாரமாக இப்பொழுது காட்சியளிக்கிறுள்!

சென்ட்ரல் (கொழும்பு)

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணி, சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கும், ஞாயிறு காலை 10 மணிக்கும் விசேஷ காட்சிகள்.

அன்னபூரணாவின்

எங்கள் வீட்டு மகாலெட்சுமி

நடிகர்கள்: ஏ. நாகேஸ்வரராவ், சாவித்திரி, பி. கண்ணாம்பா, எஸ். வி. ரங்கராவ், எம். என். நம்பியார், ராஜசுலோசனா, கே. ஏ. தங்கவேலு, சுந்தரிபாய், அங்கமுத்து, ஏழுமலை ஆகியோர்.

நடனங்கள்: ஈ. வி. சரோஜா, ஏ. சோப்ரா.

பின்னணி இசை: கண்டசாலா, சௌந்திரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, சுசீலா, டி. வி. ரத்னம் ஆகியோர்.

இத்தீவகத்தில் மகத்தான 6வது வாரம்!

முருகன் (ஜிந்துப்பிட்டி)

தினசரி மாலை 6, இரவு 9-30, சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கும், ஞாயிறு காலை 10 மணிக்கும் விசேஷ காட்சிகள்

ஜெமினி கணேசன், சாவித்திரி, கிரிஜா, நம்பியார், துரைராஜ் முதலியோர் நடித்த

இரு சகோதரிகள்

மற்றும் சென்ட்ரல் (மருதானை) மீபுர (நீர்கொழும்பு) ஆகிய திரைகளில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மைக்கேல்பாரடே

ஆராய்ச்சிக் கடலில் திளைத்து, அறிவின் துணை கொண்டு வாழ்வின் இன்ப சுகங்களை அறவே மறந்து நாள் முழுவதும் இரவு பகலாக உடல் நலத்தையும் பேணுது முயற்சியின் பலனுக இறுதியில் புதிய உண்மைகளைக் கண்டு பிடித்து, அழியாப் புகழ் அடைந்த அறிவியலுலகில் காட்சியளிப்பவர்களில் விஞ்ஞானத்தின் தந்தை மைக்கேல்பாரடேயுமொருவராவர்.

மைக்கேல் பாரடே, ஒரு எளிய குடும்பத்தில் லண்டன் நகருக்கு அருகிலுள்ள 'யார்க் ஷையர்' பகுதியில் ஜேம்சுக்கும் மார்க்ரட் ஹால்ட் வெல்லுக்கும் புத்திரராய் 1791-ம் ஆண்டு செப்டம்பரில் ஜெனித்தார். 19-ம் நூற்றுண்டு ஆரம்பத்தில் நாட்டில் தொழில் வளம் குன்றியிருந்ததால் பாரடேயின் குடும்பம் வறுமையினுல் சீரழிந்தது. பாரடே பலமுறை உடல் நலமின்றித் துன்புற்றுர்.

பாரடே கல்வியை ஆரம்பப் பள்ளியுடன் முடித்துக் கொண்டு தனது 13-ம் பராயத்தில் புத்தகக் கடையொன்றில் பழைய புத்தகங்களைச் செம்மை யார்க்கும் தொழிலிலீடுபட்டார். புத்தகங்களைப் படிக்க ஏதுவாயிருந்ததால் விஞ்ஞானப் புத்தகங்களை அவாவுடன் படித்தார். இதன் பயனுக வேதியல், ரசாயனம் போன்ற துறைகளில் அவர் அறிவு பெருகியது. விஞ்ஞானப் பேரறிஞர்களின் பேருரைகளைப் பாரடே கேட்கத் தவறவில்லை. தேவையான குறிப்புக்களையும் பெற்றுக் கொள்வார். விஞ்ஞான அறிவு வளர்ச்சி அவரது பொழுது போக்காக அமைந்தது.

புத்தகக் கடை வேலையில் வெறுப்பு ஏற்படவே 1812-ல் விலகி டேவி என்பவருடன் சேர்ந்து வேதியல், மின் வேதியல், உலோக இயல் போன்ற துறைகளில் இருபது ஆண்டுகள் உழைத்துப் பல அரிய முடிவுகளைக் கண்டார். விஞ்ஞானத்திலேயே லயித்துக் கிடந்த பாரடே, 'சாரா பர் நார்ட்' என்னும் பெண்ணை விவாகஞ் செய்யத் தவறவில்லை.

பல வாயுக்களைத் திரவ நிலைக்குக் கொண்டு வரும் முறைகளைக் கண்டு பிடித்தவர்களுள் பாரடே முதன்மை வகிப்பவராவர். ''பென்சீன்'' வாயுவைக் கண்டு பிடித்தார். மின்சாரம், கரைசல்களின் வழியாகப் பாய்வதற் குரிய விதிகளைக் கண்டு பிடித்தார். மின்னருவியில் காந்த இயல் விளைவுகள், மின்சார ஊட்டம் போன்றவைகளில் பல தத்துவங்களை வெளியிட்டார். சுருங்கக் கூறின் பாரடே பொருளியல் துறையில் ஒரு புதுமையை ஏற்படுத்தினுர் எனலாம்.

பாரடேயின் அறிவுத்திறனுக்கும், ஆராய்வு ஆற்றலுக்கும் பல நாடுகள் பாராட்டுகள் வழங்கின. அவற்றுள் ''ருேயல் கழகம்'' பாரடேயின் அறிவியல் ஆற்றலைப் புகழ்ந்து பரிசுகளையும், பதக்கங்களையும் அளித்தன. 1844-ல் அகில உலக விஞ்ஞானக் குழுவில் ஒருவரானுர். 1867-ல் மறைந்தாரெனினும் இற்றைவரை இவரது புகழ் அழியவில்லை.

—அ. அலோசியஸ்,
நாரந்தனையூர்.

## நான் கண்ட கனவு

பரீட்சைக்கு மணி அடித்து விட்டது. கேள்வித் தாள்கள் கொடுக்கப்பட்டுவிட்டது. மாணவர்கள் எல்லோரும் கிறு கிறு என்று எழுதிக்கொண்டிருக்கிருர்கள். நான் அப்பொழுதுதான் வியர்க்க வியர்க்க, பரீட்சை மண்டபத்திற்கு ஓடிச் சென்று பதட்டத்தோடு ஹாலுக்குள் நுழைந்தேன். பரீட்சையன்றைக்குக் கூட 'லேற்ரு' என்ருர் உபாத்தியார். பாதி நேரம் சென்று விட்டதற்குப் பதிலாக மணி அடித்ததும் கேட்டது; ஐயோ இன்னும் பாதி நேரம்தானே இருக்கிறது நான் பரீட்சை எப்படி எழுதுவேன். நான் இம்முறை பெயிலா? பரீட்சையில் பெயிலாவதா? இல்லை! இல்லை!! முடியாது 'ஸார் ஸார்' என்று கத்தினேன். யாரோ என் காதை முறுக்கினர். திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். பக்கத்து அறையில் படித்துக்கொண்டிருந்த அண்ணனும் அக்காவும் என் பக்கத்தில் நின்ருர்கள். ஏன் கத்தினுய்? என்ருர்கள். அப்பொழுதுதான் 'நான் கண்டது கனவு' என்பதை அறிந்துகொண்டேன்.

-வி. குமரேசு
ஓமந்தை
(வ. இ. 143.)

## அறி

சோதிடர் சொக்கனுதர் என்ருல் ஆத்தூரில் அனைவரும் அறிவர். சோதிடம் சொல்லுவதிலும் அவருக்கு நிகர் அவரே. பரம ஏழை முதல் பணக்காரர்வரை, எல்லோரும் சொக்கனுதரிடம்தான் சோதிடம் பார்க்க வருவர். அவ்வளவு நம்பிக்கை அவரிடம்.

சொக்கனுதர் வழக்கம் போல் அன்றும் ஆலமரத்தினடியில் அமர்ந்திருந்தார். அவரது முகத்திலே எப்போதும் காணப்படும் புன்னகை அன்று எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது. அடிக்கடி நாலாபக்கங்களையும் பார்த்துக்கொண்டே இருந்தார். அன்று அவர் யார் முகத்தில் விழித்தாரோ தெரியவில்லை. ஆதவன் மேற்கில் சாய்ந்தும் ஒருவர் கூட அவரிடம் சோதிடம் பார்க்க வரவில்லை. சோதிடர் பணப் பெட்டியைப் பார்த்தார் அதுவெறுமனே கிடந்தது.

மற்று நாட்களில் பார்த்தால் சோதிடம் பார்க்கக் கூடியிருப்பவர்கள் வரிசையிலே நிற்பர். ஆனுல் அன்று .........?

எவ்வளவு நேரமானுலும், இருந்து பார்த்து விடுவது என்று மனதை உறுதிப்படுத்திக் கொண்டார். சூரியனும் மறையும்நேரம், அப்போது தூரத்திலே ஒரு உருவம் சோதிடரை நோக்கிவருவது தெரிந்தது. ஆம்; ஒரு சிறு பையன் தான் வந்து கொண்டிருந்தான் சோதிடரின் மனம் மகிழ்ச்சியடைந்தது. ஒரு வேளை அவன் வேறு எங்கும் போவானே என்று எண்ணும்போது அந்த மகிழ்ச்சியும் மறைந்தது.

அப் பையன் சோதிடரை நாடினுன். சோதிடரும் அப்பையனை நோக்கினுர். அப்பையன் ''ஐயா சோதிடரே, என் கையைப் பார்த்துக் கொஞ்சம் சொல்லுகிறீர்களா?'' என்று குழைந்தைதான். சோதிடர்; ''என்ன தம்பி அப்படிக் கேட்கிருய், நான் சோதிடம் சொல்லத் தானே இங்கு இருக்கிறேன். சரி, உன் கையை இப்படி நீட்டு'' என்ருர். ''உன் பெயரென்ன தம்பி?''

''சுப்பு''

சோதிடர் சுப்புவின் கையைப் பார்த்து ஒரு முறை குலுக்கினுர். பின்பு ''தம்பி நீ மிகவும் நல்லவன். நற்பண்புகளைப் பெற்றிருக்கின்ருய். அறிவும் ஆற்றலும் உள்ளவனுகத் திகழ்வாய். ஆனுல் இப்போது வறுமையின் கோரப் பிடியிலே சிக்கி அபலைபோல் அல்லல் படுகின்ருய். பசியின் கொடுமையால் பரதவிக்கின்ருய். இந்நிலை மாற இன்னும் இரண்டு வருடங்களுக்கு மேலாகும். பின் உன் கஷ்டங்களெல்லாம் தீர்ந்துவிடும். படிப்படியாகமுன்னேறுவாய்; உன் பிற்காலத்தில்நீஒருசீமானுய் பணக்காரனுய், பணத்தை ஏழைகளுக்கு வள்ளல்போல் அள்ளி, அள்ளி, இறைப்பாய். உலகமே உன்னைப் போற்றும். உத்தமன் என்ற நற்பெயரைப் பெறுவாய் என்று முடித்தார்.

''அவ்வளவுதானு''

''ஆமாம் இன்னும் விரிவாகச் சொல்வதானுல் சாதகம் வேண்டும். காசும் கூடவாகும். கைரேகை பார்த்ததற்கு 1 ரூபா கொடு'' என்ருர் சோதிடர்.

பையன் சட்டைப் பைக்குள் கையை விட்டான் பணத்தை எடுப்பதுபோல். ஒரு ரூபாய் போதும் என்ற எண்ணத்துடன் சோதிடர் மறுபக்கம் திரும்பி சாமான்களை எல்லாம் எடுத்துப் பெட்டிக்குள் வைத்தார். முடிந்ததும் அப்பையனைப் பார்த்தார். அங்கே அவனில்லை. ஆனுல் ஒரு துண்டுச் சீட்டு இருந்தது. சோதிடர் அதை எடுத்துப் படித்தார். ஆத்திரமும் அழுகையும் பொங்கி வழிந்தன. காரணம் அதில் எழுதப்பட்டிருந்தது இதுதான்.

(11-ம் பக்கம் பார்க்க)

## தீய பழக்கங்கள்

தீய பழக்கங்களைப் பழகிக்கொள்வது மிகவும் எளிது. பழகிய பின் அவற்றை ஒழிப்பது மிகவும் சிரமம். சிறு குழந்தைகள் ஆவல் மிகுதியால் அளவுக்கு மிஞ்சிய இனிப்புப் பண்டங்களை உட்கொண்டு நோயால் வருந்தக் காண்கின்ருேம். சிறுவர்கள் துஷ்டரோடு சேர்ந்து தீய பழக்கங்களைப் பழகி பின்பு அதை விட்டு ஒழிக்க முடியாமல் அல்லற்படுவதையும் காண்கின்ருேம். வயது மிகுந்தவர்கள் புகையிலை, பொடி, அபின், சாராயம், கள்ளு முதலியவற்றிலே மனம் செலுத்திக் கெட்டழிவதையும் காண்கிருேம்; எத்தகைய தீய பழக்கத்தையும் பழகிக் கொண்ட பின் ஒழிப்பது எவர்க்கும் எளிதில் ஆவதில்லை. ஆகையால், நல்லோர் கூட்டுறவு பெற்று நற் பழக்கங்களைக் கைக்கொண்டுவாழ முயல வேண்டும்.

மனோரஞ்சிதம் கந்தையா
(வ, அ. இ. 1760)
கைதடி

## "பச்சை வயல்"

(''அன்புமணி—ஆரையம்பதி'')

பாரில் பரந்து விரிந்திருக்கும்—பசும்
வண்ணத்தில் ஆக்கிய கம்பளம் போல்
ஏரில் விரிந்து பரந்திருக்கும்—இளம்
நெற்பயிர் வீசிடும் ஜோதி இது.

மெல்லத் தவழ்ந்திடும் தென்றலிலே—அதன்
மேனி சிலிர்த்திடும் காட்சியைப் பார்
எல்லையில் சாகர மேற்பரப்பில்—சிறு
இன்னலை தாவிடும் சாயலைப்போல்

பச்சையின் வர்ணத்தில் தோன்றிடுதே—பல
ஜாலங்கள் பார்க்கையில் நெஞ்சை அள்ளி
இச்சையுடன் அதன் மேல் விழுந்தே—சற்று
இன்புற நெஞ்சம் விழையுதம்மா.

'எத்தனை எத்தனை கோடி இன்பம்—இறை
வைத்திட்டான்' என்றே மொழிந்த கவி
இத்தனை ஏழை இளம்புல் அளிக்கும்—நல்
இன்பமும் நெஞ்சினில் கொண்டனனே!

## நல்ல மனிதர்

உலகிலுள்ளோர் அத்தனைபேரும் உண்மையான மனிதர்களல்ல. நல்லவர்களும் இருக்கின்ருர்கள். தீயவர்களும் இருக்கவே செய்கின்ருர்கள். நல்லவர்களாய் இருந்து பின்பு தீயவர்களாய் மாறியவர்களுமுண்டு. தீயவராய் இருந்துபின்புநல்லோராகுபவர்களுமுண்டு. இது அவர்களின் சூழ்நிலை—வாழ்க்கை நிலை என்பவற்றைப் பொறுத்தது. எனவே அவர்களிற் பிழை சொல்வதற்கில்லை. நாம் நல்லவர்களைக் கண்டு கொள்ள வேண்டியிருந்தால் உருவத்தைக் கொண்டோ, அல்லது உடைமையைக் கொண்டோ, அல்லது படிப்பைக்கொண்டோ, அல்லது பதவியைக் கொண்டோ, அல்லது பணத்தைக் கொண்டோ கணித்துவிட முடியாது;

உள்ளத்தைக் கொண்டே ஆளை அறியவேண்டும். பண்பைக் கொண்டே பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். பதவியும், பணமும் வேண்டியதில்லை குணம் ஒன்றே வேண்டியது. நல்ல உள்ளன்பு கொண்டவன்—என்றும் மாருத நற்பண்பு வாய்ந்தவன்—நன் நெஞ்சும் நற் குணமும் செறிந்தவன் எச்சாதியானுயினும், எத்தேசத்தானுயினும், அவன் நமக்கு வேண்டியவனே; அவன் எம்மதத்தவனுயும் இருக்கலாம் எனவே நான் சில நாட்களுக்குப் புதியவர்களோடு எச்சரிக்கையாகப் பழகி வந்தால் நல்ல பண்புள்ளோரைக் கண்டு பிடிக்கலாம்.

—பெ. இராமையா
கந்தகெதரை
(வ. ம. அ. இ. 1567)

## நல்லவை நான்கு

1. 'உணர்ச்சியை அடக்கி ஆள்!! இல்லையேல் அது உன்னை அடக்கி ஆள ஆரம்பித்துவிடும்'—'ஹொரேஸ்'

2. 'சட்டம் ஒரு சிலந்தி வலையைப் போன்றது. அதற்குள் சிறிய பூச்சிகள் அகப்பட்டுக்கொள்ளும். பெரும் பூச்சிகள் தப்பிவிடும்'
—மாஜினி

3: 'சிநேக பூர்வமானஒரு ஒப்பந்தம்பல குரோதங்களை ஒழிக்க வல்லது.'—லெனின்

4. உயிர்களை நேசி. ஆண்டவன் உன்னை நேசிப்பான்.'
—புத்தர்

தொகுத்தவர்: இ.பொன்மலர்
இனுவில்.

## துக்கிக்கிறேன்

வளர்மதி விடயமாக ஆண்களோடு பெண்களும் சரிநிகராய் நின்று உழைக்கவில்லையே என்று துக்கிக்கிறேன். இனிமேல் பெண்கள் முழுமூச்சாய் வேலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

—செல்வி

## ஆசை

ஒப்பற்ற தமிழ் அறிஞரான டாக்டர் மு. வரதராசனுருடைய நூல்களை எல்லா மருமக்களும் முடிந்தவரையில் அவசியம் வாங்கிப் படித்து முன்னேற வேண்டும்என்பதே என் நெடுநாள் ஆசை. இவ்வாசையைநிறைவேற்ற மருமக்கள் முன்வருவார்களா?

—''தாமரைத்தீவான்''
காலி-எல

விடு கதை:
எங்கள் சித்திரங்கன் ஒரு கிணறு வெட்டினுன். குளிப்பதற்குப் போதும்; குடிப்பதற்குப் போதாது.

[illegible]

—சரவணனந்தன்
தெல்லிப்பழை

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 7.

பெயர்.....................................................

பாடசாலை.....................................................

விலாசம்.....................................................

.....................................................

.................................... ....................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

# வீரம் வளர நம்முள் ஒற்றுமை வேண்டும்

## தாழ்த்தப்பட்டோருக்கு சமத்துவம் வழங்கிய பின்னரே சுதந்திரத்தைப் பற்றிப் பேசுவது நியாயம்

### பருத்தித்துறை கட்டப் பொம்மன் விழாவில் பேச்சு

"நாம் சுதந்திரத்தைப் பற்றி பேசும்போது நாம் மற்றவர்களைச் சுதந்திர புருஷர்களாக வைத்து நடத்துகிறேமா என்பதை முதலில் ஆராய வேண்டும். தாழ்த்தப்பட்டிருக்கும் சமுதாயத்தை நம் நிலையுடன் ஒப்ப உயர்த்தி வைக்க வேண்டும். அப்பொழுதுதான் எம்மிடையே வீரம் ஏற்படும். அன்புள்ளவர்களிடத்துத்தான் வீரமும் உண்டு. தாய்மை வீரம் எல்லாரிடமும் வளர வேண்டும்."

ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த முதல் தமிழ் வீரனும், தமிழ் மன்னர்களுள் ஐரோப்பியருக்கு கப்பம் கட்ட மறுத்த வீரனுமான வீர பாண்டிய கட்டப் பொம்மன் நினைவு வீரவிழா அணிமையில் பருத்தித் துறை சித்தி விநாயகர் வித்தியாசாலையில், பருத்தித் துறை முன்னேற்ற இளம் வாலிபர்கள் நடத்திய போது மேற்படி விழாவில் திரு. எஸ். ஆழ்வாப்பிள்ளை பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

விழாவுக்குத் தலைமை வகித்த இந்துக்கல்லூரி அதிபர் திரு. த. இராமநாத பிள்ளை கூறியதாவது:

"தாய் நாட்டுக்காக உயிரை முதன் முதலாக இழந்த வீரன், கட்டப் பொம்மன். வீரம் என்ருல் என்ன என்பதை பிற்சந்ததியினருக்குக் காட்டி வைத்த மாவீரன் அவன். அந்த வீரனை இதுவரை காலமும் பெரியவர்கள் அறியாதிருந்தார்கள் இளைஞர்கள் அறிந்து விட்டதையிட்டு யான் பெருமைப்படுகின்றேன். இந் நாட்டு இளைஞர்கள் யாரைப்பற்றி அறிய வேண்டுமென்பதை நன்ருக அறிந்திருக்கிருர்கள்."

அடுத்து ஆசிரியர் திரு. வி. தம்பிப்பிள்ளை பேசுகையில், "வீரர்களின் வீர உணர்ச்சிகள் நமது அவல நிலைமைக்கு உதவக்கூடும் என்ருர்.

"உலகத்தில் வீரத்துக்கு ஒருவரையொருவர் சவால் விட்டுக்கொண்டிருக்கும் இக் காலத்தில் எம்மிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் வீரமற்றவர்களாய் இருக்கின்ருேம். ஒவ்வொருவரும் கட்டபொம்மனுக வராதுவிட்டால் நாம் அடிமைச் சாதியாக மாறிவிடுவோம். இன்று ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை நாம் வீணுக்கக்கூடாது" என்று பண்டிதர் திரு. வி. நடராசா தனது பேச்சில் குறிப்பிட்டார்.

தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. க. துரைரத்தினம் ஆசிரியர் பேசுகையில்;

"சுரண்டல் ஒழிய வேண்டும். ஒன்று பட்ட சோஷலிச ஆட்சி நிலவ வேண்டும். அதற்காகப் பொதுசன அபிப்பிராயம் மாற வேண்டும். 'நன்றும் தீதும் பிறர் தர வாரா'. ஆகவே நாம் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கும் நிலையை மாற்ற வேண்டும். இன்று புரட்சிகரமான திருப்பம் கட்டபொம்மன் விழாவுடன் துவங்க வேண்டும். ஸ்தாபனங்களிடையே நல்லவர்கள் வரக்கூடிய பொதுசன அபிப்பிராயம் வளர வேண்டும்" என்று கூறினர்.

விழாவில் செல்வி பத்மாவதி வேலுப்பிள்ளை, பண்டிதர் மூ. ஏரம்பமூர்த்தி ஆகியவர்களும் பேசினர்கள். செல்வன் கோ. சத்தியசீலராசா யாவர்க்கும் நன்றி கூற விழா இனிது நிறைவெய்தியது.

#### சாம்பற்றீவில் "பாண்டியன் பரிசு"

சாம்பற்றீவு தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் சென்ற 12-10-57-ல் பாண்டியன் பரிசு என்னும் நாடகம் மிகவும் விமரிசையாக அரங்கேற்றப்பட்டது. நாடக மேடையை சாம்பற்றீவு கி. ச. தலைவர் சி. மயில்வாகனம் ஜே. பி. திறந்துவைத்தார். நாடகக் குழுத் தலைவர் வ. நா. தம்பிராசா, கி. ச. தலைவருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சாம்பற்றீவுக்கிளைத் தலைவர் கு. நாராயணபிள்ளைக்கும் மற்றும் பலருக்கும் மலர்மாலை சூட்டி வரவேற்ருர்.

திருமலைப் பிரதிநிதி என். ஆர். இராஜவரோதயம் உட்பட பல பிரமுகர்கள் நாடகத்தைப் பார்த்து பாராட்டிஞர்கள்.

#### நீர்கொழும்பு இ. தி. மு. க.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் மறைவைக் குறித்து இ. தி. மு. க. நீர்கொழும்பு கிளையின் சார்பில் 13-10-57 ஞாயிறு அன்று நீர்கொழும்பு கணேசன் மைதானத்தில் ஓர் அநுதாபக் கூட்டம் நடைபெற்றது.

இ. தி. மு. க. துணை பொதுச் செயலாளர் இரா. அதிமணி கலைவாணர் என். எஸ். கே. படத்தை திறந்துவைத்தார். இ. தி. மு. க. துணை பொது செயலாளர் ஏ. இளஞ்செழியன், சோமசுந்தரம், திருநாவுக்கரசு, எஸ். கே. கணேசன், அ. பே. ப. ஏள்ளை ஆகியோர் பேசிய பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

#### கொழும்பில் இந்தி எதிர்ப்புக் கூட்டம்

மஜீத் மன்றத்தின் சார்பாக கடந்த 14-10-57-ல் மன்றப் பணிமனையில் தோழர் சரீப் தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது பல தோழர்கள் இந்தி மொழி தென்னுட்டின் மீது கட்டாயமாய் திணிப்பதை கண்டித்துப் பேசியதோடு டில்லி அரசாங்கத்தை எச்சரிக்கவும் செய்தனர்.

## கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்கு வேண்டும்

### பிறந்தஇடத்துக்கல்ல-புகுந்த இடத்துக்கே அவள் உரியவளாகிருள்

#### கலை விழாவில் கலாநிதி சதாசிவம்

"தமிழ்ப் பெண்கள் அடிமைகளாக வாழ்ந்தார்களென்று எந்தத் தமிழ் இலக்கியத்திலும் இல்லை. பெண்கள் பொதுவாக பிறந்த இடத்துக்கு பிரயோசனப்படவேண்டும் என்று எண்ணுவது தவறு. சந்தன மரம் தான் வளர்ந்த காட்டிற்கு என்ன பிரயோசனத்தைக் கொடுக்கின்றது? அதை வெட்டியெடுத்து எத்தனை மைல்களுக்கப்பால் கொண்டு சென்று அதைப் பூசி மகிழ்கின்றவர்களுக்கல்லவா ஆனந்தம். அவ்வண்ணமே பெண்களும் பிறந்தகத்துக்கு உரியவர்களல்ல. பெண்கள் தாங்கள் விரும்பிய மணுளனை வரிக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும். பெற்ருேர் அதற்கு உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்"

இவ்வாறு பு ைல்லா ை வ பரிசுத்தத் திருத்துவ கல்லூரி தமிழ் மன்றக் கலை விழா அணிமையில் நடைபெற்ற போது பேராதனை சர்வகலாசாலையைச்சேர்ந்த கலாநிதி சதாசிவம் பேசுகையில் கூறினர்.

விழாவுக்கு தலைமை தாங்கிய சேர் கந்தையா வைத்தியநாதன் பேசுகையில் கூறியதாவது:-

மெய்ப்பொருள் காண்பது தான் அறிவு. நம் தமிழ் இனத்தின் இலட்சியம் என்று ஒன்று இருக்குமாஞல் அது மெய்ப்பொருளை அறிந்து ஆராய்வதாகத்தான் இருக்க வேண்டும். மகாவலிகங்கை மலைநாட்டிலேதான் ஊற்றெடுக்கின்றது. ஆனுல் அது திருகோணமலையில் போய்த்தான் சங்கமமாகிறது. அதேமாதிரிதான் களனி [illegible] மாணிக்க கங்கை [illegible] நதிகளும்.

"தமிழர்மெய்ப்பொருளைச் சிந்திக்க வேண்டும். தமிழ் தப்பிப் பிழைக்க வேண்டுமாஞல் தமிழன் அடிப்படை உண்மையை உணர வேண்டும். தியாகம் வேண்டும். அடிப்படை உண்மை இருந்தால் தமிழ் ஒரு காலமும் அழியாது."

செல்வன் இராமையாவும் செல்வி பார்வதியும் பேசிஞர்கள் அதன் பின் மன்றத் தலைவர் திரு. கு. இராசையா வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றுப் பேசிஞர்.

வீரகேசரி ஆசிரியர் திரு. கே. பி. ஹரன், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி அதிபர் திரு சபா ஆனந்தர், கல்லூரி அதிபர் திரு. வி. பி. அட்டபத்து முதலியோரும் பேசினர்.

மன்றச் செயலாளர் திரு. [illegible] புரை கூறினர்.

#### வல்வெட்டி கி. மு. சங்கம்

வல்வெட்டி கிராம முன்னேற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற 17-10-57-ல் வடமராட்சி கிராம முன்னேற்ற சமாஜத்தலைவர் திரு வி. கே. சின்னையா தலைமையில் வல்வெட்டி அ. மி. பாடசாலையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ஆ. கதிர்காமத்தம்பி, உபதலைவர்: திரு. கே. சங்கரப்பிள்ளை, காரியதரிசி: திரு ஆ. சுப்பிரமணியம், உப காரியதரிசி: திரு கே. சின்னத்தம்பி, தனுதிகாரி: திரு க. முருகுப்பிள்ளை, நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: த. சுந்தரம், செ. சோமசுந்தரம், எஸ். சோமசுந்தரம், க. குட்டித்தம்பி, செ. தாமோதரம்பிள்ளை, து. செல்வவிஞயகம்.

#### உடுவிலில் புதிய சனசமூக நிலையம்

உடுவிலில் புதிய சனசமூக நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான பொதுக் கூட்டம் ஒன்று அணிமையில் திரு. கே. முத்தையா தலைமையில் நடைபெற்றது. சனசமூக நிலைய தலைவராக திரு. எஸ். கே. நவரத்தினமும், உபதலைவராக ஜே. மனோகரனும், காரியதரிசியாக திரு. கே. சுந்தரலிங்கமும், உபகாரியதரிசியாக திரு. ஆர். தவநாதனும் தனுதிகாரியாக திரு. கே. திருநாவுக்கரசுவும், சனசமூக நிலையப் பொறுப்பாளராக திரு. எஸ். கணேசலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.


நோத் சிலோன் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்,

மோட்டார் வாகனங்கள் வேண்டுமா?
இரும்புக் கட்டிடச் சாமான் வேண்டுமா?
மின்சார மோட்டார் உபகறுப்புக்கள் வேண்டுமா?

வேறென்ன வேண்டும்?

North Ceylon Trading Co. Ltd.
11/3, Stanly Road, JAFFNA.

போன்: 578. தந்தி: "யாழ்றேட்ஸ்"



ஹென்றி ஸ்குயர் பூட்டுகள்


1780 ஆண்டு முதல் பலத்திற்கும், திறமைக்கும் பாவனைக்கும் புகழ் பெற்றுள்ளது.

கிடைக்குமிடம்:-

H. W. கேவ் & கோ., லிமிட்.

கார்கில்ஸ் லிமிட்.

மற்றும் புகழ் பெற்ற ஸ்தாபனங்களிலும் கிடைக்கும்.




சோல் ஏஜண்டுகள்:

குர்பான் ஹுசைன் & பிரதர்ஸ்,

279, வாக்ஸால் வீதி, கொழும்பு-2.
த. பெ. இல.: 1087. போன்: 7785.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இப்பொழுது ஏககாலத்தில் 4 திரைகளில் காட்சியளிக்கின்றது!



**கிங்ஸ்லி** (கொழும்பு)

**பிளாஸா** (வெள்ளவத்தை)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு)

ஆகிய திரைகளில்!



பத்மினி, ராகினி, ஆகா, அன்வர், குமார், ஹெலன், லீலா


முதலியோர் நடித்த

## ஸ்வஸ்திக் சித்ராவின்

# மகுடம் காத்த மங்கை

கண்ணைக் கவரும் கேவா கலர் நடனங்கள்

சங்கீதம்:
ஓ. பி. நாயர்.




இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இலக்கத்தில் [illegible] அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 நவம்பர் மாதம் 3-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org